இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 76 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 28, வெள்ளிக்கிழமை 10.02.2017

## சுமந்திரன் எம்.பியின் பாதுகாப்புக்கு சிறப்புக் கவனம்

*சபாநாயகர் அறிவுறுத்தல்*

யாழ்ப்பாணம், பெப். 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனின் பாதுகாப்புத் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்துமாறு பாதுகாப்புத் துறையினருக்கு >> 24

விக்கியின் கோரிக்கையை நிராகரித்து

## குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு பெப். 23இல் சிறப்பு அமர்வு

யாழ்ப்பாணம், பெப். 10
குடிதண்ணீர் விவகாரம் நீதிமன்றில் இருப்பதனால் அதற்காக சிறப்பு அமர்வு நடத்தத் தேவையில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, எதிர்வரும் 23 ஆம் திகதி சிறப்பு அமர்வு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் அமர்வு >> 24

# 13ஐத் தாண்டி தீர்வு நகராது

## மகிந்த அணிக்கு உறுதியளித்தார் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு, பெப்ரவரி 10
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும். அதற்கு அப்பால் செல்லமாட்டோம். புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும்.
இவ்வாறு சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.



மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச, புதிய அரசமைப்பு தொடர்பில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் >> 24

## குடாநாட்டில் சில காணிகள் விரைவில் விடுவிக்கப்படுமாம்

யாழ்ப்பாணம், பெப். 10
நாவற்குழி, காங்கேசன்துறைப் பிரதேசங்களில் ஒரு தொகுதி காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் ஆர்.ராஜபக்ச, பலாலியில் வைத்து நேற்றுத் தெரிவித்தார். >> 04

திவிநெகும ஊடாகப் பறித்த

## மாகாண அதிகாரங்களை மீள ஒப்படைக்கவேண்டும்

*ஜயம்பதி எம்.பி. சபையில் வலியுறுத்தல்*

கொழும்பு, பெப். 10
மகிந்த ஆட்சியின்போது வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டத்தின் ஊடாகப் பறிக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளிடமே மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாழ்வின் எழுச்சி (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 23

பல்கலை. மாணவர் கொலை;

## பொலிஸ் திணைக்களம் நடத்திய ஒழுக்காற்று விசாரணை நிறுத்தம்

நீதிமன்றுக்கு அறிவித்தனர் சி.ஐ.டியினர்

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கில், சாட்சிகளுடன் பொலிஸார் தலையிடுவதாகக் கூறப்பட்டதனையடுத்து, >> 04



சமிக்ஞையைக் கவனிக்காததால் விபரீதம்

## தொடருந்துடன் மோதுண்டு இராணுவ ஜீப் கோர விபத்து

*2 சிப்பாய்கள் சாவு;*
*அரியாலையில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணித்த தொடருந்துடன் இராணுவ ஜீப் வாகனம் மோதி அரியாலையில் >> 24

காணாமற்போனோர் விவகாரம்

## அலரிமாளிகைக் கூட்டத்திலிருந்து கூட்டமைப்பினர் வெளியேற்றம்

கொழும்பு, பெப். 10
நாங்கள் அரசுடன் தனித்துப் பேச வேண்டும். எங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது நம்பிக்கையில்லை. இவ்வாறு காணாமற்போனோரின் உறவுகளின் பிரதிநிதிகளாக, அலரிமாளிகைக்கு நேற்றுச் சென்றவர்கள் தெரிவித்தனர். >> 24

## காணாமற்போனோர் பிரச்சினையில் சிலர் அரசியல் நலன் தேடுகிறார்கள்

*கூட்டமைப்புச் சாடல்*

கொழும்பு, பெப். 10
ஒரு சிலரின் அரசியல் சுய தேவைகளையும் அரசியல் நலன்களையும் நிறைவு செய்வதற்கு அரசுடனான சந்திப்பை, காணாமற்போனோரின் சங்கப் >> 24

## அரசுடனான பேச்சில் நம்பிக்கை இல்லை

*காணாமற்போனோரின் உறவுகள் குற்றச்சாட்டு*

கொழும்பு, பெப். 10
அரசுடனான பேச்சில் நம்பிக்கையில்லை என்று காணாமற்போனோரின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற்போனோரின் >> 04



## காணிகளை விடுவித்தால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடுவோம்

புதுக்குடியிருப்பு மக்கள் உறுதி

முல்லைத்தீவு, பெப். 10
யார் என்ன வாக்குறுதி தந்தாலும், காணிகள் எப்பொழுது விடுவிக்கப்படுகின்றனவோ அன்று தான் எமது போராட்டத்தை நிறுத்துவோம். அதுவரை எமது போராட்டம் தொடரும். >> 04

## ஸ்ரீதர் தியேட்டருக்கு மின் கட்டணமாக ரூ. 85 லட்சம் செலுத்தவேண்டும் ஈபிடிபி

கொழும்பு, பெப். 10
ஈ.பி.டி.பியினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஸ்ரீதர் தியேட்டருக்கான மின்கட்டண நிலுவை 85 லட்சம் ரூபா இதுவரை செலுத்தப்படவில்லை. இருப்பினும் கட்டடத்துக்கான மின் இணைப்பும் துண்டிக்கப்படவில்லை. சந்திரிகா - மகிந்த ஆட்சிக் காலப்பகுதிக்குரிய நிலுவைக் கொடுப்பனவே >> 24

## நிர்ணயித்த விலையில்தான் அரிசி விற்பனை செய்ய முடியும்

*பாவனையாளர் அதிகார சபை அறிவுறுத்தல்*

யாழ்ப்பாணம், பெப். 10
கொழும்பு அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு யாழ்ப்பாணத்தில் அரிசி விற்பனை செய்யப்பட வேண்டும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட இணைப் பதிகாரி த.வசந்தசேகரன் >> 04

## 10ஆவது நாளாகவும் தொடர்கிறது போராட்டம்

### சிங்கள மக்கள் சிலரும் நேற்றைய தினம் பங்கெடுப்பு

முல்லைத்தீவு, பெப். 10
வான் படையினர் கையகப்படுத்தியுள்ள பொதுமக்களின் 42 ஏக்கர் காணியை விடுவிக்குமாறுகோரி முல்லைத்தீவு பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் பெரும் >> 04

## மக்களின் போராட்டக் களத்துக்கு மாகாண சபையினர் வரவேண்டும்

*சபையில் வலியுறுத்தினார் து.ரவிகரன்*

யாழ்ப்பாணம், பெப். 10
முல்லைத்தீவு,கேப்பாபிலவு பிலக்குடியிருப்பில் மக்களின் போராட்டக் களத்துக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரையும் வருமாறு வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தினார்.
கேப்பாபிலவு மக்களின் போராட்டத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைசாய்க்க வேண்டும் என்ற அவசர >> 24

உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

ரூ.1000 அல்லது அதற்கு மேல் சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும்
6.50% (வ.வி.வீ. 6.70%) முதல் 9.00% (வ.வி.வீ. 9.38%) வரை
அதிகபட்ச வட்டி

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
நிபந்தனைகள் உண்டு.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# மக்களின் வயல்களை ஊடறுத்து பாதை அமைத்தது வான் படை

முல்லைத்தீவு, பெப். 10

விவசாய வயல் நிலங்களில் மண் நிரப்பி தங்கள் விருந்தினர் விடுதிக்கு பாதை அமைத்துள்ளனர் வான் படையினர்.

முல்லைத்தீவு, பிலக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள வன்னிப் பிராந்திய வான் படைத் தலைமைக் காரியாலயத்தின் ஆளுகையில் நந்திக்கடல் கரையோரத்தில் விருந்தினர் விடுதி ஒன்றை அவர்கள் அமைத்துள்ளார்கள். இதற்குச் செல்வதற்கு மக்களின் விவசாய வயல் நிலங்களில் மண்ணைப் போட்டு நிரவி பாதை அமைத்துள்ளனர். (வ-7)

# பணத்தை வாங்க வழியில்லாததால் போராட்டத்தை நடத்தத் தீர்மானம்

## யாழ். பாரவூர்தி சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தால் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் இ. ஜெயக்குமார் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி கூட்டுறவுச்சங்கத்துக்கு மகேஸ்வரி பவுண்டேசன் நிறுவனத்தினால் 2 கோடி ரூபா பணம் வழங்கவேண்டியுள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற சங்கப் பொதுக்கூட்டத்தில் பணம் தரப்படும் என பவுண்டேசன் நிறுவனத்தால் உறுதியளிக்கப்பட்டது. அதில் முதற்கட்டமாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் தரப்பட்டது. அதன் பின் எந்தவிதமான பதிலுமோ அல்லது பணமோ எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

இது தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. லஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் விசாரணை செய்து கடந்த 10 மாதங்கள் ஆகியும் இன்று வரை எமக்குச் சரியான தீர்வு கிடைக்கவில்லை.

இதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, எதிர்வரும் திங்கட்கிழமை லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பாக கடிதம் அனுப்புவதாக முடிவுசெய்துள்ளோம். அந்தக் கடிதத்துக்கு சரியான பதில் எமக்கு கிடைக்கப்பெறவில்லையாயின், யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி கூட்டுறவு சங்கத்தால் போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (வ-10)

# ஆளும் - எதிரணி இடையே நேற்று கருத்து மோதல்

## 10 நிமிடங்கள் சபை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 10

நிதி அமைச்சின் கட்டளைச் சட்டங்கள் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிக்கும் விடயத்தில் ஆளும் - எதிரணி உறுப்பினர்களுக்கு இடையே கருத்து மோதல் ஏற்பட்டதால் சபை நடவடிக்கைகள் நேற்று 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல் ஆகியன முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி சர்ச்சையைக் கிளப்பினார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன.

'நாடாளுமன்றத்தில் நேற்று (நேற்று முன்தினம்) சபையின் ஒப்புதலுக்காக காணி, நிதி அமைச்சின் கட்டளைகள் உள்ளிட்ட நான்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. குழுநிலையின்போது காணி தொடர்பான ஏற்பாட்டுக்கு மாத்திரமே அங்கீகாரம் பெறப்பட்டு அது தொடர்பில் அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் சபை ஒத்திவைக்கப்பட்டது.

நிதி அமைச்சின் கட்டளைச் சட்டங்களின் கீழான பிரேரணைகளுக்கு சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. உரிய முன்னறிவித்தல் எதுவும் இன்றி நேற்றைய (நேற்று முன்தினம்) நிகழ்ச்சி நிரலுக்குரிய விடயங்கள் இன்றைய (நேற்றைய) ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது குறித்து விளக்கம் அவசியம் என்பதால் சபை அமர்வை தற்காலிகமாக ஒத்திவைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்' என்றார் தினேஸ்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, சபாபீடத்தில் இருந்த அதிகாரிகள் இந்த விடயத்தை நினைவுபடுத்தியிருக்க வேண்டும். எது எப்படியோ நேற்றைய தினத்துக்குரிய (நேற்றுமுன்தினம்) விடயதானங்களுக்கு இன்று (நேற்று) சபையின் ஒப்புதலைப் பெறுவது தவறான விடயமல்ல. இதற்கு முன்னரும் இப்படி பல சம்பவங்கள் நடந்துள்ளன' என்றார்.

சபாநாயகர், இந்த விடயம் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. தவறொன்று இடம்பெற்றுள்ளதை ஏற்கின்றோம். இதற்கு முன்னரும் இப்படி நடந்துள்ளன. அங்கீகாரம் பெறுவதில் தவறில்லை' என்று சுட்டிக்காட்டினார்.

எனினும், மகிந்த அணி உறுப்பினர்களான தினேஸ் குணவர்தன, பந்துல குணவர்தன, விமல் வீரவன்ஸ, டலஸ் அழகப்பெரும ஆகியோர் எதிர்ப்பை வெளியிட்டனர். நாடாளுமன்றத்துக்கு இது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும். நேற்றைய விடயதானத்தை இன்று நிறைவேற்றுவது ஏற்புடையதல்ல. கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவொன்றை எடுப்போம்' என்றனர்.

இதற்கிடையில் விமலுக்கும், அமைச்சர் அகில விராஜ்காரியவசத்துக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் இரட்டை அர்த்த வசனங்களைப் பிரயோகித்துக் கொண்டனர். மகிந்த அணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலிப்பதற்காக முற்பகல் 10.45 மணியளவில் சபை நடவடிக்கைகள் சபாநாயகரால் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11 மணியளவில் கூடியது. பிரேரணையை அங்கீகரிக்கலாம் என்ற தீர்ப்பை சபாநாயகர் அறிவித்தார். இதன்படி நிதி அமைச்சின் கட்டளைச் சட்டத்தின் கீழான 3 கட்டளைகளும் நிறைவேற்றப்பட்டன. (வ-5)

# போராட்டம் நடத்திய ஆசிரியர்களிடம் ஒழுக்கம் அறவே இருக்கவில்லை

## வடக்கு மாகாண சபையில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார தொழிலாளர்களுக்கு இருக்கின்ற ஒழுக்கம் அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களிடம் இருக்கவில்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 10ஆம் திகதி சில பாடசாலை ஆசிரியர்கள் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் காரியாலயத்தை முற்றுகையிட்டனர். கல்விச் செயலாளரை நெஞ்சில் தள்ளியும் அவர்கள் அட்டகாசம் புரிந்ததுடன் அவரை காரியாலயத்திலிருந்து வெளியேற விடாது வாயிற்கதவை மூடியிருந்தனர்.

மாணவர்களுக்கு கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்கள் சிலர் அடாவடிதனம் புரிந்து காடையர்கள் போல் செயற்பட்டுள்ளனர். இது ஆசிரியர் சமூகத்துக்கே ஓர் இழிவைத்தரும் செயற்பாடாகும். இது தொடர்பில் கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் எனது பிரேரணையை சமர்ப்பிக்கின்றேன் என தவராசா தனது பிரேரணையை முன்மொழிந்தார். (வ-8)

# மத்திய வங்கி குறித்து இனி விவாதம் நடத்த முடியாது

## மகிந்த அணியின் கோரிக்கை அரசால் நிராகரிப்பு

மத்திய வங்கியுடன் தொடர்புடைய சர்ச்சைக்குரிய விடயங்கள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் அவசியம் எனக் கோரி மகிந்த அணியினரால் முன்வைக்கப்பட்ட யோசனை நிராகரிக்கப்பட்டது. நாடாளுமன்றில் நிதி அமைச்சுக்குரிய அறிவிப்பொன்றை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுத்தார்.

'நிதிச்சபையில் பேசப்பட்ட சில விடயங்கள் ஊடகங்களுக்குக் கசியவிடப்பட்டுள்ளன. இதற்கு முன்னரும் தகவல்கள் வெளியில் கசியவிடப்பட்டுள்ளன. இது குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சபநாயகர், இந்தவிடயத்தை மத்தியவங்கி ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக அறிவித்தார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, மத்திய வங்கியில் ஏற்பட்டுள்ள இது போன்ற சர்ச்சைக்குரிய விடயங்கள் சம்பந்தமாகவும், நிலவரங்கள் பற்றியும் இரண்டு நாள்கள் விவாதம் நடத்தப்பட வேண்டும்' – என்றார். இதன் போது குறுக்கீடு செய்த சபை முதல்வர், இதற்கு விவாதம் தேவை இல்லை. அனுமதிக்க முடியாது. கோப் குழு அறிக்கை பற்றி முழு நாள் விவாதம் நடத்தப்பட்டுள்ளது. அதன்போது பல விடயங்கள் பேசப்பட்டன. தேவையேற்படின் இன்னும் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் கோரிக்கை விடுக்கலாம்' - என்றார். (வ-5)

# அலவாங்கால் தாக்கப்பட்ட இளம் குடும்பத்தலைவர் சாவு

## கொலைக் குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 10

தனிப்பட்ட தகராறு காரணமாக அலவாங்கால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த இளம் குடும்பத் தலைவர் 8 நாள்களின் பின் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் அதிகாலை சாவடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தலைவர் மீது தாக்குதல் நடத்திய நபர், கடந்த ஒன்பது நாட்களாக தலைமறைவாகியிருந்தார். கொலைக் குற்றச்சாட்டில் அவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டார் என்று தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

தருமபுரம் கல்லாறுப் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் அகிலன் (வயது 28) என்பவரே இவ்வாறு சாவடைந்தார்.

கல்லாறுப் பகுதியில் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இருவருக்கிடையில் கடந்த 30ஆம் திகதி தகறாறு ஏற்பட்டது. அது கைகலப்பாக மாறியதிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இதன் போது அலவாங்கால் தாக்கப்பட்ட நிலையில் குடும்பத் தலைவர் படுகாயமடைந்தார். கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

தாக்குதல் நடத்திய நபர் சம்பவத்தை அடுத்து தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையில் காயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் சாவடைந்தார்.

சந்தேக நபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார். மருதங்கேணிப் பகுதியில் வைத்து அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் இன்று நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (வ-21,6,101)

# சுமந்திரன் கொலை முயற்சி வழக்கை விமர்சிக்கலாமா?

## முதல்வர் விக்கியிடம் கேட்டார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா

குடிதண்ணீர்ப் பிரச்சினை நீதிமன்றில் இருக்கும் போது பேசக் கூடாது என்று தெரிவிக்கும் முதலமைச்சர், கிளிநொச்சி நீதிமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொலை முயற்சி வழக்கு இருக்கும் போது, அது தொடர்பில் விமர்சனங்களை முன்வைக்க முடியுமா?

இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்பு அமர்வைக் கோரும் விடயம் தொடர்பில் விவாதம் நடைபெற்ற போதே எதிர்கட்சித் தலைவர் மேற்படி வினாவைத் தொடுத்தார்.

சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பான வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில் மாகாண சபையில் இது தொடர்பில் ஆராய முடியாது என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

இதன் போது எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, கிளிநொச்சி நீதிவான் மன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொலை முயற்சி தொடர்பான வழக்கு நிலுவையில் இருக்கும்போது அது தொடர்பில் நீங்கள் எப்படி விமர்சிக்கலாம் என்று கேள்வி எழுப்பினார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. கஞ்சா போன்ற போதைப் பொருள் வைத்திருந்தமைக்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விளக்கமளித்தார். (வ-5-8)

சைட்டம் கல்லூரி விடயத்தில்

# மருத்துவச் சபை வழங்கும் ஆலோசனையைக் கேளுங்கள்

கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, பெப். 10
மருத்துவக் கல்வியை வழங்கும் நிறுவனங்களின் தரத்தைப் பரிசோதிக்கும் அனைத்து அதிகாரங்களும் இலங்கை மருத்துவச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்களைக் கொண்டு இலங்கை மருத்துவச் சபை வழங்கும் ஆலோசனைகளுக்கு அமைவாக அந்த மருத்துவக் கல்லூரியை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்ற முடிவைச் சுகாதார அமைச்சரே எடுக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அயலுறவு அமைச்சரும், பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான ஜி.எல்.பீரிஸ்.

பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் தொடர்பான பிரச்சினைக்கான தீர்வு நாடாளுமன்றத்தின் ஊடாகவே பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலிருந்து அரசு ஒருபோதும் விலகிச் செயற்பட முடியாது. பிரச்சினைக்கான தீர்வை நீதிமன்றத்தால் மட்டும் வழங்கிவிட முடியாது. நீதிமன்றம் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டே தீர்ப்புக்களை வழங்கும். ஆனால் சைட்டம் நிறுவனம் தொடர்பான இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே வழங்க வேண்டும். அவ்வகையான தீர்வை நாடாளுமன்றத்தின் ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த விடயம் தொடர்பிலான சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உடனடியாகச் சைட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வை அரசு பெற்றுக்கொடுக்க வழி சமைக்கவேண்டும். இதற்கான ஆலோசனைகளை இலங்கை மருத்துவச் சபையிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம்.

பட்டப்படிப்பு பட்டங்களை வழங்குவது பல்கலைக்கழகத்தின் பொறுப்பிலுள்ள விடயமாகும். ஆனால் அந்தப் பட்டப்படிப்பை கொண்டு மருத்துவத்துறை போன்ற தொழிற்றுறையில் ஈடுபடுவதற்கான அனுமதியை அந்தத் துறையின் சிறப்புத் தன்மை பொருந்திய மருத்துவச் சபை ஊடாகவே வழங்கவேண்டும்.

மருத்துவத்துறை தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு புதிய அறிவு இருக்கலாம். ஆனால் அந்த அறிவையும் அவரது அனுபவத்தையும் கொண்டு தனித் தீர்மானமொன்றை எடுக்க முடியாது. அவர் அமைச்சரென்ற வகையில் மருத்துவத்துறை தொடர்பிலான நிபுணத்துவம் பெற்ற மருத்துவச் சபையின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது சுகாதார அமைச்சரின் கடமையாகும்-என்றார். (து)

டெனீஸ்வரனுக்கு ஆதரவாகப் போராட்டம்

# தனியார் பேருந்துச் சேவை நேற்று வடக்கில் முடங்கியது

யாழ்ப்பாணம், பெப்.10
தனியார் பேருந்துத் தரப்பினரால் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தனியார் பேருந்துச் சேவைகள் வட பிராந்தியத்தில் முற்றாக முடங்கின.




அண்மையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பணியாளர்களால் நடத்தப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் உருவப் பொம்மை எளிக்கப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டமையைக் கண்டித்தே நேற்றுதனியார் போக்குவரத்துத் துறையினர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தையும், கண்டனப் பேரணியையும் நடத்தினர்.




வட பிராந்தியத்தில் தனியார் பேருந்துச் சேவைகள் முற்றாக நடைபெறவில்லை. உள்ளூர், வெளி மாவட்டங்களுக்கான அனைத்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டன.

*வவுனியா*
வவுனியாவில் தனியார் பேருந்துத் துறையினர் நடத்திய பணிப்புறக்கணிப்பால் அங்கு அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. அலுவலகங்கள், பாடசாலைகளுக்குச் செல்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எதிர்ப்புப் பேரணியில் இணைந்து கொள்வதற்காக வவுனியாவிலிருந்து தனியார் பேருந்துகள் அனைத்தும் யாழ்ப்பாணம் சென்றன.

*முல்லைத்தீவு*
முல்லைத்தீவிலும் தனியார் பேருந்துத் துறையினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தனியார் பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை.

"மாவட்ட மக்களின் போக்குவரத்துக்கு நேற்று இ.போ.ச. பேருந்துகள் அனைத்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உள்ளூர், வெளிமாவட்ட சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன - என்று முல்லைத்தீவு மாவட்ட இ.போ.ச. சாலை முகாமையாளர் மனோராசா தெரிவித்தார்.

*யாழ்ப்பாணம்*
யாழ்ப்பாணத்திலும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை. யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

யாழ்.நகரில் இருந்து கைதடியில் உள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் வரை நடைபவனியாக அவர்கள் சென்றனர். பேருந்துகளும் பேரணியாகச் சென்றன.

"வடக்கு மாகாணத்தில் 200 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மக்கள் பாவனைக்கு விட வேண்டும். 60 வீதம் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் 40 வீதம் இ.போ.சவுக்கும் என்ற வீதத்தில் பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

தனியார் துறைக்கும், அரச துறைக்கும் தனித்தனியான பேருந்து நிலையங்களை இயக்கக் கூடாது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் உருவப் பொம்மைகளை எரித்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"- என்று கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளித்தனர். முதலமைச்சர் கிழக்கு மாகாணம் சென்றுள்ள நிலையில், அந்த மனுவை முதலமைச்சரின் செயலாளர் பெற்றுக்கொண்டார்.

"மனு முதலமைச்சரிடம் கையளிக்கப்படும். தனியார் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் 10 பேர் முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படும். முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பார்" என்று முதலமைச்சரின் செயலாளர் அதன்போது குறிப்பிட்டார்.

*அசௌகரியம்*
தனியார் பேருந்துத் தரப்பினர் முன்னெடுத்த போராட்டத்தால் பொதுமக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்தனர். நீண்ட நேரம் பேருந்துக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது என்று பயணிகள் தெரிவித்தனர். மாணவர்கள், அலுவலகங்கள், வைத்தியசாலைகளுக்குச் செல்வோர் உரிய நேரத்தில் தாம் செல்ல முடியாதிருந்தது என்றும் தெரிவித்தனர். (ற-7,8,106)




# சபாநாயகரின் அக்கிராசனம் நேற்றுச் சரிந்து விழுந்தது

நாட்டுக்குக் கெட்ட சகுனம் என்கிறது மகிந்த அணி

கொழும்பு, பெப். 10
நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் அக் கிராசனம் நேற்றுச் சரிந்து கீழே விழுந்தது. இது நாட்டுக்கு நல்ல சகுனம் இல்லை என்று மகிந்த அணி சுட்டிக்காட்டியது. >> 24

# படை முகாம்களை இடமாற்றிவிட்டு மக்களின் காணிகள் விடுவிக்கப்படும்

ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10
புதுக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள மக்களின் பிரதிநிதிகளுக்கும், கொழும்பு அரசின் தலைமை அமைச்சருக்கும் இடையே அலரிமாளிகையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இராணுவ முகாம்களை இடமாற்றி காணிகளை விடுவிப்பதாகத் தலைமை அமைச்சர் தெரி >> 04

# தென்மராட்சியில் நெல் அறுவடை ஆரம்பம்

சாவகச்சேரி.பெப்.10
தென்மராட்சியில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளது. தனங்களப்பு, மறவன்புலவு, தச்சன்தோப்பு உட்பட மட்டுவில், மந்துவில், சரசாலை ஆகிய பகுதிகளிலும் காலபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல் அறுவடை இயந்திரங்களைத் தற்பொழுது உடனடியாக நெற்பயிர் விளைச்சல் கண்ட வயற்பகுதிக்குக் கொண்டு செல்ல முடியாதுள்ளது. முன் வயல் பகுதிகளில் விளைச்சலுக்கான காலம் மேலும் தேவைப்படுவதால் அவற்றை அறுவடை செய்ய முடியாது. உட்பகுதி வயல்களில் விளைச்சல் அறுவடைக்கு தயாரானவர்கள் அருவி வெட்டும் தொழிலாளர்கள் மூலம் அறுவடையை மேற்கொண்டுள்ளனர். (ற-131)

# இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் முகாமைத்துவ அலுவலகம் திறப்பு

கிளிநொச்சி, பெப்.10
கிளிநொச்சி, இரணைமடு நீர்ப்பாசனத்திட்ட முகாமைத்துவ அலுவலகம் கோவிந்தன் கடைச் சந்தியில் நேற்றுத் திறக்கப்பட்டது.

இரணைமடு விவசாயிகளை வலுப்படுத்தும் நோக்கில் 'இபாட்' திட்டத்தின் கீழ் 12.7 மில்லியன் ரூபா செலவில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டது.

இரணைமடுத் திட்டப் பணிப்பாளரும், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளருமான என்.சுதாகரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. வடக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் இணைந்து அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், திணைக்களங்களின் அதிகாரிகள், விவசாயிக்ள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)



# நீர் விநியோகத்தை உரியவாறு பயன்படுத்துக

இருபாலை கிழக்கு மக்களிடம் பிரதேச சபை செயலாளர் வேண்டுகோள்

பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் தண்ணீரை அருந்துவதற்கு மட்டுமே உபயோகியுங்கள். திட்டத்தை சரியான முறையில் பயன்படுத்தி, திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன் தெரிவித்தார்.

இருபாலை கிழக்குப் பொதுமக்களுக்கும் செயலருக்கும் இடையே நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆரம்பகாலங்களில் குடி தண்ணீர் பவுஸர் மூலமாகவே வழங்கினோம். பவுஸர் மூலமான குடிதண்ணீர் வழங்கலில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு சபையினரும் பொதுமக்களும் முகம்கொடுக்க நேர்ந்தது. இப்போது மாகாண விசேட நன்கொடைத்திட்டத்தின் மூலமாக 8 மில்லியன் ரூபா செலவில் தண்ணீர்த் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

உத்தியோக பூர்வமாக திறக்கப்பட்ட பின்னர் குடி தண்ணீருக்கு ஒரு சீரான கட்டண அறவீடு அறிமுகப்படுத்தபடும் - என்றார். (ற-8)

## கொடிகாமம் வணிகர் கழகத்தின் கட்டடத் திறப்பு விழா இன்று

சாவகச்சேரி, பெப்.10

கொடிகாமம் வணிகர் கழகத்தின் புதிய கட்டடத் தொகுதி இன்றுவெள்ளிக்கிழமைகாலை 10 மணிக்கு சம்பிரதாயபூர்வாகத் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வணிகர் கழகத்தின் தலைவர் ம.சின்னத்துரை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் புதிய கட்டத தொகுதியை கொடிகாமம் வர்த்தக சங்க நிறுவுனர் அ.நமசிவாயம் சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டித் திறந்துவைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

புதியகட்டம் 20 இலட்சம்ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்டதாக வணிகர் கழகத் தின் பிரதிநிதி தெரிவித்தார். (வ-131)

## யாழ். — கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்து குறித்து பயணிகள் குற்றச்சாட்டு

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணத்துக்குப் பயணிகளை ஏற்றிய பேருந்து வழித்தட அனுமதிப்பத்திரம் இன்றி பொலிஸாரைக் கண்டுமிக மோசமாக பேருந்தைச் செலுத்தி பயணிகளை அலைக்கழித்துள்ளதாகப்பயணிகள் குற்றஞ்சாட்டினர். குறித்த பேருந்து குளிரூட்டப்பட்டதாகக் கூறி ஆயிரத்து 300 ரூபா ஒவ்வொரு பயணியிடமும் பெறப்பட்டபோதும், மண்ணெண்ணெய்மணமேமூக்கைக்குடைந்து சுவாசிக்க முடியாத நிலையும் காணப்பட்டதாகப் பயணிகள் தெரிவித் தனர்.

பேருந்தில் பயணிப்பதற்காக முற்பதிவு முகவர்கள் 7.30 மணிக்குப் பேருந்து புறப்படும் என்று சிலருக்கு அறிவித்தனர். வேறு சில பயணிகளுக்கு 8.30 மணிக்குப் பேருந்து புறப்படும் என்றும் அந்த நேரத்துக்கு குறிக்கப்பட்ட இடங்களில்நிற்குமாறு கூறியுள்ளனர். ஆனால் நேற்றிரவு 10.15 மணிக்குப் பின்னர் தான் பயணிகளை ஏற்றப் புறப்பட்டுள்ளனர். அதுவும் பேருந்து மெல்ல மெல்ல ஊர்ந்துதான் பயணித்தது. அங்குள்ள சிறு வீதிகளுக்கூடாக பேருந்து நுழைந்து பயணித்துக் கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் பொலிஸார் குறித்த பேருந்தைப் பரிசோதிக்க முற்பட்டனர். அதன்போதே குறித்த பேருந்தின் சாரதி மிக மோசமாகச் சாரத்தியம் செய்தார். பயணிகள் பயங்கரமான நிலையை உணரும் அளவுக்கு அவர் மிகமோசமாக சாரத்தியம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (வ-4)

### குடாநாட்டில்...

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட உதவி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், பருத்தித்துறைப் பிரதேச செயலர்கள், மாவட்ட நில அளவையாளர், யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க, மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலர் மற்றும் காணி அமைச்சின் மேலதிக செயலர் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடல் பலாலி இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

காங்கேசன்துறை சந்திக்கு மேற்குப் பக்கமாக பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணியை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குரிய காணி முழுமையாக விடுவிக்கப்படும். இந்தப் பகுதியில் அமைந்துள்ள முகாம்களை இடமாற்றுவதற்கு ஒரு மாதம் வரையில் தேவை. முகாம்களை இடமாற்றியதும் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படும்.

நாவற்குழியில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள 5 ஏக்கர் காணியை, சிறுவர் மருத்துவமனை அமைப்பதற்காக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் தெரிவித்தார். (வ-5)

### நிர்ணயித்த...

அறிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: சம்பா வகை அரிசி 80 ரூபாவுக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்குள் கீரிச் சம்பா மற்றும் சீரகச் சம்பா ஆகிய வகைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. நாடு 72 ரூபாவுக்கும், பச்சை அரிசி 70 ரூபாவுக்கும் நிர்ணயிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இந்த விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்யவேண்டும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தால் பணிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள அரிசி வியாபாரிகளும் இந்த நிர்ணய விலைகளிலேயே அரிசி வகைகளை விற்பனை செய்ய வேண்டும் - என்றார். (வ-10)

### பொலிஸ்...

பொலிஸார் மீதான ஒழுக்காற்று விசாரணையை பொலிஸ் திணைக்களம் நிறுத்தி விட்டது.

இவ்வாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு அறிவித்தனர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர். கொலைக்குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 பேரினதும் விளக்கமறியல் நீதிமன்றால் நீடிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 பேரும் சிறை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் மன்றில் முற்படவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்பில் சட்டத் தரணி வி.ரி. சிவலிங்கம் முன்னிலையாகியிருந்தார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் மேலதிக அறிக்கை மன்றில் சமர்ப் பிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோரை - சாட்சிகளாக உள்ளவர்களுடன் பொலிஸார் தலையீடு செய்வதாகச் சில தவணைகளுக்கு முன்னர் சட்டத்தரணிகளால் மன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையிடுமாறு மன்று குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கட்டளையிட்டிருந்தது.

அந்த விடயத்தைச் சட்டத்தரணி நேற்று நீதிமன்றில் சுட்டிக்காட்டி அதன் நடவடிக்கை என்ன என்று கேட்டார். அதன்போதே, பொலிஸ் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகள், நீதிமன்றக் கட்டளையின் பின்னர் நிறுத்தப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான பொலிஸ் உத்தியோகர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், சந்தேகநபர்கள் தொடர்பான அலைபேசி அறிக்கையை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

*பின்னணி*

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சாலையில் கொக்குவில் குளப்பிட்டி சந்தியை அண்மித்து கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். கிளிநொச்சி பாரதிபுரத் தைச் சேர்ந்த நடராசா கஜன், யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் ஆகியோரே துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். இவர்கள் யாழ்.பல்கலைக்கழக 2ஆம் 3ஆம் வருட மாணவர்கள்.

அவர்களைக் கொலைசெய்ததாக பொலிஸார் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும் இந்தச் சம்பவத்தை விபத்து உயிரிழப்பாகவே பொலிஸார் முன்னர் வெளிக்காட்ட முற்பட்ட போதும் பின்னர் கொலை என்பதை ஏற்றுக்கொண்டனர். அது தொடர்பில் விசாரணை செய்ய முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையிலான பொலிஸ் குழு நியமிக்கப்பட்டது. அதன்படி அந்தக் குழு வந்து விசாரணை முன்னெடுத்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 பேரைக் கைது செய்தது. (வ-4,103,ரி)

### அரசுடனான...

உறவுகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே காணாமற்போனோரின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவதற்கே சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அவர் கலந்து கொள்ளவில்லை. அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், விஜயதாஸ ராஜபக்ச, சாகல ரட்நாயக்கா, இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அரசுடனான சந்திப்பின் போது, இலங்கையின் நீதித்துறையில் நம்பிக்கை அறவே இல்லை. அதற்கு ஆதாரமாக ரவிராஜ் படுகொலை வழக்கு, குமாரபுரம் வழக்கு என்பவற்றின் தீர்ப்புகள் உள்ளன. எமக்குப் பன்னாட்டு நீதி விசாரணைதான் வேண்டும். எமக்கு இந்தக் கூட்டு அரசின் மீதும் நம்பிக்கையில்லை. காணாமற்போனோர் விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புவதற்கு, தமிழ் அரசியல் கைதிகளில் பாதிப் பேரையாவது விடுதலை செய்யுங்கள் என்று காணாமற்போனோரின் உறவுகளின் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன்போது உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது எனத் தெரிவித்து அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சந்திப்பிலிருந்து வெளியேறினார்.

காணாமற்போனோர் விடயத்தில் நடவடிக்கை எடுப்பதற்காக சிறப்பு பொலிஸ் குழு அமைக்கப்படும் என்று அரச தரப்பினால் யோசனை முன்வைக்கப்பட்டது. காணாமற்போனோரின் உறவினர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. முடிவுகள் எட்டப்படாமலேயே சந்திப்பு நிறைவடைந்தது.

இதேவேளை, வவுனியாவில் கடந்த மாதம் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், அலரிமாளிகையில் சந்திப்பு நடத்துவதை ஏற்றுக் கொண்டே தமது போராட்டத்தை முடித்துக் கொண்டனர். - (5-21-101-56)

### காணிகளை...

இவ்வாறு தெரிவித்த புதுக்குடியி ருப்பு மக்கள், 9ஆவது நாளான நேற்றும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

'காணி விடுவிப்புத் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எமக்குச் சாதகமான கருத்துக் கூறியுள்ளார். எனினும் காணிகள் எப்பொழுது விடுவிக்கப்படுகிறதோ அன்றுதான் எமது போராட்டத்தை நிறுத்துவோம். அதுவரை எமது போராட்டம் தொடரும். இது தொடர்பில் ரணிலுக்கும் தெரிவித்துள்ளோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்றுத் தெரிவித்தனர். (வ-4,7)

### படைமுகாம்களை...

வித்ததாகச் சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

'இந்த விடயத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் பேசி விரைவில் முடிவு எடுக்கப்படும்' என்று தலைமை அமைச்சர் ரணில், சந்திப்பில் கலந்து கொண்டவர்களிடம் தெரிவித்ததாக தலைமை அமைச்சர் அலுவலக ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் போராட்டம் நடத்தும் மக்களை சந்திப்புக்கு வருமாறு தலைமை அமைச்சர் அலுவலகம் அழைத்திருந்தது. பிலக்குடியிருப்பு மக்கள் தலைமை அமைச்சரின் கோரிக்கையை நிராகரித்திருந்தனர். புதுக்குடியிருப்பில் போராட்டம் நடத்தும் மக்களின் பிரதிநிதிகள் சென்று சந்தித்தனர். சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பில் பாதுகாப்புத் தரப்பினர் கையகப்படுத்தி வைத்துள்ள காணிகள் தனியார் காணிகள்தான் என்று தலைமை அமைச்சருக்கு ஆதாரங்கள் சமர்பிக்கப்பட்டன. இதன் பின்னர் தலைமை அமைச்சர் ரணில் நேரடியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலருடன் தொலைபேசியில் பேசினார்.

புதுக்குடியிருப்பில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கு மாற்றுக் காணிகள் அண்மையில் வழங்க முடியுமா என்று தலைமை அமைச்சர் கேட்டுள்ளார். வனவளத் திணைக்களத்தினரின் காணிகள் உள்ளது என்று மாவட்டச் செயலர் பதிலளித்துள்ளார். இராணுவத்தினர் புதிய இடத்துக்குச் சென்ற பின்னர் காணிகள் விடுவிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் தெரிவித்ததாக கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (வ-5-101-21-56)

### 10ஆவது...

ஆதரவுடன் 10ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. நில மீட்புக்கான அவர்களது போராட்டத்துக்கு ஆதரவாக சிங்கள மக்கள் சிலரும் நேற்றுப் பிலக்குடியிருப்புக்குச் சென்று பங்கெடுத்தனர்.

முல்லைத்தீவு பிலக்குடியிருப்பில் உள்ள பொதுமக்களுக்கு என்று வழங்கப்படவிருந்த காணிகளை இராணுவத்தினர் விடுவிக்காது இழுத்தடித்து வருகின்றனர்.

காணி விடுவிக்கப்படும் என்ற அரசின் வாக்குறுதிகளை நம்பியிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்காது நிலமும் கிடைக்காத நிலையில் கடந்த 31ஆம் திகதி பிலக்குடியிருப்பு மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். பிலக்குடியிருப்பிலுள்ள வான் படையினரின் முகாமுக்கு முன்பாக இரவுபகலாக மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பந்தல் அமைத்து அவர்கள் இரவுப் பனிக் குளிரிலும் பகல் வெயிலில் காய்ந்தும் சீரான உணவு இன்றியும் உடல் சோர்வுடனும் தமது நில மீட்புக்கான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமது நிலம் விடுவிக்கப்படும்வரை தமது போராட்டம் தொடரும் என்ற உறுதியான முடிவிலிருந்து அவர்கள் மாறாது போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். விடுவிப்புத் தொடர்பில் கலந்துரையாட வருமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தபோதும், காணி விடுவிப்பு ஒன்றே எமது கோரிக்கை. அதனைச் செயலில் காட்டினால் போதும். அதற்காகப் பேச்சுவார்த்தை எதுவும் தேவையில்லை என்று அவர்கள் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுக்கிறார்கள்.


அவர்களின் பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் செல்லாமல் நிலமீட்புக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குப் போராட்ட இடத்தில் வைத்து ஆசிரியர்கள் கல்வி புகட்டுகின்றனர்.

வடக்கில் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட பல அமைப்புக்களும் போராட்டத்துக்கு வலுச் சேர்த்துள்ளன. சிங்கள மக்கள் சிலரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேரடியாகவே நேற்று முற்பகல் 10 மணியளவில் பிலவுக் குடியிருப்புக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் தம்மையும் இணைத்துக்கொண்டனர். பொதுமக்களின் 42 ஏக்கர் காணி விடுவிக்கப்படவேண்டும் என்று தென்பகுதி மக்களும் நேற்று ஆதரவுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 42 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படும்வரை தமது போராட்டம் தொடரும் என்று தெரிவித்து அவர்கள் இன்னும் போராட்டத்தைத் தொடரவுள்ளதாகத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தினரும் நேற்று முற்பகல் 10 மணியளவில் பிலக்குடியிருப்புக்கு நேரில் சென்று 10 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

பிலக்குடியிருப்பில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு சிவன் அறக்கட்டளையினர் தேவையான உதவிகளை வழங்கினர். பிலக்குடியிருப்புப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் நேற்றும் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. வழமை போல் அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள் போராட்ட இடத்தில் முன்னெடுத்தனர். (வ-4,7)





வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் துர்முகி வருடத்துக்கான பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. இதில் பெருந் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். . (ஐ)

## வறுமையும், இடர்களும் கல்விக்குத் தடைகளாக அமைந்துவிடக் கூடாது

*பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.10

சிரமங்கள் மற்றும் வறுமைக்கு மத்தியில் நல்ல கல்வியைப் பெற்றே சிறந்த தலைவர்கள் உருவாகின்றனர். எனவே பின்தங்கிய பாடசாலை என்ற மனநிலையை விடுத்து மாணவர்கள் நல்ல கல்வியைப் பெற வேண்டும், இவ்வாறு யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் பாட சாலை மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது சகலபாடசாலைகளிலும் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன. சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தைப் பொறுத்தவரை இந்த விளையாட்டுப்போட்டியை மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் சந்தோசமாகக் கொண்டாடிக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இங்கு மாணவர்களின் எண்ணிக்கையை விட பொது மக்கள் அதிகமாக வந்திருக்கின்றார்கள். இது இந்தப் பாடசாலையின் மீது பெற்றோர்கள் எந்த அளவுக்குக் கரிசனையாக உள்ளனர் என்ற ஒரு செய்தியைச் சொல்கிறது. தற்போது பாட சாலைகள் வெளிச் சமூகத்தோடு பிணைந்ததாகக் காணப்படுகின்றன. இது ஒரு கிராமத்து பாடசாலை, ஒரு பின்தங்கிய பாட சாலை.

ஆனால் தற்போதைய சூழலில் பாட சாலைகளுக்கிடையே பெரிய அளவில் வேறுபாடுகள் இல்லை. நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்கு இவை ஒரு தடையாக இருக்காது. இதனைத் தவிர குடும்ப வறுமை காணப்படுகிறது. ஆனால் வறுமையே நல்ல கல்வியைப் பெறுவதற்கும், நல்ல மாணவர்களை உருவாக்குவதற்கும் காரணமாக அமைந்துவிடுகிறது. வசதிகள் அதிகரித்தால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் அனைவருக்கும் தெரியும். வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னேறினால் அது எதிர்காலத்தில் பெரிய உதவியாக அமையும்.

எனவே மாணவர்கள் இது கிராமத்துப் பாடசாலை; பின்தங்கிய பாடசாலை என்று எண்ணத் தேவையில்லை, மாறாக இது ஒரு முன்மாதிரியான பாடசாலை என்ற எண்ணப்பாட்டோடு சிறந்த மாணவர்களாக விளங்கவேண்டும் என உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இருக்கின்ற வளங்களைக் கொண்டு மிகச் சிறந்த மாணவர்களாக வளரவேண்டும், பின்தங்கிய பாடசாலை, வறுமை என்பவை மாணவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது. இந்த வறுமை மற்றும், சிரமங்களுக்கு ஊடாக சிறந்த கல்வியைப் பெற்று எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக எவ்வாறு உருவாக முடியும் என்பதனைக் கற்றுக்கொள்ள வேண்டும். என்றார்.

(க-21,35)

## வவுனியாவில் மற்றுமொரு மசாஜ் நிலையம் மூடப்பட்டது

வவுனியா,பெப்.10

இந்த வருடத்துக்கான அனுமதிகள் பெறப்படாது, அடிப்படை வசதிகள் இன்றி இயங்கிய குற்றச்சாட்டில் வவுனியாவில் மற்றுமொரு மசாஜ் நிலையம் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, சந்தைச் சுற்றுவட்ட வீதியில் இயங்கி வந்த ஆயுள்வேத மசாஜ் நிலையமே இவ்வாறு நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் மூடப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதியாக இயங்கி வந்த குறித்த கட்டடத் தொகுதி, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மகிந்த ஆட்சிக் காலத்தில் ஆயுள்வேத மசாஜ் நிலையமாக மாற்றம் பெற்றுச் செயற்பட்டு வந்தது.

நேற்று வவுனியா நகர சபைச் செயலாளர் ஆர்.தயாபரன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வருமான வரிப்பகுதி உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் அங்கு விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மசாஜ் நிலையம் மின்சாரம் இன்றி இயங்கியமை, தீயணைப்பு வசதிகள் இன்றி இயங்கியமை, உள்ளடங்கலான குற்றச்சாட்டுகளுக்காகவும், மற்றும் மசாஜ் நிலையத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதிகள் நகர சபையிடம் இந்த வருடம் பெறப்படவில்லை எனவும் தெரிவித்தே, மசாஜ் நிலையம் மூடப்பட்டது.

கடந்த 5ஆம் திகதி வவுனியா தேக்கவத்தை பகுதியில் இயங்கி வந்த மசாஜ் நிலையம் மக்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க நகர சபையால் மூடப்பட்டது.

குறித்த மசாஜ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இதற்கான அறிவித்தல்கள் துண்டுப் பிரசுரம் மூலம் உடனடியாக ஒட்டப்பட உள்ளது. பிரதானமாக இந்த வருடத்துக்கான அனுமதிகளைப் பெறாது மசாஜ் நிலையம் இயங்கியுள்ளது. என்று நகர சபைச் செயலாளர் ஆர். தயாபரன் தெரி வித்தார். (ஐ-21)

## சிவராத்திரியைப் பக்தி பூர்வமாக கடைப்பிடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.10

சிவராத்திரி தினத்தில் சில ஆலயங்களில் களியாட்ட நிகழ்வுகளை நிகழ்த்தி விழித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஆலயபரிபாலன சபைகளும், சைவ நிறுவனங்களும் முன்வரவேண்டும் என இந்து சமயப்பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம்திகதி வெள்ளிக்கிழமை சிவராத்திரி தினத்தைப் பக்தி பூர்வமாக நடத்துவதற்குச் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும், மதுபானக்கடைகள் மாட்டிறைச் சிக்கடைகள் ஆகியவற்றை மூடுவதற்கு ஏற்ற சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## பொது நோக்கு மண்டபம் திறந்து வைப்பு

தென்மராட்சி, பெப். 10

சாவக்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம், நேற்று, தைப்பூச தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது.

ஓய்வுநிலை சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு ,உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், கிராம அலுவலர் பொருளாதார அபிவிருத்தி அலுவலர், வாழ்வின் எழுச்சி அலுவலர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பொது நோக்கு மண்டபக் கட்டடத்தை அமைப்பதற்குக் காணி வழங்கிய இ.கருணாகரன் அலுவலக அறையையும் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.பரமேஸ்வரன் இன்னோர் அறையையும் திறந்து வைத்தனர்.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற்று படங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. நிகழ்வில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், பிரிவு கிராம அலுவலர் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த மண்டபத்தில் பிரிவு கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ஆகியோரின் அலுவலகங்கள் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (க-9)



## மின்மானி வாசிப்பாளரின் தவறால் ஏழைக் குடும்பம் பாதிப்பு

*தச்சன்தோப்பில் சம்பவம்*

தென்மராட்சி பெப் 10

மின் பாவனைக் கட்டணச் சிட்டை இடம் மாறி வழங்கப்பட்டதால் ஏழைக் குடும்பம் ஒன்று பாதிக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்பவம் நாவற்குளி, தச்சன்தோப்புப் பகுதியில் இடம்பெற்றது.

மின்மானி வாசிப்பாளர் அருகருகேயுள்ள வீடுகளின் சிட்டைகளை மாறிக் கொடுத்துள்ளார்..

சிட்டையில் உள்ள ஆங்கில எழுத்தை வாசிக்கத் தெரியாத குடும்பத்தினர் அதில் காணப்பட்ட ஆயிரத்து 500 ரூபா பணத்தை வங்கியில் செலுத்திவிட்டனர். மறுநாள் பக்கத்து வீட்டுக்காரர் தமக்கு வழங்கப்பட்ட சிட்டையை இவர்களிடம் கொடுத்துள்ளார் அதன் பின்னரே மூன்று மாதங்களாக பக்கத்து வீட்டுக்காரரால் செலுத்தப்படாமலிருந்த நிலுவைத் தொகை தங்களால் செலுத் தப்பட்டமை தெரியவந்துள்ளது..

இந்தக் குடும்பம் வறுமையிலும், மாதாந்தம் வழங்கப்படும் மின்பாவனைக் கட்டணச் சிட்டையில் பேனாவினால் குறிப்பிட்டுள்ள தொகையை உடனுக்குடன் செலுத்தி வந்துள்ளனர். வழங்கப்பட்ட சிட்டையில் மின் பாவனைக் கட்டணம் வழமையைவிடக் கூடுதலாகக் காணப்பட்டபோதிலும், சில வேளை மின்கட்டண அதிகரிப்பு ஏற்பட்டிருக்கலாமெனக் கருதிப் பக்கத்து வீட்டுக்காரர் செலுத்த வேண்டிய பாவனைக் கட்டண நிலுவையுடனான முழுத் தொகையையும் செலுத்தியுள்ளனர்.

தாங்கள் சிட்டையைப் பார்க்காமல் முழுத் தொகையையும் செலுத்தி விட்டோம். மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை வழங்குமாறு பக்கத்து வீட்டுக்காரரைக் கேட்டுள்ளனர். இதற்கு நாங்கள் பொறுப்பல்ல, சிட்டை வழங்கிய மின்சார சபையிடம் கதைத்துப் பெற்றுக் கொள்ளுமாறு பக்கத்து வீட்டுக்காரர் கூறியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்திற்குச் சென்று கதைத்தபோது மின் கட்டணம் வங்கியில் செலுத்தியதால் அவரது வங்கிக் கணக்குக்குச் சென்றுவிடும்.இதனால் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என அவர்கள் கைவிரித்துள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர் .

(க-9)

## திருமணம் பிற்போடப்பட்டுள்ளது

11.02.2017 சனிக்கிழமை அன்று ஆவரங்கால் சிவசிக்தி மணி மண்ட பத்தில் நடைபெற இருந்த ஜெய ரூபன்-மேனுஷா ஆகி யோரின் திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது என்பதனை அழைப் பிதழ் கிடைக்கப்பெற்ற அனை வருக்கும் அறியத்தருகின்றோம்.

**சு.சற்குனேஸ்வரசாமி(குட்டி ஐயா)**
**ஆவரங்கால்**
**077 606 0725**

Galaxy Star
வெற்றி வாரம் 134 திகதி 08.02.2017
01 05 15 51 57
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,315,472 /-

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 15
சீட்டிழுப்பு திகதி 09.02.2017 வியாழக்கிழமை
Development Fortune
வெற்றி இலக்கங்கள்
28 30 38 40 03
7,162,062/= 2,895,757/= 1,507,030/=
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி இராசரத்தினம்



வீரபத்திரர் கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசரத்தினம் நேற்று (09.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பாறுப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் மடத்தடி, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பேரின்ப நாயகம் மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும் சறோஜாவின் அன்புக் கணவரும் அபிதா, தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் மகேஸ்வரி, கனகரத்தினம், ராஜேஸ்வரி (ஆசிரியை), செல்வ ரத்தினம் காலஞ் சென்ற மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகாதேவன், குலசிங்கம், யோகதாசன் காலஞ்சென்ற சகாதேவன் மற்றும் கலாராணி, கிருபாமூர்த்தி, சித்திரா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப். 10

கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாடசாலை இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ப.பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறிஸ்கந்தராசாவும், கௌரவ விருந்தினராக மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அதிபர் க.எழிலழகனும் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

++++++++++++++++

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராகத் தொழிலதிபர் த. ஜெயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் கு.ரவீந்திரா பாடசாலையின் பழைய மாணவி திருமதி த.மங்கையற்கரசி ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

++++++++++++++++

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத் தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் த.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செ. உதயகுமார் கலந்து சிறப்பிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-422)

++++++

நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை சனிக் கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல் லூரியின் பழைய மாணவரும் வலயக் கல்விப் பணிப் பாளருமான எஸ். புஸ்பலிங்கம் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

++++++

புத்தூர் மடிஹே பஞ்ச சீஹ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர் வரும் 13ஆம் திகதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலய முதல்வர் திருமதி சிவரஞ்சனி கணேசானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் கலந்து சிறப்பிப்பார். (க-422)

## உதவியாளர் தேவை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தின் உதவி வேலை செய்ய விரும்புவர்கள் ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும். 40-55 வயது மதிக்கத்தக்கவர்கள் விரும்பத்தக்கது.மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.
077 614 6146

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1339 சீட்டிழுப்பு திகதி 2017.02.09
வெற்றி இலக்கங்கள்
20 52 60 61 A
ரூ. 17,282,963/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 613
சீட்டிழுப்பு திகதி 09.02.2017 வியாழக்கிழமை
01 16 30 51 N
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.49,574, 227/=

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

### திரு. திருமதி சதானந்தன் வள்ளிநாயகி தம்பதிகள்



திருமண பந்தத்தில் இணைந்து **ஐம்பது ஆண்டுகளை** நிறைவுசெய்த எமது அன்புப் பெற்றோரை பெருமிதத்துடன் பேருவகை கொண்டு மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி செல்வானந்தன் மாலாவதி
திரு. திருமதி சர்வானந்தன் சுஜாதா
திரு. திருமதி தேவகி கோபாலசந்திரன்
திரு திருமதி கருணானந்தன் பாலினி
திரு. திருமதி றஞ்சிதா றிச்சேட்

"ஆனந்தபவன்"
அல்வாய்

## மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி அற்புதராசா



உச்சியோடை, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அற்புதராசா 08.02.2017 புதன் கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - பூங்காவனம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசம் பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், அற்புதராசாவின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெனீஸ்கரன், ரதீஸ்கரன் (சவுதி அரேபியா), ஜெனித்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், துளசிதாஸ், சிறீரஞ்சினி, சுதாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உச்சியோடை,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர். 077 593 5916**

# மதுபோதையில் நின்றவர்கள் இளைஞன் மீது வாள்வெட்டு

மதுபோதையில் நின்றவர்களின் அட்டகாசத்தால் இளைஞன் வாள் வெட்டுக்கு இலக்காகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். சம்பவத்தில் புற் றளையைச் சேர்ந்த தாமோதரன் பத்ம நாதன் (வயது-30) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

இரவு 8 மணியளவில் மேசன் வேலையை முடித்து வீடு திரும்பி வந்து கொண்டி ருந்தவரை வீதியில் மது போதையில் நின்ற சிலர் வழிமறித் துத் தகராறு செய்துள்ளனர். அவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட அவர் அந்த இடத்திலிருந்து விலகித் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். அவரைப் பின்தொடர்ந்து சென்ற மதுபோதையில் நின்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் குழுவினர் குறித்த இளைஞனை அவரது வீட்டின் கேற்றடிக்கு அழைத்து கேற்றடியில் வைத்து வெட்டியுள்ளனர்.

சம்பவத்தில் குறித்த நபருக்கு கழுத்து மற்றும் மார்புப் பகுதியில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக பருத்தித் துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர். (க-422)

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை அருட்துரை

( முன்னாள் எழுதுவினைஞர், வாழைசேனை கடதாசி கூட்டுத்தாபனம் மற்றும் முன்னாள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் வட்டுகோட்டை இந்துக்கல்லூரி)



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை அருட்துரை (09.02.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வர்களான ஆசைப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர் களான பொன்னையா - லக்சுமி யார் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தவத்துரை (சட்ட வரைஞர், LegalDraughtman) யின் அன்புச்சகோதரரும் அருள்மதி, ஞானமோகன் (பிரதி சுங்க அத்தியட்சகர், Colombo), பொன்மதி (அபிவிருத்தி இணைப்பாளர் பிரதேசசெயலகம், சங்கானை ) காலஞ் சென்ற தங்கமதி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற தேவதாசன் (ஆசிரியர்), சிவகுமாரன் (போதனாசிரியர் J.C.I.T), சரளா (ஆசிரியர்) ஆகியோரின் அன்புமாமனாரும் கோபிகா, துஷ்யந்தி, ஹம்சிகா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆனந்தரஞ்சன் (லண்டன்) காலஞ்சென்ற சிவரஞ்சன் மற்றும் ஜெயரஞ்சன் (லண்டன்), செல்வரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

தகவல்:
077 7355 091, 021 225 0647 ஆ.ஞானமோகன்(மகன்)

பணி நிலை வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும்
பிரபல தனியார் நிறுவனத்திற்கு
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும்,
சுறுசுறுப்பாகவும், அர்ப்பணிப்புடன்
வேலை செய்யக்கூடியவராகவும்
இருத்தல் வேண்டும்.



இன்று
10.02.2017
நேரில் சமுகம்
தரவும்.

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# தைப்பூச தினத்தை முன்னிட்டு வேகமாக நடந்த சபை அமர்வு

யாழ்ப்பாணம், பெப். 10

தைப்பூச தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சபையின் சபை நடவடிக்கைகள் அவசர அவசர மாக இடம்பெற்று அரை நேரத் துடனேயே முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 84 ஆவது அமர்வு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமை யில் இடம்பெற்றது. இந்த அமர் வின் ஆரம்பத்தில் அவைத்தலை வர், இன்றையதினம் தைப்பூசம், ஆகவே நாங்கள் விரைந்து சபை நடவடிக்களை முடிக்க வேண்டும். சபை நடவடிக்கை கள் தேநீர் இடைவெளியுடன் ஒத்திவைக்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

அதன் படி வடக்கு மாகாண முத லமைச்சரின் இரண்டு பிரே ரணைகள், எதிர்க்கட்சித் தலை வர் தவராசாவின் ஒரு பிரே ரணை, ரவிகரனின் ஒரு பிரே ரணை, அஸ்மின் முதலமைச் சரிடம் கேட்க வேண்டிய ஒரு வினா ஆகியன அமர்வின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட் டிருந்தது. நிகழ்ச்சி நிரலின் படி அனைத்து விடயங்களும் அவரச அவரசமாக முடிக்கப் பட்டு சபை அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது. (வ-8-37)

## விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்குத் தண்டம்

சாவகச்சேரி, பெப்.10

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுத் தண்டம் விதித்தது.

சாரதி அனுமதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம், காப்புறுதி இன்றி விபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அபாயகரமாக வாகனம் செலுத்திய சாரதிக்கு 25 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப் பத் திரமின்றியும், தலைக்கவசமின்றியும் அளவுக்கு மேல் ஆள்களை ஏற்றிச் சென்றபோது பொலி ஸாரின் சமிக்ஞையை மீறி வாகனத் தைச் செலுத்திய சாரதிக்கு 15 ஆயிரம் ரூபாவும், போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாத ரயர் பொருத்தியிருந்தமை, பிரதான விளக்கு எரிய விடாமை, காப்புறுதிப் பத் திரம் இன்றி வாகனம் செலுத்திய லொறிச் சாரதிக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

# இரண்டாவது கட்டமாக இலவச அரிசி விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் வதியும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்து தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்க ளுக்கான இரண்டாம் கட்ட இலவச அரிசி விநியோகம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்றுத் தொடக்கம் இடம்பெற்று வருகிறது. கடந்த 24 ஆம் திகதி முதலாம் கட்ட இலவச அரிசி விநியோகத்தின் போது அரிசி பெற்றவர்களை இரண்டாம் கட்ட அரிசியைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித் துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சினால் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் இந்தியாவிலிருந்து சொந்த இடங்களில் மீளக் குடிய மர்ந்த குடும்பங்களுக்கு ஒரு அங்கத் தவருக்கு தலா 15 கிலோ அரிசி வீதம் வழங்கு மாறு அறிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேசத்தில் 300 க்கு மேற் பட்ட குடும்பங்கள் கடந்த மாதம் அரிசியைப் பெற்றமை குறிப் பிடத்தக்கது. (க-9)

## நகுலேஸ்வரத்தில் வருடாந்தத் திருவிழா

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தின் திரு விழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து 15நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி உற்சவமும் தேர்த்திருவிழா வும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

தினமும் காலை 7 மணிக்கு வழிபாடுகள் ஆரம் பமாகும். எதிர்வரும் 25ஆம் திகதி உதயத்தில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் பி.ப 2மணிக்கு கொடியிறக்கமும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு சிறப்பு முழுக்குடன் வழிபாடுகள் ஆரம்பமாகி நடராஜப் பெருமானின் திருநடனக்காட்சியும் இடம்பெறும்.

15 நாள்களும் குடாநாட்டில் உள்ள பாடசாலை களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் பங்கு பற்றுகின்ற நற்சிந்தனை கூட்டுப்பிரார்த் தனைகள் திருமுறைப்பாடல்கள் இசைநடன நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை ஆலயத்தில் இராஜகோபுரம் 113 அடி உயரத்தில் 9 தளங் களுடன் அமைக்கப்படுகிறது. (வ)

## தைப்பூச விழா

தென்மராட்சி பெப் 10

மீசாலை வடக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தின் தைப்பூச பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் நாளை காலை 8.30 மணிவரை கோட்ட மண்டபத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது. காலை தொடக்கம் வழிபாடுகளும் சொற் பொழிவுகளும் கருத்தரங்குகளும் நடை பெறும் என்று தெரிவிக்கப்பட்டது (வ- 9)

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி, பெப். 10

தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவை யின் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத் தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பிரதேச கலைஞர்கள் மற்றும் ஆர்வலர் களை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு கேட்டுள்ளார். (வ 9)

## ஒக்ரோபர் புரட்சி ஆய்வரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 10

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன் னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வ ரங்குத் தொடரின் இரண்டாவது நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறி வித்தனர்.

'ஒக்ரோபர் புரட்சியும் தொழிலாளி வர்க்க விடுதலையும்' என்ற தலைப்பில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகை யன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் கன்னியர்மடம் வீதியில் அமைந்துள்ள திரு இருதய ஆண்டவர் சிற் றாலயத்தின் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் திருவிழாவுக்கான நவ நாள் ஆராதனைகள் கடந்த முதலாம் திகதி மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செபமாலை வழிபாடுகள் தின மும் நடைபெறுகின்றன. (வ-51)

## புதிய நிர்வாகம் தெரிவு

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக் கிளையின் பகிரங்க சேவை ஓய்வூதியர்க யின் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கூட்டம் அண்மையில் இடம் பெற்றது என அதன் செயலர் தெரிவித்தார். தலைவராக எஸ்.மன்மதராசாவும், உப தலை வராக சி.இராசதுரையும், செயலராக ம.வின் சன்குமாரும்,பொருளாளராக வெ. சிவசுந் தரமும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-10)

## ஆன்மிகப் பயிற்சி


இணுவில் சைவத் திருமுறைப் பயிற்சி மை யத்தினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை சைவ சித்தாந்த திருமுறைப் பயிற்சி வகுப்புக்கள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தாக அதன் அமைப்பாளர் தெரிவித்தார். (வ-10)

## விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், பெப்.10

நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரச புகைப்படவிழா, அரச ஓவிய சிற்ப விழா, அரச இலக்கிய நூல் விருது வழங்கல் ஆகியவற் றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள தாக பிரதேச செயலர் ஆ.சிறி தெரிவித்தார். இவற்றில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் இந்த விண்ணப்பங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் பெற்றுக்கொள் ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
இ.சாரதாம்பாள் அவர்களின்
அன்புத் தந்தை

**சுப்பையா பேரம்பலம்**

07.02.2017 அன்று காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடையவும்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்.**

(K/2961) (22.18.17)

## வேலைவாய்ப்பு


கட்டட நிர்மாணத்துறையிலும் எமது நிறுவனத்துக்குப் பின்வரும்
வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

1. Technical Officer ((NCT (Civil) - 3 Years Experience or Equivalent)
2. Technical Officer (NCT (Electrical), or Equivalent)
3. Office Assistant (A/L Any Subject, Age below 30 yrs with Driving License & Computer Knowledge)
4. சாரதி

தகுதியானவர்கள் தொலைபேசி மூலமாகத் தொடர்பு
கொண்டு நேரில் சமுகமளிக்கவும்.

**077 712 0945, 021 221 3663**
No.207, Navalar Road, Jaffna.
Email - sarukaya10@gmail.com

## கண்ணீர்க்காணிக்கை



மண்கும்பான், வெள்ளைப்
புற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர்
பெருமானுக்கு சித்திரத்தேர்
திருப்பணியை செய்வித்து
தந்த **அப்பையா**
**நகுலேஸ்வரன்**
அவர்களின் தாயார்
திருமதி **தங்கம்மா**
**அப்பையா**

08.02.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆறாத்துயரம் அடைகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறை வனைப்பிரார்த்திக்கின்றோம்.

**கந்தவேலன் கலர்வங்கி,**
021 222 2822 **இல. 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசரட்ணம்**
**புஸ்பராசா (வசந்தன்)**

மலர்வு
13.04.1978

உதிர்வு
09.02.2007

**வானத்து நிலவாய் வானில் மிளிர்ந்த நீ**
**எம்மை இருளில் சாய்த்தது ஏனோ?**
**காலத்தின் கோலத்தால் உனை இழந்தோம்?**
**ஆண்டுகள் பத்து ஆனதடா....**
**உனது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

மட்டுவில் வடக்கு, பிலிப்றோட், சாவகச்சேரி. குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



மண்கும்பான் வெள்ளைப்
புற்றடி சிறி வீரகத்தி
விநாயகர் ஆலயத்தில்
சிற்பத்தேர் திருப்பணியை
முன்னின்று செய்வித்த
அப்பையா
நகுலேஸ்வரன்
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி**
**தங்கம்மா**
**அப்பையா**

அவர்களின் ஆத்மா
சாந்தியடைய விநாயகப்
பெருமானைப்
பிரார்த்திப்பதோடு
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்

(J/7991) (22.18.17)

**பரிபாலன சபை**
**மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.**

## டெங்கிலிருந்து எம்மை நாமே காப்போம்...



குப்பைகளைத் தரம்பிரித்து வேறு வேறான கொள்கலன்களில் சேகரித்து அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்து மீள்சுழற்சிக்கு உதவுவதன் மூலம் டெங்கு அபாயத்திலிருந்து மீள்வோம்.
உக்கக்கூடிய கழிவுகளை பச்சை நிறக் கொள்கலனில் சேகரிப்போம்
பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளைச் செம்மஞ்சள் நிறக் கொள்கலனில் சேகரிப்போம். கடதாசிக் கழிவுகளை நீல நிறக் கொள்கலன்களில் சேகரிப்போம்.

"சுத்தமான சூழலே சுகம் தரும்"

**தகவல் - சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை - யாழ்.மாநகரசபை**

# தனியார் பேருந்துகளுக்கு நேர நிர்ணயம் அவசியம்

கொழும்பு,பெப்.10
தனியார் பேருந்துகள் மெதுவாகப் பயணிப்பதால் வீதிகளில் வாகன நெரிசல் அதிகரிப்பதால், பேருந்துகள் பயணிப்பதற்கான நேரமொன்றை நிர்ணயிக்குமாறு தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம், இலங்கைப் பயணி கள் உரிமை அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது.

இது தொடர்பில் இலங்கைப் பயணிகள் உரிமை அமைப்பின் தலைவர் சுனில் ஜனசிங்க தெரிவித்ததாவது:
வீதிகள் பல சீரமைக்கப்பட்டுள்ள நிலையிலும், சேவை நோக்கில் செயற்படாது இலாபநோக்கில் மாத்திரம் செயற்படும், தனியார் பேருந்துச் சாரதிகளின் இவ்வாறான நடவடிக்கைகளால் பயணிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன.
இதனால், பிரதான மற்றும் புறநகரங்களில் பயணிக்கும் பேருந்துகளுக்கு மணித்தியாலத்துக்கு 8 - 10 கிலோமீற்றர் என்ற ரீதியில் நேரத்தை வரையறுத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். பேருந்துச் சாரதிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக, தனியார் பேருந்துகளில் பயணித்து வந்த பயணி கள், தங்களது சொந்த வாகனங்களில் பயணிக்க ஆரம்பித்துள்ளனர். இதனால் வீதிகளில் வாகனங்களின் எண்ணிக் கையும் அதிகரித்துள்ளன. இந்த நடை முறையைமாற்ற வேண்டுமாயின், தனி யார் பேருந்துகளுக்கு நேர நிர்ணயத்தை விதித்தல் கட்டாயமாகமேற்கொள்ளப்படல் வேண்டும். குறித்த காலத்துக்குள் பய ணத்தை முடிக்காத பேருந்துகளின் அனு மதிப் பத்திரத்தை இரத்து செய்யவும் நட வடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.-என்றார். (ஐ)

## சுண்டுக்குளியில் வீடு வாடகைக்கு

4 அறைகள் கொண்ட இரண்டு பெரிய Hall கீழ், மேல் மாடியில் 60 அடி நீள, அகலத்தைக் கொண்ட சகல வசதிகளுடனான பெரிய Hall வாடகைக்கு உண்டு.
4 கார்கள் விடக்கூடிய வசதியுடையது.
நிர்வாகத்துக்கு.Store இற்கு.
ஏனையோருக்கும் ஏற்ற இடம்.

**அல்பேட்- 076 602 3324**

## விற்பனைக்கு

தனிப்பாவனையிலுள்ள Scooty Pep+ மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

**077 312 7498**

## தேவை

சியரா கொம்பனிக்கு காபெண்ரேர்ஸ்/ மேசன்ஸ்/ மார்பெண்ரேர்ஸ்/ ரைலேர்ஸ்/ வேலை ஆள்கள் தேவை. விவரங்களுக்கு

071 309 0708 / 077 232 7277 /
077 257 1408 / 077 961 6232

## புதிய கார் விற்பனை

Micovo Panda Cours - 2013
NP CAO (XXXX)

**077 605 2399**

## காணி விற்பனைக்கு-மல்லாகம்

K.K.S வீதியிலுள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகில் வீட்டுடன் சேர்ந்த 20.75 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. இந்தக் காணி திருமண மண்டபம் அல்லது தங்கு விடுதி (Hotel) அமைக்க உகந்த இடமாகும்.

(J/8027) (22)

**021 321 9802**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் A9 வீதி கச்சேரிக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய.

01. 3 அறையுள்ள 1 வீடும் (Recently upgraded)
02. 1 அறையுள்ள 1 தனி வீடும் (Ideal for working Couple)
03. 1 தனி அறை ஒன்று குளியலறையுடன் கூடியது. (Suitable for working Single person)

வீடு வாடகைக்கு உண்டு.

(J/7999) (22)

**077 484 2578**

## சிறுநீரகம் தேவை

37 வயதுடைய (B+) இரத்த வகையைச் சேர்ந்த இ.அம்பிகை வரதன் என்பவர் இரண்டு சிறுநீரகமும் செயலிழந்த நிலைமையிலுள்ளார்.
இவருக்குரிய சிறுநீரகத்தினையும் அதன் மாற்றுச்சிகிச்சைக்கான நிதியுதவியையும் கோரியுள்ளோம்.

(J/8021) (22)

**077 065 6776, 077 345 8308**

## தென்மராட்சியில் நேற்று நடைபவனி

சாவகச்சேரி, பெப்.10
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் விளையாட்டு மற்றும் உளநல மேம்பாட்டு வார நிகழ்வாக, நேற்று பிரதேச செயலக அலு வலர்கள் நடை பவனியை மேற் கொண்டனர். நேற்றுக்காலை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்த குறித்த நடைபவனி, இராமலிங்கம் வீதி ; டச்சு வீதி, பெருங்குளம் சங்கத்தானை வீதி, பருத்தித்துறை வீதி, ஏ- 9 வீதியூடாக பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. இதேவேளை பிரதேச செயலகத்தால் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் விளையாட்டு மற்றும் மேம்பாட்டு வாரச் செயற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுக்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும். (ஐ-9)

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்

அருளாசான் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆராய்ச்சி செய்து மனிதகுலம் மேம்படவென இவ்வுலகுக்கு அளித்துச் சென்றுள்ள அற்புதக் கலையே மனவளக்கலை யோகாவாகும்.

### முழுமைநல வாழ்வுக்கு மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்

1. எளிய முறை உடற்பயிற்சிகள்
2. எளியமுறை தியானப் பயிற்சிகள்
3. எளியமுறை காயகல்ப பயிற்சி
4. அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சி.

காலம் :- **11.02.2017 தொடக்கம் 17.02.2017 வரை**
**(11.02.2017) சனிக்கிழமை பயிற்சி பற்றிய இலவச அறிமுகவுரை.**
நேரம் :- மாலை 5 மணி தொடக்கம்
இடம் :- யாழ்.அறிவுத் திருக்கோவில்.

### பயிற்சி வழங்குபவர் :-

**மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள்.**
**(தமிழ்நாடு, இந்தியா)**

### அகத்தாய்வு II

11.02.2017 - 12.02.2017 (சனி,ஞாயிறு) ஆகிய தினங்களில் காலை 7 மணி தொடக்கம் 10 மணிவரை நடைபெறும். இதில் அகத்தாய்வு I முடித்தவர்கள் பங்குபற்றலாம்.

### கூட்டுத்தவம்

தினமும் காலை 6.10 மணிமுதல் 6.30 மணிவரையும், மாலை 4 மணிமுதல் 4.30 மணிவரை அறிவுத் திருக்கோவிலில் கூட்டுத்தவம் நடைபெறுகின்றது. மனவளக்கலை பயின்ற அன்பர்கள் கலந்துகொள்வதன் மூலம் உங்கள் தவ ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு காலை 9 மணிமுதல் மௌனம் அனுஷ்டிக்கப்படும்.**

மேற்படி பயிற்சிகளைப் பெற்று பயன்பெறவென அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**

**யாழ்ப்பாணம்.**
**மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.**
**021 222 2772, 071 440 3268**

# முழுநிலாக் கலைவிழாவும் சாதனையாளர் கௌரவிப்பும்

வவுனியா, பெப்.10

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் முழுநிலாக் கலைவிழாவும் சாதனையாளரை மேன்மைப்படுத்தும் நிகழ்வும், வவுனியா நகர சபை யின் கலாசார மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவார். கௌரவ விருந்தினர்களாக மாகாணக் கல்விப் பணிப் பாளர் செ.உதயகுமார், மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் செ.அன்ரன் சோமராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்களான செ.மயூரன், ம.தியாகராஜா, தர்மபால செனவிரத்ன ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கு.சிதம்பரநாதன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஸ்ரீகந்தராஜா மற்றும் கல்விசார், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்த நிகழ்வில் பல கலை நிகழ்வுகளும், சாதனையாளர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன. (கு-402)



# வாழைக் குலைகள் திருட்டைத் தடுப்பதற்கு பொலிஸாரின் ரோந்து

## விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

அச்சுவேலி.பெப்.10

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வாழைத்தோட்டங்களில் இருந்து இரவு வேளைகளில் .வாழைக்குலைகள் திருடப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் ரோந்து நடவடிக்கையை அதிகரிக்க வேண்டும் என விவசாய அமைப்புக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், அச்செழு ஆகிய பிரதேசங்களில் உள்ள வாழைத்தோட்டங்களிலிருந்து இரவு வேளைகளில் வாழைக் குலைகள் திருடர்களால் திருடப்படுகின்றன. திட்டமிட்ட முறையில் வாழைக்குலைத்திருட்டு நாளாந் தம் அதிகரித்துவருவதாக விவ சாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு, வாழைக்குலைத்திருட்டை அதிகரிக்கச் செய்திருப்பதால், பொலிஸார் இரவு வேளைகளில், வீதிரோந்து நடவடிக்கையை அதிகரிப்பதால் ஓரளவுக்குத் திருட்டைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கும் விவசாயிகள், இது தொடர்பாக கோப்பாய், அச்சுவேலி பொலிஸ் நிலையங்களின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர்.

ஆலய உற்சவங்களின் ஆரம்பம் மற்றும் வாழைக்குலை உற்பத்தி குறைவடைந்த நிலை ஆகியவை வாழைப்பழத்தின் விலையை அதிகரிக்கச் செய்துள்ளது.

கதலி வாழைப்பழம் ஒருகிலோ 90 ரூபா தொடக்கம் 110 ரூபா வரையும், கப்பல் வாழைப்பழம் ஒரு கிலோ 140 ரூபா தொடக்கம் 180 ரூபா வரையிலும், இதரை வாழைப்பழம் ஒருகிலோ 70 ரூபா தொடக்கம் 90 ரூபா வரையும், மொந்தன் (கறி) வாழைக்காய் கிலோ ஒன்று 60 ரூபாவில் இருந்து 90ரூபா வரையும் விலை போகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-11)

# நகை திருட்டு முறைப்பாடு குறித்து எதுவும் தெரியாது

## கை விரித்தார் பொலிஸ் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், பெப்.10

நகைகள் திருட்டுப்போனமை தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள் எதுவும் தனக்குத் தெரியாது என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பாதிகாரி தெரிவித்தார்.

கடந்த வருடம் நகைகள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது, சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்று வரை இது தொடர்பான எந்தத் தகவலையும் பொலிஸார் வெளியிடவில்லை என முறைப்பாட்டாளரான விக்னேஷ் தெரிவித்தார்.

மானிப்பாய் விநாயகர் ஆலயத் திருவிழா உற்சவத்துக்காக கொழும்பில் இருந்து தனது குடும்பத்தினருடன் வருகை தந்த விக்னேஷ் என்பவர் மானிப்பாயில் உள்ள தனது தாயாரின் வீட்டில் தங்கி நின்று திருவிழாக் காலம் முடிவு பெற்றதும் யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்தில் கொழும்புக்குச் சென்றுள்ளார். கொழும்பு சென்ற பின்னரே கைப்பையினுள் வைத்திருந்த நகைகள் காணாமற் போயிருந்த விடயம் தெரிய வந்தது. தாலிக்கொடி ஒன்றும் காப்புக்களும் அடங்கலாக 21 பவுண்கள்மதிக்கத்தக்கநகைகளே திருட்டுப்போயின. பேருந்தில்பயணிக்கும்போது கைப்பை பாதுகாப்பாக இருந்ததாகவும், கொழும்புக்குப் புறப்பட முன்னரே நகைகள் திருடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து மீண்டும் மானிப்பாய்க்கு வருகை தந்த விக்னேஷ் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவுசெய்தார். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், 21ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதுவரை அதற்கான எந்தப் பதிலையும் பொலிஸார் தெரிவிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இன்றுவரைநகைகள் திருடப்பட்டமை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்படவில்லை- என அவர் விசனம் தெரிவித்தார். இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, குறித்த நபரால் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது எனப் பதிலளித்து தொலைபேசியையும் துண்டித்தார். (கு-21,8)


# மரண அறிவித்தல்



## திருமதி பரஞ்சோதி தங்கராஜா

யாழ்.கோண்டாவில் வடக்கு, அன்னங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி தங்கராஜா 06.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராச்ம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தங்கராஜாவின் அன்பு மனைவியும், பகீரதன் (ஜேர்மனி), வாசுகி (ஜேர்மனி), தமயந்தி (ஜேர்மனி), யசோதரா (ஜேர்மனி), ராங்காதரன் (நெதர்லாந்து), கிரிதரன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராச தர்மபூபதி (கரம்பன்), தங்கவேலாயுதம் (வவுனியா), அஞ்சலிதேவி (கொழும்பு), சந்திரபாலன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலட்சுமி (ஜேர்மனி), நாகேந்திரன் (ஜேர்மனி), சிவபாலன் (ஜேர்மனி), கீதாகரன் (ஜேர்மனி), ஜோதீஸ்வரி (நெதர்லாந்து), சிவாஜினி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நடராசா (கரம்பன்) மற்றும் அமிர்தாம்பிகை (வவுனியா), தப்தர் ஜெயலானி (கொட்டடி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சங்கீர்த்தனா, காலஞ்சென்ற பிரவீனா மற்றும் அர்த்தனா, சுபிக்சனா, அனன்யா, அரவிந், சந்திகா, சஞ்னா, கதிர், யசிகா, ஆர்த்திகன், சைனிகா, சாருஜன், சில்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை முற்பகல 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் வடக்கு கலைவாணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோகுலவீதி,
கோண்டாவில் வடக்கு.

(J/8098)(11)

தகவல்:
குடும்பத்தினர்.

021 300 2498



# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் தனராஜா
**துளசிகா (துளசி)**

(கலைப்பீட 2 ஆம் வருட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)



அன்னையின் மடியில்
06.09.1990

ஆண்டவன் பாதத்தில்
26.01.2013



ஆண்டு நான்கு அகன்றோடிப் போனாலும்
- ஆறுமோ நெஞ்சம்
இன்று உமது நாள் எம் நெஞ்சை
- வாட்டுகின்றதே
கள்ளம் கபடமற்ற எங்கள்
- கண்மணியே துளசிகா...
எம் நினைவு நிறைவேறாது போயிற்றே!
உம்மோடு நிம்மதியும் முற்றாய் இழந்து
நிற்கதியாய் நிற்போம் என்று கனவிலும்
- நினைத்துப் பார்க்கவில்லை
துடுப்பை இழந்த படகெனவே துன்பக்
- கடலில் தத்தளித்தே
கரைக்கும் ஒதுங்க முடியாத
- கண்ணீர் காவியம் இதுவே
எம் இதயம் நெகிழ்ந்த
-கண்ணீர் துளிகள் தான் துளசிகா....

வாடி நிற்கிறோம் உன் பிரிவாலே
கூடி நாம் மகிழ்ந்திடலாம் பிறப்பெடுத்து வாரீரோ?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
(தாய், தந்தை, சகோதரர்)
45/ 3A,ஞானவை[illegible]ர் லேன்,
பலாலி வீதி, கோண்டாவில்

# மக்களின் காணிகளை அபகரிக்கும் வன இலாகா

## வட மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ஜீ.குணசீலன் குற்றச்சாட்டு

**மன்னார், பெப். 10**

மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயம் சார்ந்த விளைநிலங்களும், விவசாய நடவடிக்கைகளுக்காக காலம் காலமாக பயன்படுத்தி வந்த காணிகளும் 'வன இலாகா'வினால் தொடர்ச்சியாகத் தமது பகுதிகளாக அடையாளமிடப்பட்டு காணி அபகரிப்பு இடம் பெற்று வருவதாக வட மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'வன இலாகா' வினால் தொடர்ச்சியாகக் காணி அபகரிப்பு இடம் பெற்று வருவதோடு அந்தக் காணிகளுக்கு உரிய மக்களைக் குறித்த காணிகளுக்குள் செல்லத் தடை விதித்து புதிய பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாகவே குஞ்சுக்குளம் கிராமத்தில் மக்களுக்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் குறித்த காணிகளில் விவசாயம் செய்வதற்கான அனுமதியை அரசிடம் இருந்து உத்தியோகபூர்வமாக 1965 ஆம் ஆண்டில் பெற்றுள்ளனர்.

இவர்களிடம் குறித்த காணிகளுக்கான அரச அனுமதிப்பத்திரங்களும் மற்றும் காணி உறுதிகளும் காணப்படுகின்றன.

அப்படி இருந்தும், குறித்த காணிகள் வன இலாகாவுக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டு, குறித்த காணிகளுக்கு எல்லைக்கற்கள் போடப்பட்டு மக்கள் உள்ளே செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அவரால் நேரடியாக வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் மக்களின் கையில் இருந்தும்கூட, தற்போது குறித்த காணிகள் வன இலாகாவுக்குச் சொந்தமானவை எனவும், குறித்தகாணி அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியற்றவை என்று தடைகளை விதித்து வருகின்றனர்.

இதனால் குறித்த காணிகளுக்குரிய மக்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளதோடு மாகாண சபை உறுப்பினர் என்ற வகையில் எனது கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த குஞ்சுக்குளம் கிராம மக்கள் உட்பட மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்கள், பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இந்த நிலையில் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ளும் வகையில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குக் குறித்த மக்களுக்கு வன இலாகாவின் செயற்பாடுகள் தடையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரச்சினை தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. வடமாகாண சபையூடாக எங்களாலும் ,மத்திய அரசின் சார்பில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளாலும் ,நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் குறித்த பிரச்சினை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இதற்கான தீர்வுகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். குறித்த பிரச்சினை, வன இலாகாவின் மனிதாபிமானமற்ற ஓர் ஆக்கிரமிப்பாகவும் கருதப்படுகின்றது.

குறித்த ஆக்கிரமிப்புத் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அனைவருக்கும் தெளிவு படுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினை தொடர்பாக முதலமைச்சருக்கும் தெளிவுபடுத்தவுள்ளேன். ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து குறித்த பிரச்சினைக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இல்லாது விட்டால் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கி எமது மக்களுக்குரிய குறித்த காணிப்பிரச் சினையை தீர்க்க வேண்டிய நிலைக் குத்தள்ளப்படுவோம் என்பது உண்மை என அவர் மேலும் தெரிவித்தார்.

(க-56)



வல்லைச் சந்தியில் நேற்று முன்தினம் காணப்பட்ட புகைமூட்டத்தால் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் போக்குவரத்துக்கள் சிரமத்துடன் நடைபெற்றன. வல்லைச் சந்தியிலிருந்து அச்சுவேலிக்குத் திரும்பும் சந்திக்கு அருகிலுள்ள வயல் காணிக்குள் இனந் தெரியாதோரால் தீ மூடப்பட்டதால் அத் தீ புற்தரைப் பகுதியிலும் பரவி மூண்டது. இதனால் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அப்பகுதியில் புகை சூழ்ந்ததால் அப்பகுதியினூடான போக்குவரத்துகள் சிரமத்துடன் நடைபெற்றன. (க-422)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் உள்ள உணவகங்களுக்குத் தண்டம்

மாங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவந்த ஏழு உணவகங்களுக்கு 86 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள் ளது.

மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள உணவகங்கள் மீது மாங்குளம் பொதுச் சுகாதாரப் பொறுப்பதிகாரி வியேந்திரன் தலைமையில் பரிசோதனைகள் இடம் பெற்றன. மாங்குளம் மற்றும் முறிகண்டிப் பகுதிகளில் இடம்பெற்ற சோதனைகளில் சீரான சுகாதாரத்தைப் பின்பற்றாது இயங்கி வந்த ஏழு உணவகங்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. உணவகங்களுக்கு எதிரான வழக்குகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இரண்டு கிழமைகளில் கடைகளைச் சீர்செய்ய வேண்டும் அல்லாத விடத்து உரிமம் செல்லுபடியற்ற தாக்கப்படும் எனவும் நீதிமன்றத்தினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மொத்தமாக 86 ரூபா தண்டமும் விதிக்கப் பட்டது. (க- 7)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த (12.01.2017) வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர்
**பேரம்பலம் ஜெயரட்ணம்**
(MPCS, முன்னாள் முகாமையாளர், நல்லூர்)

தோற்றம் 1952.11.27
மறைவு 12.01.2017



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.02.2017 வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை 11.02.2017 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத் திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இந்துமகாவித்தியாலய வீதி,
கோண்டாவில் மேற்கு.

குடும்பத்தினர்.

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 27.05.1949
ஆண்டவன் அடியில் 10.02.2013



அமரர் இராமன் யோகராசா
(கிராம சேவையாளர்J.P)

பிறப்பு 23.01.1988
அழிப்பு 14.02.2013



அமரர்
துரைராஜசிங்கம் துரேந்திரா
(ஹற்றன் நஷனல் வங்கி-கிளிநொச்சி)

நான்கு ஆண்டுகள் ஓடிற்று
காலனவனின் பிடியில் விழுந்து
இருந்தும் இன்றும் வலிக்கிறது
எம் இதயங்கள் உங்கள் பிரிவால்....

நெல்லியோடை
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
யோகராசா நிஜேந்திரா (நிஜேன்)

### 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 26 ஆவது பிறந்தநாளும்

அமரர்
**தங்கராசா சுரேந்தினி**





மனம் மகிழ
1991.05.16

மண் மகிழ
2011.01.19

திதி: 2017.02.10

ஆறாண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உன் முகம்
காவியமாய் வாழ்ந்தாய்
உன்னை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினும் இனிய உன்குணம்
தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில்
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சுதன் (தச்சுத் தொழிலகம்)
விக்னேஸ்வரா விதி, சங்கானை.
077 659 4625

தங்கராசா குடும்பத்தினர்.

(சி.28305) (13)

# புதைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, பெப்.10

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு ரி-56 ரக தன்னியக்கத் துப்பாக்கிகள், ஒரு மகசீன் மற்றும் 176 துப்பாக்கி ரவைகள் என்பனவே மீட்கப்பட்டன.

முறக்கொட்டாஞ்சேனை ஜின்னா வீதி, பாலையடித் தோணாப்பகுதியில் தனியார் காணியொன்றின் உரிமையாளரொருவர் தனது நிலத்தை உழவு இயந்திரத்தால் பண்படுத்திக் கொண்டிருந்த போது இந்த ஆயுதங்கள் வெளிக்கிளம்பின.

உடனடியாக இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இந்த ஆயுதங்கள் போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்டவையாகவும், பழைமையானவையாகவும் இருப்பதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பொலித்தீன் பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் இந்த ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவின ரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-ய-46,47)



# கிழக்கிலும் காணிப் பிரச்சினைகள்

கொழும்பு,பெப்.10

வடக்கு மாகாணத்தைப் போன்றே கிழக்கு மாகாணத்திலும் காணிப் பிரச்சினைகள் நிலவுகின்றன. போர்க்காலத்தில் எந்தவிதத் தடையும் இன்றி பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட காணிகளில், போரின் பின்னர், அந்த நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.- இவ்வாறு நகர திட்டமிடல் அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதி அமைச்சின் கட்டளைச் சட்டங்களின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான பிரேரணைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

லஹுகல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரதெல்ல மேற்குப் பகுதியில் 151 ஏக்கர் காணிகளில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு வந்த 63முதல் 75 வரையான குடும்பங்ளுக்கு தற்போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் அங்கு பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தால் அந்த மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், வனப்பாதுகாப்புப் பிரதேசமொன்று வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஒரு மாத காலத்துக்குள் நாடாளுமன்றத்தில் அதற்கான அனுமதி பெறப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது காலாவதியாகிவிடும்.-என்றார். (ஐ)



# மலையகத்தில் முதலாவது பெருந்தோட்டக் கிராமம்

## அரச தலைவரால் திறந்து வைப்பு

நுவரெலியா, பெப்.10

மலையகத் தோட்டப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது பெருந்தோட்டக் கிராமத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக்காலை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.


நுவரெலியா மாவட்டத்தில் அக்கரபத்தனை ஊட்டுவில் தோட்டத்தில் 150 தனித்தனி வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அவற்றில் முதற்கட்டமாக 71 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றை அரச தலைவர் நேற்றுத் திறந்து வைத்துப் பயனாளிகளிடம் கையளித்தார்.

மலையக புதிய கிராம உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் எண்ணக்கருவுக்கு அமைய, லயன் வீடுகளுக்கு மாற்றாக இந்தப் புதிய பெருந் தோட்டக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தனி வீடுகள் ஒவ்வொன்றும் 7 பேர்ச்சஸ் காணியில் 550 சதுர அடியில் இரண்டு அறைகள், சமையலறை, வரவேற்பறையுடன் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீட்டுக்கான மின்னிணைப்பு மற்றும் குடிதண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டு உரிமையாளர்கள் அனைவருக்கும் பசுமை பூமித் திட்டத்தின் கீழ் காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன. காணி உறுதிப்பத்திரம் வழங்குவதன் ஞாபகார்த்தமாக முத்திரை வெளி யீடும் இடம்பெற்றதோடு, பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் வீட்டு உபகரணங் களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மலையக அமைச்சர்கள் உள் ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மலையகத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் ஆங்கிலேயர் நிர்மாணித்த லயன் குடியிருப்புக்களிலேயே இது வரை வாழ்ந்து வந்தனர். புதிய அரசு பதவிக்கு வந்ததை அடுத்து 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் 411 வீடுகளை நிர்மாணித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ய-43)



# இணையத்தளங்களை பாதுகாக்க விசேட வேலைத்திட்டம்

கொழும்பு,பெப்.10

அரச மற்றும் தனியார் இணையத்தளங்களை ஊடுருவுபவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றன. இதனால் அரச மற்றும் தனியார் இணையத் தளங்களைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளது. கடந்த வருடம் மட்டும் 12 இணையத்தளங்கள் இவ்வாறு ஊடுருவப்பட்டுள்ளன. இதேவேளை, அரச மற்றும் தனியார் வலைத் தளங்களை நிர்வகிக்கத் தேவையான பயிற்சி, பிரத்தியேகமாக வழங்கப்படவுள்ளது எனவும் அந்தக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)





## பணியாளர் தேவை

பரந்தன் A9 வீதியில் அமைந்துள்ள சிவகுரு காட் வெயார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவைப்படுவதால் குறிப்பிட்ட நிறுவனத்தில் அலுவலக நேரத்திலோ அல்லது கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது நேரிலோ தொடர்புகொள்ளவும்.

1. கணக்காளர்- (கணினி அறிவு போதியளவு. முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்)
2. சோடா விற்பனைப் பிரதிநிதி (அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்)
3. மோட்டார் சைக்கிள் விற்பனையாளர் (தேர்ச்சியும். அனுபவமும் உடையவராக இருத்தல்)
4. கணக்காய்வாளர் (கணினி அறிவு. போதிய அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்)

**077 772 2305** (1/7982) (22

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

| வடமாகான சபை கௌரவ உறுப்பினர் திரு.இமானுவல் ஆனல்ட் | வடமாகான சபை கௌரவ உறுப்பினர் திரு.அரியகுட்டி பரஞ்சோதி |
|---|---|

எமது கார்மேல் அன்னை ஆலய மண்டபத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தங்களது 2016 ஆண்டிற்கான பிரமான அடிப்படையிலான மூலதன நன்கொடையில் இருந்து ஒரு தொகை பணத்தை தந்துதவிய வடமாகாண சபை கௌரவ உறுப்பினர்களான **திரு.இமானுவல் ஆனல்ட்** அவர்களையும் **திரு.அரியகுட்டி பரஞ்சோதி** அவர்களையும் பாராட்டி மனதார வாழ்த்துகிறோம்.

**குருநகர் பரி.கார்மேல் அன்னை ஆலய நிர்வாக சபையினரும், பக்தி சபையினரும்.**

Congratulations

## சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான கற்கை நிறுவகம்

**மனித உரிமைகள் தொடர்பான இலவச சான்றிதழ் கற்கை நெறி**

★சமூகத்தில் மனித உரிமை பாதுகாவலர்களை உருவாக்குதல்.
★கற்கை நெறிக்கான பெயர்:- மனித உரிமைகள் தொடர்பான மூன்று மாதத்திற்கான சான்றிதழ் கற்கை நெறி ( three month course)
★ சுயவிவரக்கோவையை அனுப்பி வைப்பதற்கான கடைசி திகதி 2017.02.20
★ சனிக்கிழமைகளில் மட்டும் வகுப்புக்கள் நடைபெறும். 9.00 - 4.00
★இக்கற்கைநெறியானது முற்றிலும் இலவசமானது.
★(A/L) இல் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
★சுயவிவரக்கோவைகளை தபால் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
★மேலதிக விவரங்களை தெரிந்து கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் (021 224 1494, 077 324 1808.
★(Email: lhreducation14@gmail.com,no.438,K.K.S Road,Kondavil,Jaffna)



## தனியார் பல்கலைகளை நிறுவ வாய்ப்பு வழங்க வேண்டும்

### கல்வி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு,பெப்.10

பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்களில் இணைவதற்கான தகுதியுடன் வெளியேறும் மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகங்களில் சேர்க்க முடியாவிடின், நாட்டில் சைட்டம் போன்ற தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ அரசு வாய்ப்பு வழங்க வேண்டும்-இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு விதிக்கும் தரத்தைப் பேண தனியார் பல்கலைக்கழகங்கள் சம்மதிக்குமானால், அவற்றுக்குக் காணி வழங்குவதில் எந்தவித ஆட் சேபனையும் இல்லை.

குளியாப்பிட்டிய மற்றும் சப்ரகமுவ பகுதிகளில் இரண்டு மருத்துவப் பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், சப்ரகமுவவில் பல்கலைக்கழக நிர்மாணப் பணிகளுக்கு 2 பில்லியன் ரூபா அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுத் தரத்தின்படி குறிப்பிட்டளவு சனத்தொகைக் கேற்ப, குறிப்பிட்ட அளவு மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எங்களால் அந்த இலக்கை இன்னமும் அடைய முடியவில்லை. -என்றார். (ஐ)

### 15 அரச நிறுவனங்களால்

# நாட்டுக்கு ரூ.110 பில்.நட்டம்



### கோப் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,பெப்.10

"அரச நிறுவனங்களால் எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு மேற்கொள்ளப்பட் பங்களிப்பு மற்றும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கோப் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அதில் 15 அரச நிறுவனங்களால், நாட்டுக்குச் சுமார் 110 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது"- இவ்வாறு கோப் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

15 அரச நிறுவனங்கள் தொடர்பான, அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) விசாரணை அறிக்கையை நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2016ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியில் இருந்து ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விசாரிக்கப்பட்ட 15 நிறுவனங்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய கோப் குழு அறிக்கை நேற்று (நேற்று முன்தினம்) சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. கோப் குழுவால் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் மூன்றாவது அறிக்கை இதுவாகும்.

கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் (ச.தொ.ச), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை கிரிக்கெட் நிறுவனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபைக்குரிய நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம், இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள 4 நிறு வனங்கள், துறைமுகங்கள் அதிகாரசபை, குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 15 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை விவரங்களே இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் நட்டம் என்பதை விடவும், வீண் விரயமிக்க, பொருளாதாரத்துக்குக் கேடான பல்வேறு திட்டங்கள் இந்த நிறுவ ணங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அந்த அதிகாரசபைக்குச் சம்பந்தமில்லாமல் சில திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு மில்லியன் கணக்கான டொலர்களும், யூரோக்களும் கிடைத்துள்ளன. அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்துள்ளோம்.

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் 2 ஆயிரத்து 918 மில்லியன் ரூபா நட்டம், அம்பாந்தோட்டை துறைமுகத்தால் ஏற்பட்ட நட்டம் போன்ற விவரங்களும் இந்த அறிக்கை யில் உள்ளன. இந்த அறிக்கையை விவாதத்துக்கு உட்படுத்தி உரிய நடவ டிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கேட்டுக்கொள்கிறேன்.- என்றார். (ஐ)



### மகிந்தவின் ஆட்சிக்காலத்தில்

## இலங்கை – சீனா உறவை தவறாக நோக்கியது இந்தியா

### நாமல் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.10

"முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் இலங்கை கொண்டிருந்த உறவை, இந்தியா தவறான கண்கொண்டே நோக்கியது" இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'தி இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்;.

அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு, சீனாவுடன் பேணி வரும் தொடர்புகள் குறித்து இந்தியா அமைதி காத்து வருகிறது. என்னுடைய தந்தையான மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தின்போது, இலங்கைக்குரிய நிலத்தையும், நீரையும் வேறொரு நாடு பயன்படுத்துவதற்கு இடமளிப்பதில்லை என்ற கொள்கை கடைபிடிக்கப்பட்டிருந்தது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நிர்மாணிக்குமாறு, இந்தியாவுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் இந்தியாவின் ஒப்பந்தத்தில் இலங்கைக்கு அந்தத் துறைமுகத்தை மீளக் கையளிக்கும் நோக்கம் இருக்கவில்லை. இருப்பினும், சீனா முன்வந்து மக்களுக்காகக் காலத்தைக் கடத்தாது வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது.

என்னுடைய தந்தையின் ஆட்சிக் காலத்தின் போது இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ அல்லது வேறு எந்தவொரு நாட்டுக்குமோ எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. -என்றார். (ஐ)

## அர்ஜுனின் செலவுகளை ஆராய மைத்திரிக்குக் கடிதம்

கொழும்பு,பெப்.10

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் தனிப்பட்ட மற்றும் உத்தியோகபூர்வச் செலவுகள் தொடர்பிலான விசாரணையொன்றை மேற்கொள்வது அவசியம் எனத் தெரிவித்து, ஊழல் எதிர்ப்பு முன்னணி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனால், அரசதலைவரின் அனுமதியின்றி கிட்டத்தட்ட 662 மில்லியன் ரூபா பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக் குமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## புலித்தொப்பி விவகாரம்: மூவருக்கும் மறியல்

கொழும்பு,பெப்.10

தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பினரின் இலச்சினை பொறிக்கப்பட்ட தொப்பியொன்றை இலண்டனுக்கு அனுப்ப முயன்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை கொழும்பு நீதவான் நீதிமன்றால் நீடிக்கப்பட்டது.

சந்தேகநபரான நகுலராசா, அரச புலனாய்வுச் சேவையில் இருந்தவர் எனவும் தற்போது அவர், 9 மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பிணை மனுவில்.

பிணைமனுத் தொடர்பிலான நிலைப்பாட்டை அறிவிக்குமாறு, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருக்கு, கொழும்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல கட்டளையிட்டிருந்தார்.

அதற்கமைய, தமது நிலைப்பாடு தொடர்பான அறிக்கையை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் சமர்ப்பித்தனர்.

அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து, பிணை வழங்குவது தொடர்பில் 22 ஆம் திகதி அறிவிக்கப்படும் என உத்தரவிட்ட நீதிவான், சந்தேகநபர்களான ஜேசுரத்தினம் ஜெகசம்சன், மகாதேவா பிரசன்னா மற்றும் சுப்பிரமணியம் நகுலராசா ஆகியோரின் விளக்கமறியலையும் நீடித்து உத்தரவிட்டார். (ஐ)



### ஒளிவிழா நிகழ்வு

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் கடந்த ஆண்டுக்கான ஒளிவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப.8.30 மணிக்கு வித்தியாலய கலை யரங்கில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் நுணாவில் ஆலய போதகர் எம்.என்.கென்னடியும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.திருக்குமாரும் விஞ்ஞான பாட முதன்மை ஆசிரியர் திருமதி கே.பீ. எஸ்.வின்சன் நவராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் கே.அரியதாஸும் ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ஞா.குமாரசாமியும் உள்ளூராட்சி திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் திருமதி றொசானி தேவானந்தா ஆகியோரும் கலந்து கொள்வர். (க-9)

# வீதிச் சமிக்ஞைகளை அவதானிக்காததால் வாகன விபத்துக்கள்

யாழ்ப்பாணம்,பெப்.10

வீதிச் சமிக்ஞை விளக்குகளை அவதானிக்காமல் கண்டபடி வாகனங்களில் பயணிப்பதால் விபத்துக்களைத் தடுக்க முடியாமல் உள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு என்றே வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டன. ஆனால் பலர் அதனைக் கருத்தில் கொள்ளாமலே தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

பச்சை விளக்கு ஒளிர்ந்து முடிவுறும் தறுவாயில் சிவப்பு விளக்கு ஒளிரத் தொடங்கிய சமயம் அதை மீறிச் சிலர் வாகனத்தை அதிவேகமாகச் செலுத்துவதால் எதிர்ப் பக்கத்திலுள்ள பச்சை விளக்கு ஒளிரும் போது வாகனங்கள் செல்லும் போது விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அதனைவிட வாகனங்களில் சமிக்ஞையை ஒளிரவிடாது சந்தியில் ஒருபக்க முனையாகத் திரும்பும் சமயத்திலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதே போன்றதொரு விபத்து நேற்று கோப்பாய்ச் சந்தியில் இடம்பெற்றது. இதில் மூன்றுபேர் காயப்பட்டதோடு, மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்தன.

சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் வீதிச் சமிக்ஞை விளக்குகளைச் சகல வாகனங்களும் பயன்படுத்தி போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

விபத்துக்களால் ஏற்படும் தேவையற்ற அநியாய உயிரிழப்புக்கள் மற்றும் உடலுறுப்புக்களில் ஏற்படும் பாதிப்புக்கள் காயங்கள் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-10, 17)



## தீயினால் வீட்டை இழந்த குடும்பத்துக்கு உதவி

நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் வழங்கினார்

முல்லைத்தீவு, பெப். 9

முல்லைத்தீவு மூங்கிலாற்றில் நேற்று முன்தினம் இரவு தீயால் வீட்டை இழந்து குடும்பத்தினருக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் உதவிப் பொருள்களை வழங்கினார்.

இறுதிப்போரில் கணவனை இழந்து தன்னுடைய மூன்று பிள்ளைகளுடன் மூங்கிலாற்றில் வசித்து வந்து நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் பரவிய தீயினால் அனைத்துப் பொருள்களும் முற்றாக அழிவடைந்தன. இந் நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் பாதிக்கப்பட்ட குடும்பதினருக்கு உடனடித் தேவைக்கான சில பொருள்களை வழங்கினார். (க-7)

# நேரக்கணிப்பாளர் மீது பஸ் நடத்துநர் தாக்குதல்

## கோப்பாய் சந்தியில் சம்பவம்

யர்ழ்ப்பாணம், பெப்.10

தனியார் பேருந்து நேரக் கணிப்பாளர் ஒருவர் தனி யார் பேருந்து நடத்துநரால் தாக்கப்பட்டதில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பருத்தித்துறை (750) தனியார் பேருந்து சங்கத்தின் நேரக் கணிப்பாளர் மா. நாகராசா (வயது - 60) என் பவரே தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் பிற்பகல் 2.30மணியளவில் கோப்பாய் சந்தியில் தமது கடமையில் மா. நாகராசா ஈடுபட்டிருந்தார். நேரக் கணிப்பாளர் கட மையில் பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி தனியார் பேருந்து சங்கத்தினர் இரு வர் கடமையில் ஈடுபடுகின்றமை வழமையாகும். ஆனால் சம்பவ தினத்தன்று அச்சுவேலி நேரக் கணிப்பாளர் கடமைக்கு சமுகம் தராததால் அச்சுவேலி தனியார் பேருந்து நேரக் கணிப்பாளராகவும் இவர் கடமையில் ஈடுபட்டுள்ளார். அப்போது அச்சுவேலி தனியார் பேருந்து நேரம் தாழ்த்தி வந்தமைக்காகக் கடமையில் இருந்த நாகராசாவினால் தாமதச் சிட்டை வழங்கப்பட்டது. அதனை ஏற்க மறுத்த பஸ் நடத்துனர் நேரக் கணிப்பாளரான நாகராசாவைத் தாக்கியுள்ளார்.

பின்னர் நாகராசா கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பருத்தித்துறை தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அச்சுவேலி தனியார் பேருந்து சங்கத்தின் தலைவருடன் தொடர்பு கொண்டபோது சம்பவத்தில் ஈடுபட்ட நடத்துனரை தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்துள்ளதாகத் தெரிவித்தார். (க-422)

# இலத்திரனியல் தொடர்பான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் பெப் 10

உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் பொது நூலகங்களில் இலத்திரனியல் பொது நூலகங்களாகத் தெரிவு செய்யப்பட்ட 17 பொது நூலகங்களின் அலுவலர்களுக்கான இலத்திரனியல் நூலகச் செயற்பாடுகள் குறித்த பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியாவில் நடத்தப்படவுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் இலத்திரனியல் நூலகங்களாகத் தெரிவு செய்யப்பட்ட நூலகங்களிலிருந்து தலா 2 அல்லது 3 அலுவலர்களைப் பங்கு பற்றுமாறு திறந்த பல்கலைக்கழக இலத்திரனியல் பொது நூலக நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளரும் நூலகருமான டபிள்யு.செனவிரத்ன அறிவித்துள்ளார்.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பொது நூலகங்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கு யாழ்.பல்கலைக்கழக மூத்த உதவி நூலகர் எஸ்.கேதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் அறிவித்துள்ளார். (க-9)

**ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி**



தாயின் மடியில்
12 . 06 . 1974

ஆண்டவன் அடியில்
22.01.2008

**செல்வராசா துளசிதாசன்**
(Tulasi Cable T.V. உரிமையாளர்)
திதி: தைமாத பூரணை (10.02.2017)

சின்னதொரு புன் சிரிப்பு
அமைதியான பேச்சு
எளிமையின் வடிவு எல்லாம்
உன்னிடத்தில் கண்டோம் அண்ணா
அன்புடனே அரவணைக்கும் அம்மாவும்
ஆசையுடன் வரவேற்கும் அப்பாவும்
பாசமுடன் பேசிச் சிரிக்கும் சகோதரர்களும்
உருகியழ வைத்து விட்டு ஓடி விட்டாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இ.7888)

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
077 314 4991

குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**திருமதி சாரதாதேவி குலசிங்கம்**



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி குலசிங்கம் 07.02.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி - விசாலாட்சி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் குலசிங்கத்தின் அன்பு மனைவியும் உருத்திரமூர்த்தி, கமலாதேவி, மனோகரமூர்த்தி, தமயந்திதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாமினி (சுவிற்சர்லாந்து), தீபனா (பிரான்ஸ்), தர்சினி (யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் செந்தில்நாதன் (சுவிற்சர்லாந்து), பரங்குன்றனார் (பிரான்ஸ்), கோகிலறமணன் (ஸ்ரீலங்கா ரெலிகொம்) ஆகியோரின் மாமியாரும் வினோஜன், கோபிகா, ஹரணி, பிருத்திகா, மதீபன், கவிராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு, கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

077 935 2520
(J/8003) (11)

**மரண அறிவித்தல்**

**திருமதி பாக்கியலக்சுமி தெட்சணாமூர்த்தி**



பிறப்பு:- 08.04.1934
இறப்பு:-06.02.2017

யாழ்.சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலக்சுமி தெட்சணாமூர்த்தி 06.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேதுகாவலன் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தியின் அன்பு மனைவியும், ஆனந்தராஜா, ரதிமணி, சசிதரன், தயாபரன், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், விநாயகமூர்த்தி, பரஞ்சோதி(சிவலிங்கம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், தங்கரத்தினம்பாள், இளையகுமார், கோமதி, ஜெயகௌரி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌசிகன், யதுசன், டிலக்சனா, ஆரன், லபோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, சுதுமலை,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஆனந்தராஜா (கனடா- 190 5201 7061),
இளையகுமார் (இலங்கை - 947 776 05916),
சசிதரன் (கனடா - 164 7709 9564),
தயாபரன் (இலங்கை- 9477 854 3781),
பாலகுமார் (இலங்கை - 947 761 57906) (J/8013) (11)



# பிலிப்பைன்ஸ் கடலில் தீவுகளை உருவாக்க சீனா கடும் முனைப்பு

### பன்னாட்டு உதவியைக் கோர முடிவெடுத்தது பிலிப்பைன்ஸ்

மனிலா, பெப்.10
பிலிப்பைனஸ் கடல் பரப்பிலும் செயற்கைத் தீவுகளை உருவாக்கி தென்சீனக் கடல் பரப்பில் ஏக ஆதிக்கம் செலுத்த சீனா முனைப்புக் காட்டுகிறது என்று குற்றஞ்சாட்டியது பிலிப்பைன்ஸ்.

தென்சீனக் கடற்பரப்பில் செயற்கைத் தீவுகளை உருவாக்கி, அந்தப் பகுதியை சொந்தம் கொண்டாடுகிறது சீனா. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு குறித்த பகுதியுடன் தொடர்புடைய பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான், வியட்நாம் ஆகிய நாடுகள் தமது கண்டனத்தைத் தெரிவித்தன. எனினும் சீனா தனது ஆக்கிரமிப்பை தொடர்ந்து அங்கே அரங்கேற்றி வருகிறது. இராணுவ போர் ஒத்திகையை நிகழ்த்தியது. ஆய்வுகூடங்களை அமைக்கும் நடவடிக்கையில் களமிறங்கியுள்ளது.

இதற்கு பன்னாடுகளில் இருந்து எதிர்ப்பு வெளிப்படுத்தப்படும் நிலையில் பிலிப்பைன்ஸ் கடற்பரப்பிலும் காலூன்ற சீனா எத்தனிக்கிறது என்று பிலிப்பைன்ஸின் பாதுகாப்புச் செயலாளர் குற்றஞ்சுமத்தினார்.

பிலிப்பைன்ஸின் கடலை ஒட்டிய பகுதிகளில் புதிய தீவுகளை உருவாக்கி தென் சீனக் கடலை, சீனா தனது முழு கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதற்கு நாம் அனுமதித்தால் இது எமது நாட்டுக்கும் தென்சீனக் கடலுடன் தொடர்புடைய நாடுகளுக்கும் மிகப் பெரிய பிரச்சினையாக மாறும். எனவே இந்த விடயத்தில் சீனாவுக்கு எதிராக பன்னாட்டு உதவியை நாம் பெறவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-எ)

# சசிகலா முதல்வராகக்கூடாது; வழக்கு இன்று விசாரணைக்கு

சென்னை, பெப். 10
சசிகலா முதல்வராகக் கூடாது என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தான் வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவியில் இருந்து நீக்கப்பட்டேன் என்று கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்து, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார் தமிழக முதல்வர் ஓ.பி.எஸ். கட்சித் தலைமை மீதும் அவர் காரசாரமான விமர்சனத்தை முன்வைத்தார்.



இதனையடுத்து சசிகலாவுக்கு தமிழகத்தில் பரவலாக எதிர்ப்பலை உள்ளது என்று கருதப்படுகிறது. சட்டப்பஞ்சா யத்து இயக்கம் முதல்வராக சசிகலா பதவி யேற்கக் கூடாது என்று தெரிவித்து, உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பி[...]
# பிணைக் கைதிகள் போல் ந[...]

### ஸ்டாலின் பரபரப்புக் குற்றச்சா[...]

சென்னை, பெப். 10
அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலாவால், சட்டமன்ற உறுப்பினர்கள் பிணைக் கைதிகளைப் போல் நடத்தப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டினார் தி.மு. கழகத்தின் செயல்தலைவரும் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின்.

அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடும் விமர்சனங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். இதனையடுத்து அவர் அ.தி.மு. கழகத்தின் பொருளாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பன்னீர்செல்வம், சட்டசபையில் தனக்கு பெருபான்மை சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிப்பேன் என்று தெரிவித்தார். சட்டமன்ற உறுப்பினர்களும் ஓ.பி.எஸ்ஸின் பக்கம் சாய்ந்து விடாமல் இருக்க அவர்கள் ஒவ்வொருவரும் நான்குபேர்



# அமெரிக்க தாக்குதலில் அல் குவைதா பிரதானிகள் 11 பேர் சாவு

டமஸ்கஸ், பெப். 10
சிரிய வான் படைத் தாக்குதலில் அல் குவைதாவைச் சேர்ந்த 11 முக்கிய பிரதிநிதிகள் கொல்லப்பட்டனர் என அமெரிக்கா தகவல் வெளியிட்டது. கொல்லப்பட்டவர்கள் ஒசாமா பின்லேடனுக்கு மிக நெருக்கமானவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வான் தாக்குதலிலேயே கொல்லப்பட்டனர் என்று சிரியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன் தினம் அமெரிக்கா அதை உறுதிப்படுத்தியது. (ம-எ)



# ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவாக இளைஞர்க[...] மெரீனாவில் பெரும் பொலிஸ் பாதுகா[...]

சென்னை, பெப். 10
தமிழகத்தில் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்துக்கு இளைஞர்களிடத்தில் பெரும் ஆதரவு உள்ளது - என்றும் அவர்கள் எந்த நேரத்திலும் மெரீனாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாம் என்றும் வந்த தகவல்களை அடுத்து, மெரீனாவில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கான தடையை நிரந்தரமாக நீக்க வலியுறுத்தி கடந்த மாதம் இளைஞர்கள், மாணவர்கள், பொது மக்கள் மெரினாவில் தொடர் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றனர். அதைத் தொடர்ந்து மீண்டும் போராட்டம் நடந்து விடக் கூடாது என்பதற்காக மெரீனா உட்பட 6 காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்னர் திரும்ப பெறப்பட்டது.

இந்த நிலையில், அ.தி.மு.க. நிர்வாகிகளுக்[...] தமிழக முதல்வர் ஓ[...]னீர் செல்வத்து[...] இடையே கருத்து [...]பாடு ஏற்பட்டுள்[...] இதைத்தொடர்[...] ஓ.பன்னீர்செல்வத்[...] ஆதரவாக இளைஞ[...] போராட்டம் நடத்த[...]மிட்டுள்ளதாக உ[...]துறை எச்சரித்[...] அடுத்து மெரீனா [...]கரையில் ப[...] பொலிஸ் பாதுக[...] போடப்பட்டது.

# ஹௌதி - ஏமன் அரசு மோதல் 32 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

சனா, பெப். 10
ஏமனில் ஹௌதி ஆயுததாரிகளுக்கும், அரச தரப்பினருக்கும் இடையில் மொகா நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போரில் 32 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் அரசுக்கும் ஹௌதி ஆயுதக் குழுவுக்கும் இடையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து போர் நடைபெற்று வருகிறது. ஏமனுக்கு ஆதரவாக சவூதி கூட்டுப்படைகள் உள்ளன. குறிப்பாக மொகா நகரில் தற்போது கடும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் மாத்திரம் இரு தரப்பிலும் சேர்த்து 32 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 24 பேர் ஆயுததாரிகள், 8 பேர் சிப்பாய்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



# ...பினர்கள் ...உள்ளனர்

## ...ச்சாட்டு



கொண்ட குழுவால் கண்காணிக் கப்படுகின்றனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

தி.மு. கழகத்தின் செயல்தலைவரான ஸ்டாலினும் இவ்வாறான ஓர் கருத்தையே பதிவுசெய்தார். அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைமையால் நட்சத்திர விடுதிகள் என்ற போர்வையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இது ஜனநாயக மாண்புக்கு முரணான செயல். எனவே அ.தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களின் மனவிருப்பத்தை ஆளுநர் உன்னிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டார்.

எனினும் விடுதிகளில் உள்ள அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப் பினர்கள் முழுச் சுதந்திரத்துடன் உள்ளனர் என்றும் அவர்களின் விருப்பப்படி அவர்கள் நடக்க முழு உரிமையும் வழங்கப்பட்டுள்ளது என்றும் கட்சித் தலைமை குறிப்பிட்டது. (ம-எ)

## பாலமேட்டில் நேற்று ஜல்லிக்கட்டு: அலங்காநல்லூரில் இன்று அரங்கேற்றம்

சென்னை, பெப். 10

மதுரை பாலமேட்டில் நேற்று ஜல்லிக்கட்டு கோலாகலமாக நடைபெற்றது. 800 இற்கும் மேற்பட்ட காளைகள் அதில் பங்கேற்றன என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஜல்லிக்கட்டு நடைபெற்றது. கிட்டத்தட்ட ஆயிரத்து 50 வீரர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். சிலருக்குக் காயம் ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டது.

ஜல்லிக்கட்டுக்கு புகழ்பெற்ற மதுரை அலங்காநல்லூரில் இன்று ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ளது. ஆயிரம் காளைகள் பதிவுசெய்துள்ளன. ஆயிரத்து 500 வீரர்கள் முழு உடல்தகுதியுடன் தம்மைப் பதிவுசெய்துள்ளனர். (ம)





ஐக்கிய அரபு ராச்சியத்தில் மிகவும் அரிதான வகையில் அண்மையில் பனிப்பொழி... ஏற்பட்டது. பொதுவாக வெப்பம் அதிகமான மத்திய கிழக்கில் பனிப்பொ... ஏற்பட்டமை பலரையும் வியக்கவைத்தது. அந்த நாட்டின் சில இடங்களில் மை... பாகையை வெப்ப நிலை அடைந்தது. 2003 ஆம் ஆண்டு 13 பாகை செல்சியஸே ... குறைந்த வெப்ப நிலையாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-எ...

## மணிலாவில் மிகப்பெரிய தீ விபத்து: 15,000 பேரின் வீடுகள் தீக்கிரை

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இடம்பெற்ற தீ விபத்து ஒன்றில் 15 ஆயிரம் பேரின் வீடுகள் தீக்கிரையாகின.

சன்ரிடவுன் என அழைக்கப்படும் பகுதியில் உள்ள நெருக்கமானதும் சிறியதுமான வீட்டுத் தொகுதியிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. தீ விபத்தை அடுத்து, நகரப்பகுதி புகைமண்டலமாக காட்சியளித்ததுடன், ஆயிரக்கணக்கான மக்கள் விடியவிடிய தெருக்களில் உறங்கினர் என்று பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் குறிப்பிட்டன. இந்தச் சம்பவத்தில் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படாத போதும் சிலர் படுகாயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். (ம-எ)





## ...நர்கள் ...காப்பு

...கிகளுக் கும், ...ல்வர் ஓ.பன் ...வத்துக்கும் ...ருத்து வேறு ...பட்டுள்ளது. ...தாடர்ந்து ...சல்வத்துக்கு ...இளைஞர்கள் ... நடத்த திட்ட ...ாக உளவுத் ...சரித்ததை ...மரீனா கடற் ... பலத்த ...பாதுகாப்பு ...து. (ம-எ)



# மரண அறிவித்தல்

## அல்பிறட் யூலியன் பற்றிக் (யூஜின்)



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், சுண்டுக்குளியை வதிவிடமாகவும், தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிறட் யூலியன் பற்றிக் (யூஜின்) 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், விஜயராணியின் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை) பாசமிகு கணவரும், செல்ரன் (கனடா), வித்தியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - 2005 Batch), தர்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி - 2006Batch), சுனித்தா (வேம்படி மகளிர் கல்லூரி - 2007 Batch), எரிக்பிரதாப் (புனித பத்திரிசியார் கல்லூரி - 2011 Batch ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சரோஜா, யூஜினா, சந்திரா, இந்திரா, ஜெறின் மற்றும் அன்ரனி (ஜஸ்ரின் - பிரான்ஸ்), ரொபின் (பிரான்ஸ்), ஜகி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், ஹஸ்வினியின் (திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு மாமனாரும், றோச், சவுந்தரம், பாஸ்கரன், சாந்தி, ராதிகா, குலேந்திரன், மதி, பிளேவியன், காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை மற்றும் விஜயலட்சுமி, விஜயராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.02.2017) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கனடாவில் (கனடா நேரப்படி ) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

**குடும்பத்தினர்.**

(J/8014) 11)

**செல்ரன் (மகன் - 416 7280 296),**
**எரிக் (மகன் - 647 970 4956)**

# நிறைவற்றதான கொள்கை வகுப்புகள் விவசாயத்துறையை அழிவு நிலைக்குட்படுத்துகின்றன

## நிபுணர்கள் கருத்துரைப்பு



கலாநிதி பராக்கிரம வைத்தியானந்தா





பேராசிரியர் மாறம்பே

வணிகம்

> நச்சுப்பொருள் களற்ற,இரசாயனக் கலப்படமற்ற தேசம் நோக்கிய கொள்கை உருவகங்கள் பற்றியதான கருத்துரை வெளிப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் விவசாயம் சார் கொள்கை வகுப்பு உருவாக்கத்தில் நிபுணத்துவம் வாய்ந்த எவரும் இடம்பெறவில்லை. யாராவது ஒருவர் உண்மை நிலைவரங்களை கொள்கை வகுப்பாளர்களிடம் வெளிப்படுத்த வேண்டும்
>
> -பேராசிரியர் மாறம்பே

அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற அசமந்தமான செயல்நிலைகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய மக்கள் சார்ந்து உருவாக்கி வருகின்ற தேவையற்றதான கொள்கை வகுப்புகளும் நாட்டின் பொருளாதார நிலைமைகளில் உடனடித் தன்மையான பாதிப்புகளை,பிறழ்வு நிலைமைகளை ஏற்படுத்துமென நிபுணர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

"அதிக இரசாயனப் பதார்த்தங்களின் விவசாய உள்ளீடு மற்றும் அதிக விளைச்சல் தரக் கூடியதான அரிசி வகைகள் மீதான நம்பிக்கைத் தன்மைகளை குறைப்பதனை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட் டுள்ளதான நச்சுப்பொருள்களற்ற,இரசாயனக் கலப்படமற்ற தேசம் நோக்கிய கொள்கை உருவகங்கள் விவசாயிகள் மீது அதிக தாக்கத்தை செலுத்துகின்றன.குறிப்பாக விவசாயிகள் தொழிலாளர் செலவினங்களைக் குறைத்துக்கொண்டு அதிக விளைச்சல்களையும் அதிக இலாபங்களையும் பெறத் தூண்டுகிறது. இது ஒரு தீங்கான செயலா?, விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெறக் கூடாதா? அவர்கள் தொடர்ந்தும் வறுமை நிலையுள்ளும் அதிக உடல் உழைப்பினுள்ளும் வாழ்ந்திருக்க வேண்டுமா?" என முன்னாள் தெங்கு ஆராய்ச்சிச் சபையின் தலைவர் மருத்துவர் பராக்கிரம வைத்தியானந்த கேள்வி எழுப்பியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

மார்கா இன்ரிரியுசன் அன்ட் ஜேர்மன் கொறியா பவுண்டேசன் அனுசரணையில் இடம்பெற்றிருந்த விவசாயத்தின் எதிர்காலம் என்பதான தொனிப்பொருளின் கீழாக அண்மையில் கொழும்பில் இடம்பெற்றிருந்த பயிற்சிப் பட்டறை நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பி யுள்ளார். இது குறித்து கருத்துரைத்துள்ள பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சார்ந்த பயிரிடல் விஞ்ஞான பிரிவுப் பேராசிரியர் புத்திக்க மாறம்பே,

"1940 ஆம் ஆண்டுகளில் சேதன மற்றும் பாரம்பரிய நெல் பயிரிடல் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த போது விளைச்சல் என்பது ஏக்கருக்கு ஒரு தொன்களை விடக் குறைவாகக் காணப்பட்டது.ஆனால் தற்போது ஏக்கருக்கு விளைச்சலானது 5 தொன்களால் அதிகரித்துள்ளது.காரணம் விவசாய இரசாயனப் பொருள்களையும் உரங்களையும் உயர் விளைச்சல் தரக்கூடியதான நெல் வகைகளையும் பயன்படுத்தியமையே" என்றார். மேலும் இந்த விளைதிறன் அளவு என்பது எதிர்வருகின்ற 2020 ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கின்ற சனத்தொகை அளவீடுகளுக்கு உணவளிக்கக்கூடிய விதமாக ஏக்கருக்கான விளைச்சலை 0.76 தொன்களாக அதிகரிக்க வேண்டிய தேவைப்பாடு இருந்து வருகிறது. யாராவது ஒருவர் உண்மை நிலைவரங்களை கொள்கை வகுப்பாளர்களிடம் எடுத்துக்கூற வேண்டும்.அவ்வாறான சந்தர்ப்பங்கள் அமையாது போனால் நாட்டின் பொருளாதார நிலைமைகளில் வீழ்ச்சி நிலைமைகளும் பிறழ்வுகளும் ஏற்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தவிர இது குறித்தான கருத்துக்களைப் பதிவு செய்துள்ள மருத்துவர் ஜெயவர்த்தன, "அமெரிக்காவிலே விவசாயிகள் எம்.எஸ்.சி பட்டக் கற்கைகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன் அங்குள்ள பேராசிரியர்களை விடவும் அதிக பணத்தைச் சம்பாதிக்கின்றனர். நாங்கள் இது தொடர்பில் அதிக கரிசனை கொள்ள வேண்டியுள்ளது.எங்களுடைய பிள்ளைகள் ரி சேட், ஜீன்ஸ் மற்றும் விலை உயர்ந்த சப்பாத்துகளை அணிந்துகொண்டு மோட்டார் வாகனங்களில் ஊர் சுற்றுகிறார்கள்.கம்பனி ஒன்றில் வேலை செய்கின்ற பெண் ஒருத்தியுடன் தொடர்பைப் பேணுகிறார்கள்.வயலில் இறங்கி வேலை செய்யவோ அழுக்குகளை உடலில் சுமந்து கொண்டு உடல் உழைப்பினை மேற்கொள்ளவோ பின்னடிக்கின்றனர்.வெகு சிலர் இந்தச் சூழ்நிலைகளுள் கடுமையாக உழைக்கின்றனர்" என்றார்.


## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 20 . 03 . 1925

ஆண்டவன் அடியில் 09 . 02 . 2017

**திருமதி பாக்கியலெட்சுமி (பால் ஆச்சி) மாணிக்கம்**

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும், வவுனியா, இறம்பைக்குளம் இல.30, உமாமகேஸ்வரன் வீதியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலெட்சுமி மாணிக்கம் நேற்று (09.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சௌபாக்கியவதி, அன்னலெட்சுமி மற்றும் கணேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, அன்னலெட்சுமி, கண்ணம்மா, சுப்பிரமணியம் மற்றும் கமலவேணி ஆகியோரின் ஆசை மைத்துனியும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் விஜயராணி, ஸ்ரீபதிநாதன், ஜெயராணி, விமலநாதன், சுவேந்திரராணி, காலஞ்சென்ற கோணேஸ்வரன் மற்றும் மகேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன்(கனடா), மஞ்சுளாதேவி (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும், பிரபாலினி, தாரணி ஆகியோரின் ஆசை மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.ஸ்ரீபதிநாதன்
(பெறாமகன்)

இல.30, உமாமகேஸ்வரன் வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

(V/218)(11)

024 222 0417


# வறட்சி காரணமாக பெரும்போக நெற்செய்கையில் அதிக அழிவு

## நெல் அறுவடை வீழ்ச்சி

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வறட்சியான காலநிலைச் சார்புகள் பெரும்போக நெற்செய்கையில் அதிக அழிவுகளையும் நெல் அறுவடையில் வீழ்ச்சி நிலையையும் ஏற்படுத்தியள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் 15 ஆயிரத்து 100 ஹெக்டேயர் காணிகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும் போக நெற்செய்கை அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இம்முறை பெரும்போகத்தில் 83 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அறுவடையின்போது 15 ஆயிரத்து 100 ஹெக்ரேயர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையானது அழிவடைந்துள்ளதான தகவல் தரல் அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் மற்றும் தமண ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே வறட்சியினால் அதிக நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# அதிசிறந்த முறையில் பராமரிக்க வேண்டிய பாடசாலைகளின் உணவகங்கள்

பழனித்துரை தர்மகுமாரன்

பாடசாலை என்பது தனித்து கல்விக்கு மட்டுமன்றி தனிமனித விருத்திக்கும் சமூக விருத்திக்கும் பங்களிப்பு செய்கின்றது எனவே சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான அறிவு, திறன், சிறந்த மனப்பாங்கு என்பவற்றைக் கொண்ட செயற்திறன் மிக்கவர்களை உருவாக்குமிடம் பாடசாலை ஆகும்.

இதன் மூலம் சமூகத்துக்குத் தேவையான சிறந்த நற்பண்பு உள்ள பிரஜைகளைப் பாடசாலை உருவாக்குவதன் மூலம் நாம் பாடசாலைக்கு எமது நல்லபிமானத்தையும் மனபூர்வமான கௌரவத்தையம் வழங்குகின்றோம்.

பாடசாலைகளின் பௌதிகச் சூழல் மாணவர்களின் உள்ளங்களை இன்பப்படுத்தி மகிழ்ச்சிகரமாக மாற்றுவதைப்போல பாடசாலை உணவகங்களும் உடல் ஆரோக் கியத்தை ஏற்படுத்தக்கூடிய உணவு வகைகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

**மாணவர்களின் கற்றல் செயற்பாடு**

ஏனெனில் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் உடல், உள ஆரோக்கியம்முக்கியமானதாகும். அதாவது மாணவர்களின் ஆரோக்கியம் முக்கியமானதாகும். மாணவர்கள் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே அவர்களின் சிந்தனை, செயல் என்பன வகுப்பறைக்குள் பிரகாசிக்கும்.

“எவர் திட்டமிடத் தவறுகின்றாரோ
அவர் தவறு செய்யத் திட்டமிடுகின்றார்”

என்னும் கருத்துக்கு அமைவாகப் பாடசாலை உணவகங்களை அதிசிறந்த முறையில் தரப்படுத்தல் பாடசாலை நிர்வாகத்தின் தலையாய கடமையாகும். அது மட்டுமன்றி உணவகங்களைச் சிறந்த முறையில் பேணி போசணைமிக்க உணவுகளை விற்பனை செய்ய வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு 2017 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கின்றன. ஆனால் இலங்கையின் ஏனைய பகுதிகளில் 7.30 மணிக்கு பாடசாலைகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன.

**பாடசாலை ஆரம்பிக்கும் நேரம்**

இந்தப் பாடசாலை ஆரம்பநேரமானது மாணவர்களுக்கு நன்மையாக இருந்தாலும் காலை உணவை உண்பதில் பிரச்சினையை எதிர் நோக்குகின்றார்கள் என்பதில் உண்மையில்லாமல் இல்லை. இதனால் கட்டாயம் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகள் தரமானவையாக இருக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் உணவுப் பிரச்சினையின் தாக்கமே எமது எதிர்காலத்தில் செல்வாக்கு செலுத்தப்போவது என்பது வெள்ளிடைமலை. இதனைக் கருத்தில் கொண்டு பாடசாலை மட்டத்தில் பல்வேறு வழிகளிலும் சுகாதார உணவுப் பழக்கவழக்க முறைகளைக் கையாளவேண்டும்.

ஏனெனில் பாடசாலை மாணவர்கள் கல்வியுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இதனால் மாணவர்கள் ஆரோக்கியமாகக்காணப்படவேண்டும். உடல் ஆரோக்கியமாகக் காணப்பட்டாலே உளம் ஆரோக்கியமாகக் காணப்படும்.

எனவே கல்வி உளவியலாளர் ‘ஒரு பூ மலர்ந்திருக்கும்போதே மகரந்தச் சேர்க்கை நடைபெறும். அதேபோல வகுப்பறையில் மாணவர்கள் மகிழ்ச்சியாக இருந்தாலே கற்றல் செயல்பாடு முழுமையடையும்’ எனக் கூறுகிறார். இந்தக் கருத்தை அடிப்படை யாகக் கொண்டு மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத் தையும் பேணுவதற்குப் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகள் தம்மை மாற்றியமைக்க முன் வர வேண்டும்.

**நிறை உணவுகள்**

அதாவது நிறை உணவான பால், முட்டை என்பவற்றை உள்ளீடாகக் கொண்டு உணவு வகைகளை அதிகளவு விற்பனை செய்தல் வேண்டும் இதன் மூலம் ஆரோக்கிய உணவு கிடைப்பது மட்டுமன்றி, உடலுக்கு தீங்கும் ஏற்படாது, கல்வியிலும் அக்கறையுடன் இருப்பார்கள்.

பாடசாலை உணவகங்களில் பால் பைக்கற்றுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

> அநேகமான பாடசாலை உணவகங்களில் நிறமூட்டிகள் பயன்படுத்திய உணவுகள் பசியை ஏற்படுத்தாத இரசாயனப் பொருள்கள் கலந்த உணவுகள், இனிப்பு வகைகள் என்பனவே விற்பனை செய்யப் படுகின்றன. இதனால் மாணவர்களின் எதிர் காலம் பாதிப் படைய நாமே காரணமாகின்றோம்.

பாலை சுடவைத்து உடனடியாக விற்பனை செய்ய முன்வர வேண்டும்.

இது மட்டுமன்றி வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் பாலைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தால் பால் உற்பத்தி அதிகரிக்கும்.

இதேபோல முட்டையை பயன்படுத்தி உணவுகளை உற்பத்தி செய்தல், பழச்சாறுகளை உடனடியாகத் தயாரித்து விற்பனை செய்யவும், பழக்கலவைகள், தயாரித்து தரமானதாகவும், சுவையானதாகவும், மலிவானதாகவும் விற்பனை செய்யவும் பாடசாலைச் சிற்றுண்டிச் சாலைகள் முன்வர வேண்டும்.

மேலே கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வருமானால் உற்பத்தியாளரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். மாணவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும், எமது மண்ணை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் சூழல் உருவாக்கப்படும். பலருக்கு அது சுயதொழில் வேலைவாய்ப்பாகவும் அமையும்.

தென்னிலங்கைப் பாடசாலைகளின் உணவகங்களில் தேவையற்ற உணவுவகைகள் விற்பனை செய்யப்படுவதில்லை. அங்கே பால் வகைகள், பழச்சாறு வகைகள், முட்டையை பயன்படுத்தி உற்பத்தி செய்த உணவு வகைகள் என்பன சூடாகவும் குளிராகவும் விற்பனை செய்வதுடன் எண்ணெய் உணவுகளையும் தவிர்த்து விடுகின்றனர்.

இதற்கான காரணம் மாணவர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்ற நோக்கமே ஆகும். நாம் எமது மாணவர்களை ஆரோக்கியமானவர்களாக உருவாக்க பாடசாலை உணவகமும் ஒரு காரணியாக இருப்பதனால் இந்தச் செயற்பாட்டில் வடக்கு மாகாணசபை, கல்வித்திணைக்களம், பாடசாலை நிர்வாகம், சுகாதாரப் பிரிவு என்பன கரிசனை கொண்டு செயற்பட முன்வர வேண்டும்.

இல்லையேல் இன்று போல எதிர்காலச் சந்ததியினரும் ஆரோக்கியமற்றவர்களாகவே உருவாக்கப்படுவார்கள். பருவம் தவறிய மழையும் போகம் தவறிய பயிர்ச்செய்கையும்” எவ்வாறு பிரயோசனம் அற்றதோ அதேபோலவே எமது சிந்தனைகள், செயற்பாடுகள் காலமாற்றத்துக்கும் தேவைக்கும் ஏற்ப மாற்றமடைய வேண்டும்.

ஏனெனில் அநேகமான பாடசாலை உணவகங்களில் நிறமூட்டிகள் பயன்படுத்திய உணவுகள் பசியை ஏற்படுத்தாத இரசாயனப் பொருள்கள் கலந்த உணவுகள், இனிப்பு வகைகள் என்பனவே விற்பனை செய்யப் படுகின்றன. இதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிப்படைய நாமே காரணமாகின்றோம்.

**விரைவு உணவுகளின் ஆதிக்கம்**

அது மட்டுமன்றி அதிகளவு விரைவு உணவுகளை பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் விற்பனை செய்வதால் மாணவர்களும் அதனையே வாங்கி உண்கின்றார்கள். இதனால் ஆரோக்கியமற்றவர்களாக கல்வியிலே சிந்தனை ஆற்றல் குறைந்தவர்களாக வளர்ந்து வருகின்றஷனர்.

தமிழினத்தின் எதிர்கால வழிகாட்டிகள் பாடசாலைகளிலே உள்ளனர். அவர்களைச் சிறந்த முறையில் உரு வாக்க வேண்டிய தார்மீகக் கடமை எங்களிடம் உள்ளது. எனவே அதனைச்சரியான முறையில் பயன்படுத்த அனைவரும் முன்வரவேண்டும். பிறப்பு சாதாரணமானதாக இருக்கலாம். ஆனால் நமது இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும். இங்கு ஒவ்வொருவரும் தனித்தனியே சிந்தித்து கூட்டாகச் செயற்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் இந்தப்பிரச்சினை பார்ப்பதற்கு சாதாரணானதாக இருக்கலாம், ஆனால் எமது எதிர்காலச் சக்திகளின் ஒவ்வொரு செயற்பாடுகளும் மிளிர்வதற்குப் பதிலாக இருண்டு கொண்டே செல்லும் என்பதே உண்மை. அதாவது மாணவர்கள் மத்தியிலே மிளிர வேண்டிய செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் கருதிக் கொள்ளலாம்.

கல்வி, அறிவு, சிந்தனை, சுறுசுறுப்பு, மகிழ்ச்சி, ஆர்வம், சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு, கேள்வி கேட் டல், எல்லாச் செயற்பாடுகளிலும் முன்னின்று செயல்படல் என்பன ஆரோக்கியம் உள்ள மாணவர்களில் காணப்படும்.

ஆரோக்கியம் குறைந்த மாணவர்களில் கல்வியில் அக்கறையீனம், சிந்தனை அற்ற நிலை, சுறுசுறுப்பின்மை, மகிழ்ச்சியீனம், ஆர்வம் குறைந்த நிலை, கோபப்படுதல், வெறுப்புத் தன்மை, சோம்பல் தன்மை, உடல் பலவீனம், சினம், நிகழ்வுகளுக்கு முன்செல்லாமை போன்ற விடயங்கள் காணப்படும்.

இதற்கு உணவுப் பிரச்சினைகளே முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன. இத்னைக் கருத்தில் கொண்டு பாடசாலைச் சிற்றுண்டி சாலைகள் அதிபோசணை மிக்க உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்தால் பாடசாலையில்கல்வி கற்கும்மாணவர்கள் ஆரோக்கியத்துடன் சிறந்த பெறுபேற்றையும் சிறந்த ஆளுமையையும் வெளிப்படுத்து வார்கள்.

**தாவர உணவும், மாமிச உணவும்**

தாவர உணவுகள் எம்மைத் தாங்கி கொள்ளும், மாமிச உணவுகள் எம் உடலில் தங்கிக் கொள்ளும்” இதனைக் கருத்தில் கொள்வதன் மூலம் அதிகளவு தாவர உணவுகளை உட்கொண்டு குறைந்தளவு மாமிச உணவுகளைக் கால நேரத்துக்கு அமைவாகத் தெரிவு செய்து உண்ணுதல் வேண்டும்.

கடல் உணவுகளைக் கட்டுப்பாடின்றி உண்ணலாம். ஒவ்வாமை இல்லாதவர்கள் இவ்வுணவு மூலம் எம் உடலுக்கு தேவையான அநேகமான போசணைகள் கிடைப்பதுடன் இரசாயன சேர்வையும் இல்லாமல் கிடைக்கின்றன.

இதனைப் பாடசாலை மாணவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும், தெரிந்திருக்க வேண்டும். மற்றவர்களுக்கும் தெரியப் படுத்த வேண்டும். ஒட்டு மொத்தத்தில் எமது மாணவர்களின் ஆரோக்கியமான செயற்பாடுகள் பாடசாலை களிலேயே தங்கியுள்ளன. எனவே பாடசாலை சிற்றுண்டிசாலைகள் முன்மாதிரியானவை யாகக் காணப்படவேண்டும்.

**கட்டுரையாளர்:**
**ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டும் முருங்கை மரம் ஏறுகின்றது வேதாளம்

புதிய அரசமைப்பை உருவாக்குவதுதான் மற்றெல்லாவற்றையும்விட தமது முதலும் முக்கியமானதுமான பணி என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமர வீரவும் அண்மையில் ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தார் கள். எனினும் அதற்கான நகர்வுகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று வரும் செய்திகள் கவலையளிக்கின்றன.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் அண்மைக்காலமாகப் பயனற்ற வகையில் கூடிக் கலைந்ததன் பின்னரே – சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களால் இந்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடப்பட்டதன் பின்னரே – புதிய அரசமைப்பை உருவாக்குவதுதான் முதலும் முக்கியமானதுமான பணி என்று அவர்கள் தெரிவித்திருந்தார்கள். திருகோணமலையில் எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் முன்பாக அரச தலைவர் மிக ஆணித்தரமாக இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார். அதன்பின்னர், வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் பேசிய அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமர வீரவும் இதே கருத்தை வழிமொழிந்திருந்தார்.

வழிகாட்டல் குழு இந்த விடயத்தில் தேக்க நிலையை அடைந் பின்னரும், எதிர்க்கட்சித் தலைவரின் முன்பாக அரச தலைவர் புதிய அரசமைப்பு உருவாக்கம்தான் முக்கியம் என்று சொன்னபோது, தனது கட்சியான சுதந்திரக் கட்சியின் தலைவர்களை அவர் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுவார் என்கிற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருந்தன. அதற்கேற்றவகையில், சுதந்திரக் கட்சியின் தலைவர்களுடனும் அரச தலைவர் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை நடத்தி வந்தார். இதன் பின்னராக, புதிய அரசமைப்புக்கு எதிராகவும் அதிகாரப் பகிர்வு மற்றும் சுவட்டாட்சிக்கு எதிராகவும் தாம் தொடர்ந்து தெரிவித்து வந்த கருத்துக்களைச் சுதந்திரக் கட்சித் தலைவர்கள் திடீரென நிறுத்திக் கொண்டனர் என்பதையும் அவதானிக்க முடிந்தது.

இந்த நகர்வுகளின் அடிப்படையில், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு சுதந்திரக் கட்சியால் போடப்பட்ட முட்டுக்கட்டை நீங்கிவிடும் என்ற பெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் கடந்த 7ஆம் திகதி நடைபெற்று முடிந்த வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் சுதந்திரக் கட்சி பங்கெடுக்காததால் எந்த முன்னேற்றமும் இன்றிக் கூட்டம் முடிவடைந்துள்ளது. தனியார் மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே, சுதந்திரக் கட்சியினர் கூட்டத்தில் கலந்துகொள்ள வில்லை என்று காரணம் சொல்லப்பட்டது. ஆனால் அது வெறும் சாட்டுப்போக்குத்தான் என்பதை உணர்ந்துகொள்வது ஒன்றும் கடினமானதல்ல. ஆக, அதிகாரப் பகிர்வு தொடர்பில் சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் குழப்பம் இன்னமும் தீர்ந்தபாடில்லை என்பது புரிகிறது. அரச தலைவரால் இலகுவில் வசப்படுத்த முடியாதவர்களாக கட்சியின் தலைவர்கள் உள்ளனர் என்பதும் தெளிவாகிறது.

இந்த உட்கட்சிப் பூசலை வெற்றிகொள்வதிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் கணிசமான வெற்றி தங்கியிருக்கின்றது என்பது ஒருபுறம் இருக்க, அந்தக் கூட்டத்தில் கருத்துக் கூறிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மூன்று விடயங்களை முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதிகாரப் பகிர்வு தொடர்பாக மாகாண முதலமைச்சர்கள் வழங்கியுள்ள பரிந்துரைகளில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள், நடைமுறையில் இருக்கும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கும் விடயங்கள், இதுவரையில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களில் ஒத்திருக்கக்கூடிய விடயங்கள் ஆகிய மூன்றையும் பட்டியல் படுத்துமாறு கேட்டிருக்கிறார் அவர்.

வழிகாட்டல் குழுவின் பணியே இந்த விடயங்களை ஆராய்ந்து புதிய அரசமைப்புக்கு வழிகாட்டுவதுதான் என்றே இதுவரையான காலமும் மக்களுக்குச் சொல்லப்பட்டு வந்தது. அவ்வாறான படிப்பினைகளின் ஊடாக வழங்கப்பட்ட வழிகாட்டல் ஊடாகவே இடைக்கால அறிக்கை ஒன்றை வழிகாட்டல் குழு தயாரித்து முன்வைத்தும் இருந்தது. அப்படியிருக்கும்போது, மீண்டும் ஆரம்ப இடத்திற்கே வழிகாட்டல் குழு திரும்ப வந்திருப்பது வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறும் கதையையே ஒத்திருக்கிறது.

இத்தகையை நிலமை, புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குப்பதிலாக, நம்பிக்கையீனத்தையும் அதிருப்தியையும்தான் ஏற்படுத்துகின்றது.

# சமூக மாற்றமும் சாதியத் தேய்வும்

## 'புதிய சுவடு'களை முன்வைத்துச் சில குறிப்புக்கள்

சி.குருபரநாத்

"தமிழில் இந்த மாதிரியொரு உரைநடை நவீனம் பொது மக்களுக்கு இதுவரை அளிக்கப்படவில்லை. ஆகையால் இந்த நூல் வாசகர்களுக்கு சுவை பொருந்தியதாகவும் போதனை நிறைந்ததாகவும் இருக்கும் என எதிர்பார்க்கின்றேன்" என்ற முகவுரையுடன் தமிழுக்கான புதிய உரை நடை நவீனமான நாவல் எனும் இலக்கிய வடிவம் வேதநாயகம் பிள்ளையினால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. அப்போது தொடக்கம் நாவல் எனும் இலக்கிய வடிவம் பல்வேறு வளர்ச்சிக்கு உட்பட்டு வந்து, இந்த நூற்றாண்டிலும் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வடிவமாகவும் மிளிர்கின்றது. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பெரிய இலக்கியப் புரட்சியின் விளைவாக பல புதிய இலக்கிய வடிவங்கள் தமிழ் மொழியில் அறிமுகமாயின. அந்த இலக்கிய வடிவங்கள், சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளையும், வெவ்வேறு பொருள் நிலைகளில் வெளிப்படுத்தின. இந்த இலக்கிய வடிவங்களுள் நாவலும் சிறுகதையும், தனிமனித உணர்வுப்பிரச்சினைகளை மிகச் சிறப்பாக, உணர்ச்சிபூர்வமாக, புதியதோர் தளத்தில் வெளிப்படுத்தியிருந்தன. குறிப்பாக, ஈழத்தில் தோற்றம் பெற்ற நாவல்கள் ஈழத்துக்கே உரித்தான அரசியல், பொருளாதார, சமுதாய, சமயப் பிரச்சினைகளைக் கருவூலமாகக் கொண்டு தோற்றம் பெற்றன. தமிழகச் செல்வாக்கும், மேலைத்தேய இலக்கியப் பிரக்ஞையும், படித்த மத்திய தர வர்க்கத்தின் தோற்றமும். ஈழத்தில் சிறந்த நாவல் இலக்கியம் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன. குறிப்பாக ஈழத்தில் 1950 மற்றும் 1960 களில்ஏற்பட்ட சமுதாய மாற்றமும், இலக்கிய இயக்கங்களின் தோற்றமும், 1970களில் சிறந்த சமுதாய சிந்தை கொண்ட நாவல்கள் தோற்றம் பெறுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன. ஈழத்து நாவல் இலக்கியப் பரப்பில், 1960 மற்றும் 1970 காலப் பகுதி சிறந்த பொற்காலம் என்று கூறலாம். இந்தக் காலப் பகுதியில் நாவல்கள் பல்வேறு நோக்கம் கருதி பல்வேறுபட்ட சமுதாயப் பார்வையோடு, சமூகப் பிரக்ஞையோடு படைக்கப் பட்டன. இந்தக் காலப்பகுதியில் செ.கணேசலிங்கன், கே.டானியல், தி.ஞானசேகரன் முதலானோர் பல்வேறு சிந்தை கொண்ட ஈழத்துச் சமுதாயப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நாவல்களை வேறுபட்ட நிலைகளில் நின்று வெளிப்படுத்தியிருந்தனர். அந்த வகையில் தி.ஞானசேகரன் குறிப்பிடத்தக்க இடத்தைப்பெற்றவராக விளங்குகின்றார்.




தி.ஞானசேகரன் இதுவரை பல நாவல்களையும், குறுநாவல்களையும் எழுதியுள்ளார். அவரது முதல் நாவலான 'புதிய சுவடுகள்' யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டது. அவரது புதிய சுவடுகள்' யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதிப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாக விளங்குகின்றது.


தி.ஞானசேகரனின் 'புதிய சுவடுகள்' யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கிராமப் பகைப்புலத்தில் சாதிப் பிரச்சினையை இயல்பாகச் சித்திரிக்கும் படைப்பாக மிளிர்கின்றது. 1960மற்றும்1970களில் ஈழத்தில் சாதியத்தின் பெயரால் இழைக்கப்பட்ட சாதியக் கொடுமைகளை தி.ஞானசேகரன் இந்த நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணத் தமிழர் சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதியமைப்பு சமுதாய முன்னேற்றத்துக்குப் பெருந்தடையாக உள்ளமையும், எத்தனையோ விபரீத விளைவுகளுக்கு இட்டுச் செல்வதையும் இந்த நாவலில் தொட்டுக் காட்டியுள்ளார்.

யாழ்ப்ப ாணக் கிராமியப் புலத்திலே, உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினருக்கெனத் தனியான பேணியோ அல்லது தேங்காய்ச் சிரட்டையோ வைத்திருப்பர். தமது வீட்டில் வேலை செய்யும் தாழ்ந்த சாதியினருக்கு அந்தப் பேணியிலேயே தேநீர் கொடுப்பர். இந்த சாதி ஏற்ற தாழ்வுக் கொடுமைகளைதி.ஞானசேகரன் இந்த நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.

செல்லப்பர் வீட்டில் வேலை செய்யும் மாணிக்கத்துக்குப் பார்வதி சுவரின் மேல் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த பேணியில் தேநீர் குடிக்கக் கொடுப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்வாறான ஏற்றத் தாழ்வைசெ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' என்னும் நாவலிலும் நாம் காணலாம். பொதுக் கிணற்றிலோ, பாடசாலைக் கிணற்றிலோ, கோயில் கிணற்றிலோ தாழ்ந்த சாதியினர் கொடி பிடித்துத் தண்ணீர் அள்ளத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதை ஞானசேகரன், மாணிக்கம் எனும் பாத்திரத்தின் பள்ளிப் பருவ வாழ்க்கையினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

"இடை நேரங்களில் பாடசாலை மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து விளையாடுவார்கள். விளையாட்டு முடிந்ததும் தாகந்தீரப் பாடசாலைக் கிணற்றில் தண்ணீர் அள்ளிப் பருகுவார்கள். மாணிக்கம் பாடசாலைக் கிணற்றிலே கொடி பிடித்துத் தண்ணீர் அள்ளக் கூடாது"

இவ்வாறான் தீண்டாமைக் கொடுமையின் விரிவை கே.டானியலின் 'தண்ணீர்' நாவல் வெளிப்படுத்தி நிற்கின்றது. சமுதாயத்தின் உயர்சாதியினர் தாழ்ந்த சாதியினரைத் தமது அடிமைகளாகப் பாவித்திருந்தனர். தாழ்ந்த சாதியினருக்குக் கருத்துச் சுதந்திரம் அளிக்கப்படவில்லை. அவர்கள் உயர் சாதியினருக்குக் கட்டுப்



பட்டு அடிமை நிலை வாழ்வு வாழ வேண்டிய நிலை காணப்பட்டிருந்தது. இந்த நிலையை செ.கணேசலிங்கன், கே.டானியலின் நாவல்களில் விரிவாகக் காணலாம். சில தாழ்ந்த சாதியின மூத்தவர்கள், அடிமை நிலை வாழ்வில் அமிழ்த்தப்பட்டிருக்கும் நிலையைக் காணலாம். இதற்குத் தக்கதோர் உதாரணமாகக் கோவிந்தன் எனும் பாத்திரம் விளங்குகின்றது.

உயர் சாதி வர்க்கத்தினர் தாழ்ந்த சாதியினத்தவர்களைத் தீண்டத் தகாதவர்களாகவே கருதியிருந்தனர். 1950 களுக்கு முன்னர் தோற்றம் பெற்ற தீண்டாமைக்குச் சாவுமணி, தீண்டாமைக்குச் சவுக்கடி, நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் போன்ற நாவல்கள் தீண்டாமைக் கொடுமைகளைச் சித்தரிக்கின்றன. எனினும் இவையனைத்தும் தொடக்கப் புள்ளிகளே. 1960 மற்றும் 1970களில் இந்தத் தீண்டாமைக் கொடுமை பல்வேறு நிலைகளில் பிரக்ஞையோடு வெளிப்படுத்தப்பட்டது. "எடியே, எளிய சாதிக்காரன் கடிச்சுப் போட்டுக் குடுத்த மாங்காயை ஏனடி சாப்பிட்டனி? இனி மேல் அவனோடை சேர்ந்து பள்ளிக் கூடம் போகப்படாது" என உயர்சாதியித்தவரான செல்லப்பர் தனது மகளுக்கு ஏசுவதிலிருந்து இதனை நாம் கண்டு கொள்ளலாம். சாதிய ஏற்றத்தாழ்வுகளைச் சிறுவர்கள் மத்தியில் திணிக்கும் கொடுமையை இது நமக்குப் புலப்படுத்துகின்றது.

1970களில் யாழ்ப்பாணக் கிராமப் புலவாழ்வியலில் தாழ்ந்த சாதியினர், உயர் சாதியினர்களின் வயல்களில் வேலை செய்வதையும், அவர்கள் தீண்டத்தகாதவர்களாகவும், அடிமைகளாகவும் கருதப்பட்டிருந்ததையும் நாம் காணலாம். தாழ்ந்த சாதியின மக்கள், தனியாக வயல் வாங்கி விவசாயம் செய்ய முடியாது. உயர் சாதியினர், தாழ்ந்த சாதியினருக்கு வயல் நிலங்களை விற்க மாட்டார்கள். தாழ்ந்த சாதியினர் உயர் சாதியினரது வயல்களிலேயே வேலை செய்ய வேண்டும். சில தாழ்ந்த சாதியினர், இந்த அடிமை நிலையில் முற்று முழுதாக மூழ்கியிருந்ததையும் நாம் காணலாம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கோவிந்தன் எனும் பாத்திரம் விளங்குகின்றது.

"பொத்தடா வாயை... உனக்கு நாக்கு நீண்டு போச்சு, எங்கடை அப்பன் பாட்டன் காலத்திலையிருந்து நாங்கள் கமக்காரர் சொன்ன வேலையைச் செய்து கொண்டுதானே வாறம்" என்ற கோவிந்தனின் கூற்றில் இருந்து இதனை நாம் கண்டு கொள்ளலாம்.

உயர் சாதியினப் பெண்ணான பார்வதியைக் காப்பாற்றுவதற்காக செல்லப்பன் எனும் தாழ்ந்த சாதியின இளைஞன் கிணற்றுக்குள் குதிக்கின்றான், பார்வதியைக் காப்பாற்றுகின்றான். எனினும் செல்லப்பன் தாழ்ந்த சாதியினத்தவன் என்பதால் அவனுக்கு எதிர்ப்புக் கிளம்புகின்றது. இத்தகைய தீண்டாமையும், ஏற்றத் தாழ்வும் அந்தக் காலச் சமுதாயத்திலே வேரூன்றிக் காணப்பட்டிருந்தன. இதன் உச்சக்கட்டத்தை, "என்ன தான் இருந்தாலும், கொடி பிடிச்சு அள்ளக்கூடாத ஒரு கீழ் சாதிக்கு, கிணத்துக்கை குதிக்கிற அளவுக்குத் துணிவு வந்ததுக்குக் காரணம் நீங்கள் குடுத்த இடம் தான்". என்ற துரைசிங்கத்தின் கூற்றில் இருந்து நாம் கண்டு கொள்ளலாம்.

பார்வதியின் உயிரைக் காப்பாற்றவே செல்லப்பன் கிணற்றுக்குள் குதித்தான். செல்லப்பன் பார்வதியின் உயிரைக் காப்பாற்றியதை விட, அவன் கிணற்றுக்குள் குதித்ததே பெரிய விடயமாகவும் மிகவும் கொடிய செயலாகவும் உயர் சாதியினரால் கருதப்பட்டது.

உயர் சாதியின வர்க்கத்தினர், தாழ்ந்த சாதியினருக்குப் பொருளாதார ரீதியாகவும் பல தடைகளை விதித்திருந்தனர். தாழ்ந்த சாதியினர் தமக்கெனச் சொந்தமாக நிலங்களை வாங்க முடியாது, சுயமாக விவசாயமும் செய்ய முடியாத நிலைமை காணப்பட்டிருந்தது. தாழ்ந்த சாதியினர் தவறு செய்யும் வேளைகளில், அவர்கள் உயர் சாதியினரால் பொருளாதார ரீதியாக அடக்கப்பட்டிருந்தனர். இதனைத் தி.ஞானசேகரன் தனது 'புதிய சுவடுகள்' நாவலில் வெளிப்படுத்தத் தவறவில்லை.

நாங்களும் எங்களுடைய ஒற்றுமையைக் காட்டுறதெண்டால் ஊரிலை இருக்கிற கீழ்சாதிக் குடும்பங்கள் எல்லாத்தையும் குடியெழுப்ப வேணும். அவர்கள் தோட்டம் செய்யிற குத்தகைக் காணியளை மறிக்க வேணும். கள்ளுச் சீவிற பனையளை நிப்பாட்ட வேணும்" என்ற துரைசிங்கம் பாத்திரத்தின் கூற்றின் மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

தாழ்ந்த சாதியினர் உயர் சாதியினருடன் காதல் தொடர்போ, திருமணத் தொடர்புகளோ ஏற்படுத்த முடியாது. அவ்வாறான தொடர்புகள் ஏதும் ஏற்பட்டால், அது சமூகத்தில் பெரும் குழப்பத்துக்கும் கண்டனத்துக்கும் உரிய விடயமாக மாறிவிடும். உயர்சாதியினத்தவளான பார்வதியும், தாழ்ந்த சாதியனத்தவனான செல்லப்பனும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். அவர்கள் இருவரும் தாம் வாழும் சமூகத்தில் தம்மால் வாழ முடியாது என்பதற்காக முத்தையன்கட்டுக்குச் சென்று வாழ்கின்றனர். எனினும் பார்வதியின் தகப்பனும், துரைசிங்கமும் முத்தையன்கட்டுக்குச் சென்று பார்வதியையும் செல்லப்பனையும் பிரித்துக்கொண்டு வருகின்றனர். இதனால் பார்வதி இறக்க நேரிடுவதோடு, உயர் சாதியினரான செல்லப்பர் தன்னுடைய சமூகத்தவர்களினாலேயே தீண்டத்தகாதவராக ஒதுக்கப்படுகின்றார். இதற்குக் காரணம், தாழ்ந்த சாதியினத்தவனான செல்லப்பனைப் பார்வதி விரும்பித் திருமணம் செய்து கொண்டமையாகும். இவ்வாறான சாதியத்தின் பெயரால் இழைக்கப்பட்ட கொடுமைகளை செ.கணேசலிங்கனும் தன்னுடைய நாவல்களிலே வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


அறுபதுகளைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் சாதியப் பிரச்சினை தொடர்பான நாவல்கள் பல இலங்கை எழுத்தாளர்களால் எழுதப்பட்டன, அவற்றுள் பல, சாதியப் பிரச்சினை, ஒரு வர்க்கச் சார்புடைய பிரச்சினை எனவும், அதனைக் கிளர்ந்தெழும் மக்கள் போராட்டம் மூலமே தீர்க்கலாம் எனவும் கருத்து வெளிப்படுத்தியிருந்தன. இதற்கு, செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' நல்ல தக்கதோர் சான்றாகும். ஆனால் தி.ஞானசேகரனின் இந்த நாவல் மேற்குறிப்பிட்ட நாவல்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட கருத்தியலைக் கொண்டது.

'புதிய சுவடுகள்' என்ற இந்த நாவலும் சாதியத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றது. சமூக விமர்சனநோக்கில், நடைமுறைச் செயற்பாட்டின் அடிப்படையில், இந்தநாவல் படைக்கப்பட்டுள்ளது.

உயர் சாதியினிடம் நிகழ்ந்து வரும் மன மாற்றங்களையும், இயல்பாக சமுதாயம் மாறி வரும் நிலையையும், சாதிக்கட்டுப்பாடுகள் தளர்ந்து வருவதையும் இந்த நாவல் பேசுகின்றது. காலப்போக்கில் சாதியம் ஒழிந்துவிடும் என எதிர்வு கூறுகிறது. இறுக்கமான சாதியக்கட்டுப்பாடுகள் மெது மெதுவாகத் தளரத் தொடங்கியுள்ளன என்பதை இந்தநாவலில் தி.ஞானசேகரன் புலப்படுத்த முயற்சிக்கின்றார். சமூக்கத்தில் சாதியத்தின் பெயரால் இழைக்கப்பட்ட சாதிய ஏற்ற தாழ்வுக் கொடுமைகளையும் அவர் தமது நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.

இறுக்கமான சாதியக் கட்டுப்பாடுகள் மெதுமெதுவாகத் தளரத் தொடங்கியுள்ளன என்பதை நாவலில் புலப்படுத்த முயன்ற ஆசிரியரது, இந்தக் கருத்தியலுக்குச் சிறந்த குறியீடாக, மாணிக்கனுக்கும் பார்வதிக்கும் பிறந்த குழந்தையை, சமுதாயம் அங்கீகரிக்கின்றமை அமைந்துள்ளது. அந்த வகையில் தி.ஞானசேகரனின் "புதிய சுவடுகள்' இன்றைய சமூதாய மாற்றத்துக்கான முதல் சுவடுதான்.

> உயர் சாதியினிடம் நிகழ்ந்து வரும் மன மாற்றங்களையும், இயல்பாக சமு தாயம் மாறி வரும் நிலையையும், சாதிக்கட்டுப்பாடுகள் தளர்ந்து வருவதையும் இந்த நாவல் பேசுகின்றது. காலப்போக் கில் சாதியம் ஒழிந்துவிடும் என எதிர்வு கூறுகிறது. இறுக்கமான சாதியக்கட்டுப் பாடுகள் மெது மெதுவாகத் தளரத் தொடங்கியுள்ளன என்பதை 'புதிய சுவடு' நாவலில் தி.ஞானசேகரன் புலப்படுத்த முயற்சிக்கின்றார். சமூக்கத்தில் சாதியத்தின் பெயரால் இழைக்கப்பட்ட சாதிய ஏற்ற தாழ்வுக் கொடுமைகளையும் அவர் தமது நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.



# வாசகர் திருமுகம்

## ஏனையா எம்மை இத்தனைதூரம் அலைக்கழிக்கின்றீர்கள்?

அரச துறை அதிகாரிகளும் ஊழியர்களும் தத்தமது பணியிடங்களில் த... வெளிச் செல்கை மற்றும் நகர்வுக... முறையாகச் செயற்படுத்தா விட்ட... அரச பணிகளில் ஏற்படும் தாமதங்க... பின்னடைவுகள் பொதுமக்களுக்... பெரும் சிரமங்களையே ஏற்படுத்... காரணமாகின்றன.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதியன்று சாரதி அனுமதிக்கான மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்குக் காத்திருந்த போது மு.ப 10 மணிக்குக் கடமைக்கு வர வேண்டிய மருத்துவர் மதியமும் தாண்டிப் பிற்பகல் 12.30 மணிக்கே சமுகமளிக்கிறார். குறித்த சான்றிதழ் பெற ஏற்கனவே பதிவு செய்திருந்ததால், குறுகிய நேர விடுமுறை அலுவலகத்தில்பெற்ற பின்னர், அரைநாள் விடுமுறையாக அனுமதிக்கக் கோரி, இறுதியில் முழு நேர விடுமுறையாக அன்றைய தினம் அமைந்தது. முன்னறிவித்தலின்றி இடம்பெறும் இத்தகைய தாமதங்கள், பலருக்கும் பல விதங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. முழுநாள் விடுமுறையாக அன்றைய நாள் ஆகிப்போனதால், மாவட்டச் செயலகத்தில், சாரதி அனுமதி பத்திரத்துக்கான பிறப்பு சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்வோமே என எண்ணி பிற்பகல் 1.45 மணியளவில் எனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தேன். அப்போது கடமையிலிருந்த பெண்மணி கணினி வழி வசதி மூலமானாலும்கூட பிறப்புச்சான்றிதழை இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே வழங்க முடியுமெனத் தெரிவித்தார். கையொப்பமிடுபவர் மதிய உணவுக்காக வெளியே சென்றுள்ளமையே அதற்கான காரணமாக தெரிவிக்கப்பட்டது.

மக்களின் தேவைகளோடு தொடர்பிலுள்ள உத்தியோகத்தர்கள் பலரது உத்தியோகபூர்வ மதிய உணவு நேரம் அனேகமாக அவர்களின் பிள்ளைகளின் தேவைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுவதாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது. அலுவலக வாகனங்களைக் கூடப் பயன் படுத்தும் உயர் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் பாடசாலைகளிலிருந்து 1.30 மணிக்கு வெளியே வரும் தமது பிள்ளைகளை வீட்டுக்கு ஏற்றிச் சென்று, தத்தமது மதிய உணவை முடித்து அவர்கள் அலுவலகம் திரும்பி வர பிற்பகல் 3 மணியாகிவிடும். அதுவரை நாம் வெளியே காத்திருக்க வேண்டும். சகல அரச அதிகாரிகள், ஊழியர்களது மதிய உணவுவேளை உட்பட்ட வெளிச் செல்லல்கள் ஒரு ஒழுங்குமுறையில் பொறுப்பு வாய்ந்த மேல்மட்ட அதிகாரிகளால் செயற்படுத்தப்படவேண்டும்என எதிர்பார்க்கிறோம். ஏனெனில் அவர்கள் பெறும் வேதனத்தில் மக்களின் வரிப்பணமும் அடங்கியுள்ளது.

*பி.ஆர்.லக்ஷ்மி*
*இளவாலை*

செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சகத்தில் வீழ்ந்தாயடா
பன்னீர் செல்வா... வஞ்சகன் மோடியடா
பன்னீர் செல்வா... வஞ்சகன் மோடியடா...



சின்னம்மா தான் சிஎம் ஆகவேண்டும்
மக்கள் கருத்து முக்கியம் இல்லை.



எம்.எல்.ஏ. ஆக இருப்பது நாங்கள் தான் மக்கள் இல்லை



இந்த கோஸ்டி தான் சென்னையில தீ வைச்சிருக்குமோ

ஒரு பெண் இருந்த இடத்தில் இன்னொரு பெண் தான் வர வேண்டும்
சிஆர். சரஸ்வதி



மக்கள்: அதென்ன பெண்கள் பாத்ருமா?

# பாகிஸ்தானில் நடிகர் ஷாருக்கான் படத்துக்கு தடை

ஷாருக்கான் நடித்துள்ள ராய்ஸ் படத்துக்கு பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்த படம் குடியரசு தினத்தில் இந்தியாவில் வெளியாகி ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றது. வசூலிலும் சாதனை நிகழ்த்தி உள்ளது. பாகிஸ்தான் நடிகை மஹிரா கானும் இதில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார். பாகிஸ்தானில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ராய்ஸ் படத்தை வெளியிட திட்டமிட்டு இருந்தனர்.

இதற்காக பாகிஸ்தான் தணிக்கை குழுவினர் பார்வைக்கு ராய்ஸ் படம் அனுப்பி வைக்கப்பட்டது. படத்தை பார்த்த தணிக்கை குழுவினர், இஸ்லாமியர்களை குற்றவாளிகளாகவும் தேடப்படுபவர்களாகவும் சித்திரிக்கும் சர்ச்சைகாட்சிகள் இருப்பதாக ஆட்சேபம் தெரிவித்து, பாகிஸ்தானில் ராய்ஸ் படத்தை திரையிட தடை விதித்து உள்ளனர். இது படக்குழுவினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.




சில மாதங்களுக்கு முன்பு ஜம்மு காஷ்மீரில் உள்ள ஊரிப் பகுதியில் பாதுகாப்பு படையினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய இராணுவத்தினர் எல்லை தாண்டி பயங்கரவாதிகள் முகாம்கள் மீது விமான தாக்குதல் நடத்தி அழித்தார்கள். பாகிஸ்தான் நடிகர்கள் இந்திய படங்களில் நடிக்கவும் எதிர்ப்பு கிளம்பியது. பாகிஸ்தானும் இந்திய படங்களை திரையிடுவதை நிறுத்தியது.

தற்போது தடையை நீக்கி கடந்த முதலாம் திகதி முதல் இந்திய படங்களை பாகிஸ்தானில் திரையிட பிரதமர் நவாஸ் ஷெரீப் அனுமதி அளித்தார். இந்த நிலையில் தான் ஷாருக்கானின் ராய்ஸ் படத்துக்கு அங்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** யதார்த்த பேச்சால் சிலரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறுகுறுக்கிட்டாலும்வருமானத்துக்குகுறைவிருக்காது. பணியாளர்கள் நிலுவைப் பணிகளை விரைந்து முடிப்பர்.

**இடபம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எதிரியையும் மன்னிக்கும் பெருந்தன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். லாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சிலரது பேச்சால் அதிருப்தி கொள்வீர்கள். தாமதித்த பணிகளை விரைந்து முடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** விலகிய உறவினரும் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பர்.

**சிங்கம்:** எதிலும் பின்விளைவு உணர்ந்து செயற்படுவது நல்லது. உடன்பிறந்தவர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி:** தனித்திறமையுடன் செயற்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். வழக்கு, விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும்.

**துலாம்:** மனதில் உருவான திட்டம் செயல் வடிவம் பெறும். மற்றவர் விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொறுப்புணர்வுடன் செயற்படுவது நல்லது. நல்லவரையும் தவறாக கருதும் சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மகரம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். உறவினர்களுடன் ஆன்மிகச் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**கும்பம்:** பொதுநல நோக்கத்துடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். தொழில்,வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மீனம்:** தொடர்பில்லாத பணி குறுக்கிட்டு சிரமம் ஏற்படுத்தலாம். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

மண்டகசாயம்
தீஸ் மீம் பாய்ஸ் ஓ.பி.எஸ். சசிகலா




# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | 3 | |
| | | 1 | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | 2 | | | 7 |
| 2 | | | 7 | | 5 | | 1 | |
| | | | | 9 | | | | |
| | 3 | | 1 | | 6 | | | 9 |
| 9 | | | 3 | | | | | |
| | 8 | 7 | 6 | 5 | | 2 | | |
| | 4 | | | 7 | | 5 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 7 | 1 | 4 | 9 | 2 | 5 |
| 4 | 1 | 5 | 6 | 9 | 2 | 8 | 3 | 7 |
| 9 | 2 | 7 | 8 | 3 | 5 | 6 | 4 | 1 |
| 5 | 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 7 | 2 |
| 2 | 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 8 | 9 |
| 7 | 3 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 | 4 |
| 1 | 9 | 8 | 2 | 7 | 3 | 4 | 5 | 6 |
| 6 | 5 | 2 | 4 | 8 | 1 | 7 | 9 | 3 |
| 3 | 7 | 4 | 5 | 6 | 9 | 2 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 2017 பெப்ரவரி மாத பலன்



## கடகம்

கவலைகளை வெளிக்காட்டாமல் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படும் கடக ராசிக்காரர்களே! இந்த காலகட்டத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் தனாதிபதி சூரியன் தனது ஏழாம் பார்வையால் ராசியைப் பார்க்கிறார். பாக்கியஸ்தானத்தில் சஞ்சாரம் செய்யும் செவ்வாயால் சுணங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். எதிர்பார்த்த காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். ராசிக்கு 9இல் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் வாக்கு நாணயம் உண்டாகும். முக்கிய நபர்களின் நட்பு கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். அடுத்தவரை பற்றி ஏந்த பேச்சும் பேசாமல் இருப்பது நல்லது. தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் நட்பு வீடான பாக்கியஸ்தானத்தில் சஞ்சாரம் செய்ய தொழில் ஸ்தானத்தை குரு பார்க்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பாக கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

உழைத்த உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். தொழில், வியாபாரம் பற்றிய விடயங்களில் நேரடி கவனம் தேவை. தேவையான பணம் தக்க நேரத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக எதையும் செய்வது நல்லது. வீண் அலைச்சல், வேலைப் பளு ஆகியவை இருக்கும். உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். குடும்பாதிபதி சூரியன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்க குடும்ப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை தோன்றி மறையும். ஆனாலும், குடும்பாதிபதியின் பாதசார சஞ்சாரத்தால் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். ஒரு நல்ல குறிக்கோளுக்காக புண்ணிய பயணம் செய்ய வேண்டி இருக்கும். ஆடம்பர பொருள்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். பெண்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். அடுத்தவரை பற்றி எந்த பேச்சும் பேசாமல் இருப்பது நல்லது. கலைத் துறையினர் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். மேலிடத்திலிருந்து உங்களுக்கு சந்தோசமான செய்திகள் வந்து சேரும். வெளியூர்ப் பயணம் மேற்கொள்வீர்கள். அரசியல்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருக்கும். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். வாழ்க்கையில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் உழைப்பது அவசியம். மாணவர் கள் கல்வி தொடர்பான விடயங்களில் நேரடியாக கவனம் செலுத்துவது நல்லது. பாடங்களில் சந்தேகங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்ள ஆசிரியரின் உதவி கிடைக்கும்.

**பரிகாரம்:**

சிவன் கோயிலுக்குச் சென்று சிவன், அம்பாளை நெய் தீபம் ஏற்றி வழிபடுவது மனக் குழப்பத்தை நீக்கும். தெளிவான முடிவுகள் எடுக்க உதவும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

ஞாயிறு, திங்கள், வியாழன்.

## நாளை தை-29

சனிக்கிழமை -11.02.2017
திதி: பிரதமை பி.இ.06.22
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.09.51
சுபநேரம்:03.34-05.04 வரை
ராகுகாலம்:09.34-11.04 வரை

## வரலாற்றில் இன்றைய தினம்

1997 - எடிபல நடவடிக்கை தொடர்பாக அரசு அறிவிப்பு. இதுவரை நேரடி மோதல் இல்லை.
1997 - தமிழ், முஸ்லிம் கலவரம் இறந்தோர் 10 ஆக அதிகரிப்பு.
1997 - முல்லைத்தீவுக் கடற் பிரதேசத்தில் சைப்பிரஸ் கப்பல் மீது புக்காரா தாக்குதல், அதிலிருந்த கியூபா நாட்டவர் பற்றித் தகவல் இல்லை.
1997 - போரில் மிக முக்கிய கால கட்டம். அநுராதபுரம் தேர்தல் கூட்டத்தில் சந்திரிகா தெரிவிப்பு.
1997 - தெற்கில் மேலதிக ஆசிரியர்கள் வடக்கு - கிழக்கில் பற்றாக்குறை.
2014 - வடக்கு முதல்வர் உரை, ஜனாதிபதி விசாரணை, கர்ம வினை எவரையும் விட்டு வைக்காது என்று கூறியது தொடர்பில்.
2014 - தனியார் காணிகளைச் சுவீகரிக்கமாட்டோம் யாழ்ப்பாணத்தில் கூறினார் காணியமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன்.
2014 - 58 எலும்புக் கூடுகள் மன்னாரில் இதுவரை மீட்பு.
2014 - யாழில் காணி இல்லாதோருக்கு அவற்றை வழங்க நடவடிக்கையென காணியமைச்சர் ஜனக பண்டாரக்கோன் தெரிவிப்பு. முதலில் மருதங்கேணியில்.
2014 - காணாமற்போனோர் ஆணைக்குழு அரசின் கண்துடைப்பு வேலையென மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் ஜப்பான் அதிகாரியிடம் தெரிவிப்பு.
2014 - ஏட்டிக்குப் போட்டியாக அஞ்சலி நிகழ்வுகள் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 37ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில்.
2014 - நெற்பயிர் காணியில் வீடு கட்டப்படுவதற்கு கமநல சேவை நிலையத்தின் அனுமதி தேவையெனத் தெரிவிப்பு.
2014 - ஒரிசாவில் படகு விபத்து 11 பேர் சாவு.
2014 - தகைமைகள் உள்ள போதிலும் நிரந்தர நியமனமில்லையெனத் முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர்கள் தெரிவிப்பு.
2014 - பெரும்பான்மை சமூக குடியேற்றம் புனானையில் திட்டமிட்ட நடவடிக்கையென்கிறது கூட்டமைப்புத் தெரிவிப்பு
2014 - ஜெனிவா தீர்மானத்தை முறியடிக்க ஆதரவு தேடும் இலங்கை - பல அமைச்சர்கள் வெளிநாடு பயணம்.
1258 - மங்கோலியரிடம் பக்தாத் வீழ்ச்சியுற்றது.
1355 - சென். ஸ்கொலஸ்ரிகா தின வன்முறையில் இங்கிலாந்து ஒக்ஸ்போட்டில் 63 கல்வியியலாளர் வாசிகளும் 30 வரையான உள்ளூர் வாசிகளும் இருநாள்களில் உயிரிழந்தனர்.
1870 - நியூயோர்க் நகரில் Y.M.C.A ஸ்தாபிக்கப்பட்டது.
1940 - சோவியத் யூனியன் கிழக்கு போலந்தில் குடியிருந்த போலந்து குடி மக்களை சைபீரியாவுக்கு நாடு கடத்தத் தொடங்கியது.
1954 - வியட்நாம் மீது அமெரிக்கா தலையீடு செய்வதை அமெரிக்க ஜனாதிபதி வைற் ஐசனோவர் எதிர்த்து எச்சரிக்கை செய்தார்.
1996 - ஐ.பி.எம். சுப்பர் கணினி டீப்புளு செஸ் போட்டியில் ஹாரி கஸ்பரோவை முதன் முதலாகத் தோற்கடித்தது.
2009 - செய்தித் தொடர்பாடல் செய்மதி இறிடியம் 33 உம் கொஸ்மஸ் 2251 விண் சுற்றுப் பாதையில் ஒன்றுடன் ஒன்று மோதி இரண்டும் அழிந்தன.
2013 - இந்திய அலகாபாத்தில் கும்பமேளா விழாவின் போது சனநெரிசலில் சிக்குண்டு 36பேர் உயிரிழந்ததுடன் மேலும் 39 பேர் காயமடைந்தனர்.



# கத்தரிக்காய் சம்பல்

### தேவையான பொருள்கள்

கத்தரிக்காய் - 4
தக்காளி - 2
சின்ன வெங்காயம் - ஒரு கைப்பிடி
பச்சை மிளகாய் - 2
உப்பு - தேவையான அளவு
மஞ்சள் தூள் - தேவையான அளவு
மிளகுத் தூள் - தேவையான அளவு
கடுகு - தேவையான அளவு
உளுத்தம்பருப்பு - தேவையான அளவு
கறிவேப்பிலை - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை

கத்தரிக்காய், தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாயை கழுவி, சிறிய துண்டுகளாக நறுக்கி, சிறிது தண்ணீரில் உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து வேக வைக்கவும். வெந்ததும் இறக்கி, மிக்சியில் அரைத்து கொள்ளவும்.

சட்டியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்த பின் அதில் அரைத்தக் கத்தரிக்காய் விழுதை கொட்டவும்.

கடைசியில் சிறிது மிளகுத் தூள் தூவி கொதி வந்ததும் இறக்கவும். (ஒவ்வாமை ஏற்படாமலிருக்கும்). சுவையான கத்தரிக்காய் சம்பல் தயார்.




பனம் பொருள்களால் உருவான மேசை அலங்காரப் பொருள்கள் அறிமுகமாகியுள்ளன. மட்டை பன்னாடை ஆகியவற்றை பயன்படுத்த உருவாக்கப்பட்ட இவை 450 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# கண்ணீர் பூக்கள்

08.02.2017 புதன்கிழமை இறைபதமடைந்த மண்கும்பான்

## திருமதி தங்கம்மா அப்பையா



தாய்!
தியாகத்தின் செம்மல்
அன்பின் ஒளிக்கீற்று
கருனையின் ஆழ ஊற்று
தாய்-தன்
கண்களை விளக்காக்கிறாள்
கைகளைத் தொட்டிலாக்கிறாள்
இரத்தத்தைப் பாலாக்கிறாள்
தாயின் தியாகம் அளவிட முடியாதது
வாளின் கூர்மையை விடத்
தாயின் கண்ணீருக்கே
வலிமை அதிகம்!

நன்றியை எதிர்பாராத
உலகின் முதல் ஜீவன்
இன்று நீட்டிக் கிடக்கிறது
இவ்வுலக வாழ்வை நீத்து!
பத்து மாதம் கருவில் சுமந்தும்
இற்றை வரைக்கும்
உயிரில் சுமந்தும்
கட்டிக் காத்த புனிதாத்மா
இறுதி யாத்திரை போனது.

பரிபூரண வாழ்வளித்த
புனித தெய்வம் இவள்
வாழும் போதே வணங்க வேண்டிய
இறைவி இவள்.
அன்புக்குப் பாத்திரமான அன்னையை
வெறும் தோத்திரம் பாடிக் கொண்டுபோய்
சடங்கு செய்வது மட்டும் தானா
தாய்க்காற்றும் நன்றிக்கடன்

அடிவயிற்றில் சுமந்தவளை
அடிநெஞ்சில் இருத்திப் பூசிக்க
நொடிப் பொழுதுகளல்ல நீவாழும்
நாட்களே போதாது நீ அந்த
ஆத்மாவிடம் பட்ட நன்றிக்கடன் தீர்க்க

தாய்க்கு வணக்கம் செய்ய அவள் தந்த
தாய்ப்பால் போல
சுத்தமான மனம் வேண்டும்.
கலப்படமில்லாத பரிசுத்த தேவதை தாய்!

எல்லோரும் வாழ வழிசெய்தவள்
இறுதி விடை பெறுகின்றாள்
கள்ளம் கபடமில்லாத் தாய்க்கு
உள்ளம் உருக அஞ்சலிப் போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.


**புதிய நதியா நகை மாடம்**
**73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர், உத்தியோகத்தர்கள்,**
**நகைத் தொழிலாளர்கள்,**

# மரண அறிவித்தல்

# கிட்டிணன் சிவப்பிரகாசம்

**(பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்க முன்னாள் தலைவர், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர், தீபஜோதி சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர், உரிமையாளர் புலோலி வைன்ஸ்ரோர்ஸ்)**



கூவில், புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் சிவப்பிரகாசம் நேற்று (09.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் பரிமளத்தின் பாசமிகு கணவரும் அருள்நந்தி, சிவரூபன், வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேவதி, பரீனா, கிருஸ்ணன், (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சிவபாக்கியம், இலட்சுமி மற்றும் கோபாலன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், விஜயரட்ணம், நற்குணம் மற்றும் சற்குணம், மதிவதனி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சின்னம்மா, புஷ்பமலர், மகேஸ்வரன் (குவைத்), ராங்கா (லண்டன்), லலிதா, ரோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிஷன், நிதர்ஷன், நிருபா, நிருஜா. கர்ஷா, சியாத், வறீஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மந்திகை, கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கூவில்,**
**புலோலி தெற்கு,**
**புலோலி.**

**தொடர்புகளுக்கு :**
**சிவரூபன் -076 838 3724**
**அருள்நந்தி -077 4203780**

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும், மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் பற்றியும் தற்போது கலந்துரையாடப்படுகின் றது. கடந்த ஆட்சியின்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி மாகாண சபைகள் பலவீனப்படுத்தப்பட்டன.

அரசின் கரத்தைப் பலப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் எதிரணியிலிருந்த உறுப் பினர்கள் வளைத்துப் போடப்பட்டனர். அவர் களைப் பயன்படுத்தியே மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு பொருளாதாரத்திட்டங்களை முன்னெடுக்கவும், கிராம அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள் ளது. வாழ்வின் எழுச்சி சட்டத்தின் ஊடாக அவை கொழும்பு அரசின் கீழ் கொண்டு வரப்பட்டன.

உணவு விநியோகம், கட்ட நிர்மாணம், வீதி அபிவிருத்தி, பாலம்நிர்மாணித்தல் போன்ற மாகாண சபைகளின் அதிகாரங்களும் இந்தச் சட்டத்தின் ஊடாகொழும்புஅரசின்கீழ்கொண்டுவரப்பட்டன.

அரசமைப்பு திருத்தம் குறித்து ஆராயப்படும் தற்போதைய நிலையில், மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை அவற்றிடம் மீள வழங்கும் வகையில் ஏற்பாடுகள் அவசியம் - என்றார். (வ-5)

### தேவை

அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவர்(ஆண்கள்). மாவறுத்தல், பொதியிடல், கிளாக், உதவியாளர் (பெண்கள்) தேவை. (அரைக்கும் ஆலை, ரயர் வேக்ஸ், சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றிக்குரிய பொருட்கள் விற்பனைக்கு உண்டு)

தொடர்பு: 071 518 3810

### Accounts Clerk தேவை

நல்லூரில் திருமண மண்டபம்
உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு
Accounts Clerk (பெண்) தேவை.

- A/Lவர்த்தகத்துறையில் படித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 233 5103
Soutria@gmail.com

### தவறிவிட்டது

மகாராஜா லக்ஷ்மன் என்பவருடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம், வரிப்பத்திரம் என்பனவுடன் பேஸ் ஒன்று நாவற்குழிக்கும் யாழ். நகரிலிருந்து சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு : 077 396 7250

### LORRY விற்பனைக்கு

LX - தொடரிலக்கம் உடைய
JAC அலுமினிய FULL பொடி
லொறி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 071 305 8779

### வீடு, காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில்
அமைந்துள்ள 10 பரப்புக்காணியுடன்
வீடும் விற்பனைக்கு உண்டு.
*பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
077 494 1750, 021 224 1604

### வரப்பிரசாதம்

இலங்கை முதியோர் சுகவாழ்வுக்கழகம் வழங்கும் வரப்பிரசாதம் அறுபது (60) வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும். யாழ். மாவட்டத்தில்.

தொடர்புகளுக்கு - 078 900 0069

### பராமரிப்பாளர் தேவை

உரும்பிராய் பகுதியில் வசித்து வரும்
78 வயதான முதியவரை தங்கியிருந்து
பராமரிப்பதற்கு விருப்பமுடைய
பராமரிப்பாளர் (ஆண்) தேவை. சம்பளம்
நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 953 0606

### தவறவிடப்பட்டுள்ளது

த.தனபாலசிங்கம் டிலக்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அச்சுவேலியில் இருந்து கோண்டாவில் செல்லும் வழியில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.(NIC No: 981822722V)

077 651 6698

### குறைந்த விலையில் காணிகள் விற்பனைக்கு

5பரப்பு (1பரப்பு) 12 LKS
2 பரப்பு (1பரப்பு) 8 LKS
8 பரப்பு (1பரப்பு) 7 LKS
(கோண்டாவில் சந்திக்கு அருகில்)
T.P - 076 697 2287

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 2017.02.03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடைமையாற்றும் **திரு. கயிலாயநாதன் பரமேஸ்வரன்** அவர்களின் அன்புத்தாயார்.

### திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன்

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,காங்கேசன்துறை (மல்லாகம்).**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கற்பிக்கும்
ஆசிரியர் திருமதி மரியபிறற்ரா
அருமைநாயகம் அவர்களின்
அன்புத் தாயார்




### திருமதி மேரிப்பிள்ளை வேதநாயகம்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா நித்திய இளைப்பாறிட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு நடராசா



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும், தற்போது கொட்டடி சீனிவாசகம் வீதியில் வசித்து வந்தவருமான கார்த்திகேசு நடராசா நேற்று (09.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ் சென்ற கமலாம்பிகையின் அன்புக்கணவரும் தவச்செல்வி (தெபோராள்), சசிகுமரன், கலைச்செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையும் ராஜன் (ரைற்றஸ்), சிறிகாந்தன் ஆகியோரின் மாமனாரும் இனுசன், சங்கீதா, சப்திஹா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான சீதப்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தம்பையா மற்றும் பொன்னையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு மு.ப. 10.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இ. தவச்செல்வி குடும்பம் (மகள்)**
**(முன்பள்ளி ஆசிரியர்)**

**சீனிவாசகம் வீதி,**
**கொட்டடி.**

### திருமதி விக்னேஸ்வரி வல்லிபுரம்



ஈவினை புன்னாலைகட்டுவனைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி வல்லிபுரம் நேற்று (09.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், விஷ்னுஹரனின் அன்புத் தாயும், சாரன் பிறெய்சியின் அன்புத் பேர்த்தியும், தேவ நிர்பாவின் அன்பு மாமியும், காலஞ்சென்ற அருளானந்தம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற நவரட்ணம், அரசரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், யோகராஜா, ஜெயராஜா, தேவரானி, பிரியதர்சினி, ஜீவதர்சினி, புவனேந்திரா ஆகியோரின் அன்பு சின்னம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோப்பாய் மத்தி, மானிப்பாய் வீதி இல்லத்திலிருந்து இராச வீதி, சென் மேரிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன்- விஷ்னுகரன்**
**0773706130**

**மானிப்பாய் வீதி,**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**சறோஜா சண்முகநாதன்**

31.01.2017 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தேசிய கல்வி நிறுவகத்தால் கல்விமாணிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியை

**திருமதி சறோஜா சண்முகநாதன்**

அவர்களை மனதார வாழ்த்துவ துடன் மேலும் பல பட்டங்கள் பெற வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/இளையதம்பி-இந்து வித்தியாலயம்-**
**அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர், மாணவர்கள்.**

## கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயம்

கோண்டாவில் கிழக்கு பதியில் அமைந்திருக்கும் ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களகத்தின் கீழ் 31.01.2017 அன்று HA/5/JA/1602 எனும் பதிவு இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

மேற்படி ஆலயத்தின் பெயரினை பயன்படுத்தி எவராயினும் நிதி சேகரிப்பில் ஈடுபடவோ பற்றுச்சீட்டுக்கள் அச்சிடுவதற்கோ அனுமதியில்லை ஆலயத்திற்கு நிதி அன்பளிப்பு, பொருள் அன்பளிப்பு செய்ய விரும்புபவர்கள் ஆலய பொருளாளர் திரு. ஐ. மகாலிங்கம் என்பவருடன் தொடர்பு கொள்ளமுடியும்.

தலைவர்
ப.மோகனராசா

செயலாளர்
செ. செந்தூரன்
ஆலய பரிபாலனசபை.

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் இந்துவின் பழைய மாணவரும்
எமது உதை பந்தாட்ட குழுவை வழி நடத்தி
(1949) வெற்றிக்கு வழிவகுத்துவரும்
கல்லூரியின் பரிசு நாள் நிதியத்திற்கு
பங்களிப்பு செய்தவருமான

### சின்னத்தம்பி பஞ்சலிங்கம்

அவர்களது பிரிவுச்செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டது. அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவருடன் துயர் பகிர்ந்து கொள்கின்றோம்.

**உரும்பிராய் இந்துக்கல்லூரி,**
**பழைய மாணவர் சங்கம்**
**உரும்பிராய்-கனடா-லண்டன்**

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி பஞ்சலிங்கம்

**(முன்னாள் தலைவர்,**
**உரும்பிராய் பர்வத வர்த்தனி அம்மன் கோயில்)**

07.02.2017 செவ்வாய்க்கிழமை அன்று சிவப்பேறு பெற்ற எமது முன்னாள் தலைவர் சின்னத்தம்பி பஞ்சலிங்கம் அவர்களது ஆத்மா அம்பாள் பாதங்களில் சரணடைய பிரார்த்திப்பதோடு அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருள்மிகு**
**உரும்பிராய் பர்வத வர்த்தனி அம்மன் கோயில்,**
**பரிபாலன சபையினரும்,**
**திருப்பணி சபையினரும்.**

## சபாநாயகரின்...

நாடாளுமன்றத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பதற்கான பிரேரணை மீது விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்.

சுழற்சி முறையின்கீழ் அவருக்குரிய நேரம் முடிவடைந்த பின்னர் அவைக்குத் தலைமை தாங்குவதற்காக தவிசாளர் குழாமிலுள்ள மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமிங்க சபாநாயகரின் தலைமை ஆசனத்தை நோக்கி வந்தார். அதில் அமர்வதற்காக தலைமை ஆசனத்தை பின்னால் இழுத்தார். அப்போது அது சரிந்து கீழே விழுந்து விட்டது.

அக்கிராசனம் கீழே சரிந்து விழுந்தது பற்றி கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, தலைமை ஆசனம் இப்படி இலகுவில் கீழே விழமாட்டாது. தற்போது விழுந்துவிட்டது. இது நாட்டுக்கு நல்ல சகுனம் அல்ல – என்றார்.

(வ-5)

## தொடருந்துடன்...

நேற்று கோரவிபத்து நடந்து. ஜீப்பில் பயணித்த 2 இராணுவத்தினர் உயிரிழந்தனர். தொடருந்து வருவதற்கான எச்சரிக்கைச் சமிக்ஞை ஒளிர்ந்துகொண்டிருந்தது. பாடல் ஒலிபரப்பியபடி இராணுவத்தினர் பயணித்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் அரியாலையில் தொடருந்துக் கடவையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியா மதவாச்சியைச் சேர்ந்த ஏ.எச். ஏக்கநாயக்க (வயது-26) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கண்டி வீதி மாவட்டகமவைச் சேர்ந்த ஜி.என்.புஸ்பகுமார (வயது 34) என்ற படைச் சிப்பாய் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சில மணித்தியாலங்களில் உயிரிழந்தார்.

தொடருந்து வருவதற்கான சமிக்ஞை போடப்பட்டிருந்த நிலையிலும் அதனைப் பொருட்படுத்தாது குறித்த இராணுவத்தினர் ஜீப் வண்டியுடன் ரயில் கடவையைக் கடந்து செல்ல முற்பட்ட போதே விபத்துச் சம்பவம் இடம்பெற்றது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. விபத்து இடம்பெற்றவுடன் இராணுச் சிப்பாய்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு தொடருந்து மீண்டும் யாழ்ப்பாண தொடருந்து நிலையத்துக்கு வந்தது. அங்கிருந்து படைச் சிப்பாய்கள் இருவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தொடருந்துக் கடவையைக் கடப்பதற்கான எச்சரிக்கைச் சமிக்ஞை ஒளி ஒளிர்ந்து கொண்டிருந்தபோதும் அதனைக் க்வனிக்காது இராணுவத்தினர் பயணத்தைத் தொடர்ந்துள்ளனர். தவிர, இராணுவத்தினர் பயணித்த ஜீப் வாகனத்தில் அதிக சத்தத்துடன் பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. பாடலை நிறுத்திய பின்னர்தான் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது அளவுக்கு அதிக சத்தத்துடன் பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது என்று அந்த இடத்தில் கூடியவர்களால் தெரிவிக்கப்பட்டது. விசாரணை தொடர்வதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,101,106)

## குடிதண்ணீர்...

நேற்று நடைபெற்றது. அவைத் தலைவர் அறிவிப்பின்போது, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சி.தவராசா இருவரும், வடக்கு மாகாண குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்பு அமர்வு நடத்துவதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதன் போது குறுக்கீடு செய்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றைச் சபையில் விவாதிக்க முடியாது என்றார். எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, முதலமைச் சரின் கூற்றை நிராகரித்தார். இருவருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் நடை பெற்றது.

இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், நீதிமன்றில் ஒரு விடயம் உள்ள போது இங்கே விவாதிக்கக் கூடாது என்றால், குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய எப்படி நிபுணர் குழு நியமிக்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், கடந்த வாரம் குடிதண்ணீர் தொடர்பான ஆய்வு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டு அறிக்கையையும் பெற்று சபையில் சமர்ப்பித்து அமர்வை நடத்தலாம். சபை நடவடிக்கைகளில் உயர் நீதிமன்றமே தலையிடாது என்றுள்ள நிலையில் நீதிவான் மன்றும் தலையிடாது – என்றார்.

'இந்த விடயத்தை சபையில் ஆராய்வதால் நீதிமன்று கட்டுப்படுத்தாது' என்று சட்டத்தரணியும் அமைச்சருமான பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

நீண்ட வாக்குவாதத்தின் பின்னர் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இறுதியாகக் கருத்துத் தெரிவிக்கையில், சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சபையில் இதனை விவாதிக்கலாம். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நீர் வள மாநாட்டின் அறிக்கையை முதலமைச்சர் 18 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிப்பதாகச் சொல்லியுள்ளார். இதன் பின்னர், 23 ஆம் திகதி சிறப்பு அமர்வு நடைபெறும் – என்றார்.

(வ-5-8-101)

## சுமந்திரன்...

சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுப் பணிப்புரை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே மேற்படி தகவலை அவர் வெளியிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் அவரும், ஏனைய சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் எனது கவனத்துக்கு கொண்டு வந்தனர். தற்போதிலிருந்து அவரின் பாதுகாப்பு தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்பதை சபைக்கு அறியத் தருகின்றேன் என்று சபாநாயகர் தெரிவித்தார். (வ-5)

## 13ஐத் தாண்டி

விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் ஆத ரவு கிடைக்கும் என்று வெளிநாட்டு பத்திரிகையாளருடனான சந்திப் பில் அயலுறவுத் துறை அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். இது அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா?' என்று வினவினார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பதே அரசின் முதன்மை நோக்கமாக இருக்கின்றது. அது பொது வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படும். அவரின் கருத்தை அரசு ஏற்கின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பும் பெறப்பட்டே மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்படும் – என்றார்.

மற்றுமொரு கேள்வியை எழுப்பிய விமல், புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதாக இருந்தால் அது பற்றி நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட வேண்டும். இடைக்கால அறிக்கை மீதான விவாதமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அப்படியானால் அரசமைப்புத் தயாரிப்பு பணி நிறுத்தப்பட்டுள்ளதா? அல்லது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதா?' என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் கிரியெல்ல, சில கட்சிகள் தமது யோசனைகளை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. புதிய அரசமைப்பு தொடர்பில் இன்னும் ஒரு சரத்தேனும் எழுதப்படவில்லை. கட்சிகளின் யோசனைகள் கிடைக்கப்பெற்ற பின்னர் அவை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். ஒளிந்து – மறைந்து அல்ல ஊடகங்களின் முன்னால் பகிரங்கமாகவே அரசமைப்புத் தயாரிப்பு பணிகள் இடம்பெறும். 13ஆவது திருத்தச் சட்டம் போதுமானது அல்ல, அதற்கு அப்பால் செல்ல வேண்டும் என்று மகிந்த ராஜபக்சதான் முதன்முதலில் கருத்து வெளியிட்டிருந்தார்' என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த விமல், 13 பிளஸ் என்று மகிந்த கூறியது கூட்டாட்சித் தீர்வை அல்ல. உங்கள் அரசுதான் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய கூட்டாட்சி அரசமைப்பைக் கொண்டுவர முயற்சிக்கின்றது' என்றார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் கிரியெல்ல, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்வு வழங்கப்படும். அதற்கு அப்பால் செல்ல மாட்டோம் – என்றார்.

(வ-5)

## ஸ்ரீதர் தியேட்டருக்கு...

இதுவரை செலுத்தப்படவில்லை என்றும், 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத் திலிருந்து மாதக் கட்டணம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அறிய முடிந்தது.

'முன்னைய காலகட்டங்களில் தேர் கூட்டம்போல் ஆக்கள் நின்றிருந்தார்கள்' என்று நிலுவைக் கட்டணம் செலுத்தப்படாமை தொடர்பில் வினவியதற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் செயலருமான டக்ளஸ் தேவானந்தா பதிலளித்தார்.

ஈ.பி.டி.பியின் அலுவலகமான ஸ்ரீதர் தியேட்டருக்கு 1998ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1998, 1999, 2000ஆம் ஆண்டுகளில் மின்கட்டணத் தொகையை விடக் குறைந்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையில் எந்தவொரு மின்கட்டணமும் செலுத்தப்படவில்லை. 2015ஆம் ஆண்டிலிருந்து கட்டணம் செலுத்தப்பட்டு வருகின்றது.

17 ஆண்டுகளுக்கான மின் கட்டணமாக 89 லட்சத்து 64 ஆயிரத்து 766 ரூபா 14 சதம் காணப்பட்டது. இதில் மூன்று கட்டங்களாக 4 லட்சத்து 13 ஆயிரத்து 783 ரூபா 39 சதம் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 14 சதம் இன்னமும் செலுத்தப்படவில்லை. இருப்பினும் ஸ்ரீதர் தியேட்டருக்கான மின் இணைப்பு இதுவரை துண்டிக்கப்படவில்லை.

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகத்தினருடன் இது தொடர்பில் கேட்டபோது, மேற்படி நிலுவைத் தொகையை உறுதிசெய்தனர். மின் இணைப்பு துண்டிக்கப்படாமைக்கு நேரடிப் பதில் எதனையும் அதிகாரிகள் வழங்கவில்லை. பணத்தை செலுத்த தவறினால் நீதிமன்றில் விடயம் பாரப்படுத்தப்படும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

'இது தொடர்பில் எனக்குத் தெரியாது. நான் வந்துதான் பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் தேர்க் கூட்டம் போன்று ஆக்கள் நின்றிருந்தனர்' என்று மாத்திரம் பதிலளித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

(வ-5-101)

## அலரிமாளிகைக்...

கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர்கள் வெளியேற்றினர்.

வவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டத்தின் போது, அலரிமாளிகையில் சந்திப்பு நடத்தும் உறுதிமொழி வழங்கப்பட்டு போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதற்கமைய அலரி மாளிகையில் அரசதரப்புக்கும் காணாமற்போனோரின் உறவுகளுக்கும் இடையே சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இதில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொள்வதற்குச் சென்றனர். அங்கு வந்திருந்த காணாமற்போனோரின் உறவுகளின் பிரதிநிதிகள், நாங்கள் அரசுடன் தனித்துப் பேச வேண்டும். எங்களுக்கு கூட்டமைப்பினர் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்தனர். இதனையடுத்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினர்.

கூட்டமைப்பினரை வெளியேற்றியமை தொடர்பில் சந்திப்பில் கலந்துகொண்ட காணாமற்போனோரின் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவிக்கையில், கூட்டமைப்பினர் வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அவர்கள் மீது நம்பிக்கையில்லை. எமக்குச் சட்டம் தெரியாது. அதனால் சட்டத்தரணி இரத்தினவேலை நாம் அழைத்து வந்தோம். மேலும், வவுனியாவில் உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 10 பேரும், ஏனைய மாவட்டங்களில் உள்ள காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகள் 5 பேரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர் – என்றார். (வ-5-101-21)

## காணாமற்போனோர்...

பிரதிநிதிகள் சிலர் பயன்படுத்த முயற்சிப்பதால், பல்லாயிரக்கணக்கான காணாமற்போனவர்களின் பிரச்சினையை பேசமுடியாமல் இருக்கின்றது. இதனால் சந்திப்பிலிருந்து வெளியேறுவதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போனோரின் சங்கப் பிரதிநிதிகளுக்கும், அரச தரப்பினருக்கும் இடையே அலரிமாளிகையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலிருந்து வெளியேறியமை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரச தரப்புடனான சந்திப்புக்கு கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் சட்டத்தரணி இரத்தினவேல் தலைமையில் 15 பேர் கொண்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். அரச தரப்புடன் தனியாகப் பேச்சு நடத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

காணாமற்போன பல்லாயிரக்கணக்கானோரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார். காணாமற்போனோரின் ஒரு சில பிரதிநிதிகள் சிலரின் தூண்டுதலில், அவர்களின் தனிப்பட்ட களமாக இந்தச் சந்திப்பை பயன்படுத்த முற்படுகின்றனர்.

பல்லாயிரக்கணக்கான காணாமற் போனோர் பற்றிப் பேச வேண்டிய இடத்தில் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே சந்திப்பிலிருந்து வெளியேறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்ததை ஏனைய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுமான செல்வம் அடைக்கல நாதன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகி யோர் ஏற்றுக்கொண்டு வெளியேறியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5-21)

## மக்களின்...

பிரேரணையை முன்மொழிந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வான்படையினருடன் நாங்கள் சந்திப்பு நடத்தினோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் வானூர்தி ஓடுதளம் இருந்தமையினாலேயே இந்தப் பகுதியை தாம் பிடித்து வைத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இருப்பினும் மக்களின் காணிகளை விடுவியுங்கள் என்று வான் படையினரிடம் நாங்கள் கேட்டோம். இதன்போது வனவளத் திணைக்களத்தினர் சில பகுதிகள் தமக்குச் சொந்தமானது என்று தெரிவித்தனர்.

அந்த மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாங்கள் எல்லோரும் அந்த மக்களைச் சென்று சந்திக்க வேண்டும் – என்றார்.

உறுப்பினர் து.ரவிகரனால் முன்வைக்கப்பட்ட அரச தலைவரைத் தலைசாய்க்க வலியுறுத்தும் பிரேரணை நிறைவேற்றப்படுவதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்தார். (வ-5-8)



## காகம் கரைந்தது



காலை வேளை காகம் எழுந்து
கா...கா... என்று கரைந்தது
வேலை நேரம் வந்த தென்று
விரைந்து மக்கள் எழுந்தனர்

கா.. கா... என்று அரிசிக்காகம்
கரைய மக்கள் மகிழுவர்
ஆ... கா இன்று கடிதம் வரும்
என்று மகிழ்ந்து கூவுவர்

காகம் கரைந்தால் உறவினர்கள்
வருவார் என்று நம்பியே
பாகம் செய்த உணவினோடு
காத்திருப்பார் ஆவலாய்

அண்டம் காகம் கா.. கா... என்றே
அவலமாகக் கரைந்திட
இன்று ஏதோ துக்க செய்தி
என்று கவலை கொண்டனர்

இறந்த பிராணி மனிதக் கழிவு
இவற்றை உண்டு சூழலைப்
பறந்து .. பறந்து சுத்தமாக்கும்
பழக்கம் கொண்ட காக்கையார்

சின்னக் குழந்தை கையில் உணவை
வைத்தே உண்ணும் வேளையில்
கன்னம் மீதில் கொத்தி விட்டு
திருடிச் செல்லும் காக்கையார்

மாலை வேளை வந்து விட்டால்
காக்கைக் கூட்டம் கூட்டமாய்
சோலை நோக்கி கரிய மேகம்
போலப் பறந்து செல்லுமே

## நாய்க்குட்டியும் காகமும்

ஒரு வீட்டில் நாய்க் குட்டி ஒன்று வளர்ந்து வந்தது. அது ஒரு காகத்துடன் மிகுந்த நட்பாக இருந்தது. ஒருநாள் காகம் மிகவும் கவலையுடன் இருப்பதை நாய்க் குட்டி கவனித்தது.

"என்ன காக்கையாரே? ஏன் ஒன்றும்பேசாமல் இருக்கிறீர்?" என்று கேட்டது நாய்க்குட்டி அதற்குக் காகம் "கிளி, புறா, மைனா , கோழி ஆகிய பறவைகளை எல்லாம் மனிதர் வீடுகளில் அன்பாக வளர்க்கிறார்கள்! ஏன் உன்னைப் பார் உன்னை எவ்வளவு அன்பாகக் குளிப்பாட்டுகிறார்கள். பால், மீன், இறைச்சி என்று விதம் விதமான உணவுகளைத் தருகிறார்கள். ஆனால் எம்மை மட்டும் வெறுத்து விரட்டியடிக்கிறார்கள்'' என்றது "இதற்குக் காரணம் உன் இனத்தவரிடமுள்ள தீய குணங்கள் தான். அவற்றை நீங்கள் இல்லாதொழித்தால் உங்களையும் மனிதர்கள் அன்பாக நடத்துவர். என்னைப் பார். இந்த வீட்டை நான் எவ்வளவு விசுவாசமாகக் காத்து வருகிறேன். அறிமுக மற்றவரைக் கண்டால் குரைத்து எச்சரிக்கை விடுகிறேன். நான் பெரியவனானதும் திருட வருபவர்களைத் துரத்திக் கடிக்கவும் செய்வேன் சிறுவருடன் சேர்ந்து பந்து கூட விளையாடுவேன்'' என்றது நாய்க்குட்டி. "நாமும் தான் அதிகாலையில் எழுந்து கா கா என்று கரைந்து விடியலை மனிதருக்குத் தெரிவிக்கிறோம். அவர்கள் வீசும் கழிவுகளை உண்டு சூழலைச் சுத்தப்படுத்துகிறோம். அதுமட்டுமா, பகிர்ந்துண்ணும் பண்பை மானிடர் எம்மிடமிருந்து தானே கற்றனர். அப்படியிருக்க குயில் கூவுவதையும் மயில் ஆடுவதையும் கிளி பேசுவதையும் மட்டும் ரசிக்கும் மனிதர் எங்களை மட்டும் கல்லெறிந்து விரட்டுகிறார்களே" என்று கவலையாகக் கூறியது காகம். நீங்கள் திருடுகின்றீர்கள். ஏமாற்றுகின்றீர்கள் ஒன்றும் அறியாத சின்னஞ் சிறுசுகளின் கைகளில் இருக்கும் தின் பண்டங்களைத் தட்டிப் பறிக்கிறீர்கள்! போதாதற்கு உங்களது கூரிய கால் நகங்களால் குழந்தைகளின் தலையில் குட்டியும் விடுகிறீர்கள். தின் பண்டத்தையும் பறிகொடுத்து, குட்டும் வாங்கியதால் வீறிட்டு




அழும் அந்தக் குழந்தைகளின் அழுகை ஒலி உங்களுக்கு மகிழ்ச்சியையா தருகின்றது? அந்த அழுகையை நிறுத்த பிள்ளைகளின் தாய்மார் படும்பாடு உங்களுக்குத் தெரியுமா? உங்களிடம் நல்ல குணங்கள் இருப் பினும் இந்தத் தீய குணங்களாலேயே மனிதர் உங்களை வெறுக்கிறார்கள்" என்று நாய்க் குட்டி கூறிக் கொண்டிருக்க காகம் மௌனமாக தலைகுனிந்தபடி கிளையில் உட்கார்ந்திருந்தது.

**ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்த போதிலும்**
**தீய செயல் ஒன்றினால் அத்தனை நல்ல பண்புகளும் பெறுமதியற்றுப் போகின்றன.**
***என்றும் நல்லதையே செய்வோம்.***

## ஓர் எழுத்தால் பொருள் சொல்வோம்

| | | |
|---|---|---|
| 1.அழைப்பேன் நான் | - | வா |
| 2.கொடுப்பேன் நான் | - | கை |
| 3. கேட்பேன் நான் | - | தா |
| 4.மலர்வேன் நான் | - | பூ |
| 5.பறப்பேன் நான் | - | ஈ |
| 6. சுடுவேன் நான் | - | தீ |
| 7.சுட்டுவேன் நான் | - | நீ |
| 8.வெறுப்பேன் நான் | - | சீ |
| 9.துரத்துவேன் நான் | - | போ |
| 10. உமிழ்வேன் நான் | - | தூ |
| 11.பிறப்பேன் நான் | - | [illegible] |
| 12.கவிதை நான் | - | பா |
| 13. பூங்கா நான் | - | கா |
| 14.அரசன் நான் | - | கோ |
| 15.பசுவும் நான் | - | ஆ |
| 16.குதிரை நான் | - | மா |
| 17.வாழ்வை முடித்திடு | - | சா |
| 18.புத்தகம் வைத்திட | - | பை |
| 19.நெற்றியில் பொட்டை | - | வை |
| 20.கண்களில் பூசு | - | மை |

## வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்



## சுயசரிதை

ஒருவர் அல்லது ஒரு பொருள் தன்னைப் பற்றிஆரம்பம் முதல் இறுதிவரை தானே கூறுவது சுயசரிதை.



### நான் ஒரு கிழிந்த சட்டை

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் நான் ஒரு அழகிய பட்டுச் சட்டை. என் உடம்பெல்லாம் றோசாப் பூ வண்ணம். இடையிடையே பொன் வண்ணப் பொட்டுக்கள். நகரின் ஒரு தையல் நிறுவனத்தில் நான் காட்சிப்படுத்தப்பட்டிருந்தேன். என்னைத் தன் பேர்த்திக்கு பிறந்தநாள் பரிசாகக் கொடுப்பதற்கு ஒரு பெண்மணி விரும்பி வாங்கினாள். காவியா என்ற அந்தச் சுட்டிப் பெண்ணுக்கு என்னை மிகவும் பிடித்து விட்டது. பிறந்த நாளன்று ஆலயத்துக்கு என்னை அணிந்து சென்றாள். பிறந்த நாள் மாலை வேளையில் தன் தோழிகள் எல்லோருக்கும் என்னைக் காட்டிப் பெருமைப் பட்டாள். எனக்கும் பெருமையாகத்தான் இருந்தது. பிறந்த நாள் கேக் வெட்டப்பட்டது. என்ன ஆச்சரியம்! என்னைப் போன்ற வண்ணச் சட்டை அணிந்த கேக் பொம்மை ஒன்று அந்தக் கேக்கின் உச்சியில் உட்கார்ந்திருந்தது. காவியாவுக்கு என்மேல் கொள்ளை விருப்பம். அவள் பெற்றோருடன் எந்த விழாவுக்குச் சென்றாலும் என்னையே அணிந்து செல்வாள். நானும் அவளுடன் சேர்ந்து பல அழகான இடங்களைப் பார்த்து மகிழ்வேன். காவியா இப்போது வளர்ந்துவிட்டாள். இரண்டாம் வகுப்பில் படிக்கிறாள். அவளது உயரத்துக்கு நான் இப்பொழுது கொஞ்சமும் பொருத்தமற்றவளாதலால் காவியாவின் அம்மா என்னைப் பழைய துணிகளுடன் கட்டி வைத்து விட்டார். என்னை எலிகள் குத்திக் குதறி எனது உடம்பெல்லாம் காயப்படுத்தி விட்டன. நான் இப்பொழுது எவருக்கும் பயனற்றவளாகிவிட்டேன். ஆனாலும், என் முன்னைய அழகைக் காவியாவின் ஐந்தாவது பிறந்த நாள் படங்களில் நீங்கள் அனைவரும் பார்க்கலாம். காவியாவும் அப்படங்களில் என்னை அடிக்கடி பார்ப்பதோடு என்னை அவளுக்கு அளித்த அம்மம்மாவையும் நினைவுகூருவாள்.

## கண்டது கற்போம்

கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது பழமொழி.ஆனால் இது இன்றைய சமுதாயத்தில் எந்தளவுக்குச் சாத்தியமாகும்? கண்ட கண்டவற்றையெல்லாம் கற்பவன் இன்று கெட்டு குட்டிச் சுவராகவல்லவா போய்க்கொண்டிருக்கிறான்.


அப்படியாயின் இந்தப் ப்ழமொழி உரைக்கும் உட்பொருள் என்ன? அதைத்தான் வள்ளுவர் முன்னமே
"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத்தக" என்று கூறிவிட்டார்.

கற்க வேண்டும். தெளிவாக சந்தேகமறக் கற்கவேண்டும். கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும் . பின்னர் கற்றதன் படி வாழ வேண்டும். ஒருவன் தான் கற்கத் தகுந்தது எதுவெனக் கண்டு (கண்டு +அது–கண்டது) கற்க பண்டிதனாவான் என்பதுவே உண்மைப் பொருள்.ஆதலால் நாமும் கற்க வேண்டியவை எவையெனக் கண்டு கற்போம்.நாம் கற்க வேண்டியவை எவை என எமக்கு வழிகாட்டுவோர்:

ஆரம்பத்தில் – நல்ல ஆசியர்கள் , பெற்றோர்
பின்னர் – நல்ல நூல்கள், நல்ல நண்பர்கள், சான்றோர்கள், அறிஞர்கள்.

## இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், பெப். 10
வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் சு.ஜெயானந்தகுமார் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி கலந்து கொள்வார். (ம-108)





# கரவெட்டி வளர்மதியின் கரப்பந்தாட்டம் ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 10
கரவெட்டி வளர்மதி விளையாட்டு கழகம் நடத்திய மு.செல்லத்தம்பி ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியனானது.

வளர்மதியின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது செற்றைக் கைப்பற்றியது இந்து இளைஞர் அணி. இரண்டாவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது ஆவரங்கால் மத்தி.

சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:11, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் அடுத்த இரு செற்களைக் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-422-108-23)



மன்னார் மாவட்ட மாணவிகள் மூவர், இன்னும் சில தினங்களில் பங்களாதேஷில் நடைபெறவுள்ள றோல் போல் உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பிடித்தனர். தேசிய அணிக்குத் தெரிவான மாணவிகளைப் பாராட்டி, வடமாகாண போக்குவரத்து மீன்பிடி, வர்த்தக வாணிப அமைச்சர் டெனீஸ்வரன் துவிச்சக்கர வண்டிகளை நேற்றுமுன்தினம் வழங்கினார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 10

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் பி அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. துடுப்பாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் ரி-20 தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிறண்ட்ஸ் பி அணியை எதிர்த்து கலைமகள் அணி மோதவுள்ளது. பி.ப 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட தாரகை பி அணியை எதிர்த்து வானவில் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம் வவுனியா லீக்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றுவந்தன. இறுதியாட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில், ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்ஹிஜிரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விளையாட்டு மற்றும் உடல் நல மேம்பாட்டு தேசிய வாரத்தை முன்னிட்டு உடுவில் பிர தேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இரு பாலாருக்குமான தாச்சித் தொடர் சுன்னாகம் கண்ணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.
(ம-23-108-422)

## மரண அறிவித்தல்கள்

### துரைச்சாமி குணசேகரம் (ஆச்சாரியார்)



பிறப்பு 01.11.1957 இறப்பு 08.02.2017

இல.150, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தோணிக்கல், சிவன் கோயில் வீதி, இல.61ஜ வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி குணசேகரம் 08.02.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி (பத்தர்) மற்றும் அம்புஜம் தம்பதிகளின் புத்திரனும், பரமசிவம்-பத்மாவதி தம்பதியரின் மருமகனும், கிருஷ்ணவேணியின் அன்புக் கணவரும் சாணுகா, துதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜா, சுலோசனா, நாகராணி, அனுசியா, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (சந்திரன்), மரக்காலை காலஞ் சென்ற நாகராசா சண்முகநாதன் ஆச்சாரியார் மற்றும் முத்துராமன், நடராஜன், உதயலக்சுமி, ஞானபவிதா, ஜெகன், இனுஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2017 வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணி அளவில் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மைத்துனர்
ம.பாலச்சந்திரன்
(சந்திரவதனி மரக்காலை)

தொடர்புகளுக்கு:
0777480314 (j/9516) (10,19)

### ஆசிர்வாதம் லூட்கமிலஸ்



பிறப்பு 07.01.1969 இறப்பு 08.02.2017

சென்ஜேம்ஸ் இளவாலை வடக்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசிர்வாதம் லூட்கமிலஸ் (படவரைஞர் - Expo Properties, Pvt - Colombo) 08.02.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிர்வாதம்- சுவானப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம்- முத்தம்மா தம்பதியினரின் மருமகனும், மாலினியின் அன்புக் கணவரும் இளேரியஸ், மல்சிகா, யான் நிக்லஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சான்பெனட், லூட் அல்வின் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை புனித மிக்கேல் ஆலயத்தில் இன்று (10.02.2017) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்

# சிறிமுருகன் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 10
யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம்.

யங்கம்பன்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மல்லாகம் சிறி முருகன் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய சிறி முருகன் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக வரன் 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஞானம்ஸ் அணி சார்பாக முருகதாஸ் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

54 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களையே பெற்றது. 9 ஓட்டங்களால் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சிறிமுருகன். (ம-108)



# பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் வாய்ப்புப் போதாது அணித் தலைவர் ரகிம் குற்றச்சாட்டு முன்வைப்பு

பங்களாதேஷ் அணிக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபையால், வழங்கப்படும் டெஸ்ட் வாய்ப்புக்கள் போதாது என்று அந்த அணியின் தலைவர் ரகிம் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்தியாவுக்கு எதிராக நேற்று டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்கியது பங்களாதேஷ். இந்த ஆட்டத்துக்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டினார் ரகிம்.

நான் 11 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடி வருகிறேன். எங்களுக்கு அதிக அளவில் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட வாய்ப்புக் கிடைப்பது இல்லை. ஓர் ஆண்டில் எப்போதாவது ஒரு முறைதான் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுகிறோம். எங்களுக்குச் சரியான டெஸ்ட் வாய்ப்புக் கிடைக்காத நிலையில் எங்களது ஆட்டம் சரியானதாக இல்லை என்று விமர்சிப்பது நியாயமற்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆட்டத்தில் தொடர்ந்து விளையாடினால்தான் நிறைய விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

எமக்கான டெஸ்ட் வாய்ப்புக்கள் அதிகரிக்கப் பட வேண்டும் என்று ரகிம் மேலும் தெரிவித்தார். (ம)



## இறுதி இன்று

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்காவே வெற்றிபெற்றது. எனவே அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதி.

இன்றைய ஆட்டம் கிண்ணத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக அமையப்போவதில்லை. ஆயினும், பன்னாட்டுத் தரப்படுத்தலை தீர்மானிக்கவல்ல ஆட்டமாக உள்ளது.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப் படுத்தலில், ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் தலா 118 புள்ளிகளுடன் உள்ளன. எனினும் சராசரியின் அடிப்படையில் ஆஸ்திரேலியா, முதலிடத்தில் உள்ளது.

இன்றைய ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா வென்றால் அந்த அணி தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடிக்கும்.

கடந்த ஆட்டத்தில் அணித்தலைவர் தரங்க சதம் விளாசியிருந்தார். இதனால் தனிநபர் பெறுபேறுகள் என்ற வகையில் அவர் மட்டிலும் பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. (ம)

## தலைவராக தரங்க; அணியில் மலிங்க

ஆஸ்திரேலிய ரி-20 தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. மலிங்க அணிக்குத் திரும்பினார். காயம் காரணமாக அணித்தலைவர் மத்தியூஸ் விலகியதால் தரங்க தலைவராக நியமிக்கப்பட்டார்.

மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளது. இந்த மாதம் 17 ஆம், 19 ஆம், 22 ஆம் திகதிகளில் இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்கான அணித் தெரிவு நேற்று இடம்பெற்றது. மத்தியூஸ் இந்தத் தொடரில் இருந்து விலகியதால் அணித்தலைவர் பொறுப்பு சந்திமல், தரங்க இருவரில் எவருக்குச் செல்லும் என்ற எதிர்பார்ப்பு மிகையாக இருந்தது. தரங்க தலைவராக நியமிக்கப்பட்டார்.

காயம் காரணமாகவும் அதன் பின்னரான சுகவீனங்களாலும் கடந்த ஒன்றரை வருடங்களாக அணிக்குத் திரும்பாமல் இருந்த மலிங்க மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார்.

இலங்கை அணி விவரம் - உப்புல் தரங்க (அணித் தலைவர்), நிரோசன் டிக்வெல்ல, அசல குணரத்ன, டில்சான் முணவீர, குசல் மெண்டிஸ், மிலிந்த சிறிவர்தன, சச்சித் பத்திரண, சாமர கப்புக்கெதர, சீக்குகே பிரசன்னா, நுவான் குலசேகர, இசுறு உதான, தசுன் சானக்க, லக்சான் சண்டகன், லசித் மலிங்க, விக்கும் சண்ஜய. (ம)



## சதங்களில் அசத்துகிறார் முரளி விஜய்

இந்திய அணியின் ஆரம்ப வீரரான முரளி விஜய், நடைபெற்றுவரும் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் சதம் விளாசினார். இதன் மூலம் அதிக சதம் விளாசிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறினார். நேற்றைய சதம் முரளி விஜய்யின் 8ஆவது சதமாகும். இந்த வரிசையில் 33 சதங்களுடன் கவாஸ்கர் முதலிடத்திலும் 22 சதங்களுடன் சேவாக் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். இவர்கள் இருவரும் ஓய்வு பெற்ற வீரர்கள். எனவே தற்போது விளையாடி வரும் இந்திய வீரர்களின் வரிசையில் முரளி விஜய் முதலாவது இடத்தில் உள்ளார். (ம)

## ஐ.பி.எல். தொடரில் ஆப்கானின் செசாட்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் பெங்களூரில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், ஆப்கானிஸ்தான் வீரர் அஹமட் செசாட், நிச்சயம் ஓர் அணியால் வாங்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

750 வீரர்கள் ஏலத்தில் உள்ளனர். 79 வீரர்கள் வாங்கப்படுவார்கள். ஆப்கானிஸ்தானின் அதிரடி வீரர் செசாட் பலரினதும் கவனத்தை ஈர்த்தவராக உள்ளார். ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் 222 ஓட்டங்களைக் குவித்திருந்தார். செசாட்டைத் தவிர, ஆப்கானிஸ்தான் வீரர்களான நபி, ரசிட் கான், சர்டான், நஜீப் ஆகியோரும் ஐ.பி.எல். ஏலப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். (ம)



## வடதாரகை அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 10

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ராரின் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வடதாரகை அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இந்த ஆட்டத்தில், அல் இக்பால் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வடதாரகை அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## யங்ஸ்ரார், வின் சம்பியனாகின

யாழ்ப்பாணம், பெப். 10

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் ஒலுமடு யங்ஸ்ரார் அணியும் பெண்கள் பிரிவில் வின் அணியும் சம்பியனாகின.

நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஒலுமடு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடுங்கேணி தெற்கு மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஒலுமடு யங்ஸ்ரார் அணி 24:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வின் அணியை எதிர்த்து நெடுங்கேணி தெற்கு மத்திய அணி மோதியது. இதில் வின் அணி 27:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## விடுதலைப் பெருவிழா

கவலை, கண்ணீர், தீராவியாதி, பில்லி சூனியக்கட்டு, பிசாசின் பிடி, கடன் பிரச்சனை யாவற்றிலிருந்து

இயேசு விடுதலை கொடுக்கிறார்

இடம் :- நாற்சதுர சுவிசேஷ சபை வளாகம்
இல 373, பருத்தித்துறை வீதி, (முத்திரை சந்தி) நல்லூர், யாழ்ப்பாணம்
காலம் :- 11-02-2017 சனி
நேரம் :- மாலை 4 மணி

பிரவேசம் இலவசம்

"வாருங்கள் விடுதலை பெறுங்கள்"

# தலைமையில் இருந்து அசார் அலி விலகல்

பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவரான அசார் அலி, தலைமைப் பதவியில் இருந்து நேற்று விலகினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டின் டெஸ்ட் அணிக்கு மிஸ்பாவும், ஒருநாள் அணிக்கு அசார் அலியும், ரி-20 அணிக்கு சர்பிராஸ் அகமட்டும் தலை வர்களாக உள்ளனர். ரி-20 ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய போதிலும் ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் அந்த அணியின் செயற்பாடு சிறப்பாக அமையவில்லை.



டெஸ்ட் ஆட்டங்களின் தலைவரான மிஸ்பா, விரைவில் பதவியில் இருந்து விலகும் அறிகுறியை வெளிப்படுத்தியுள்ளார். இதனால், அசார் அலியும் தலைமைத்துவத்தில் இருந்து விலகி அகமட் மூன்று விதமான ஆட்டங்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று பல தரப்பாலும் அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டன. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் அவ்வாறான ஒரு நிலைப்பாட்டையே பரிசீலித்து வந்தது. இந்த நிலையில் அசார் அலி, தானாக முன்வந்து பதவி விலகினார்.(8)

## யப்பான் சைக்கிள் மலிவு விற்பனைக்கு

Original Japan Ladies & Gents சைக்கிள்கள் மலிவு விற்பனைக்கு உண்டு. விலை 6750/=

கொட்டடி லைடன் சந்தி, யாழ்ப்பாணம்.
0777905333

## நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்

கடுவல, கடவத்த, நாராஹேன்பிடிய, பியகம, நிட்டம்புவ

பிரசித்திப் பெற்ற தொழிற்சாலைகளின் லேபல், பொதியிடல், உற்பத்தி, வகைப்படுத்தல போன்ற பிரிவுகளுக்கு வெற்றிடங்கள்.
மாதாந்தம் 18000 35000 வரை சம்பாதிக்கலாம்
உணவு தங்குமிடம் வழங்கப்படும்

18-55

0775561880 / 0774805891

## மலிவு விற்பனை

4 பேர் தனித்தனியாக அமர்ந்து Computer இல் வேலைசெய்யக் கூடிய தம்புரோவின் நவீன அலுவலகத் தளபாடமும், A/C யின் வெளியிணைப்பு இயந்திரங்கள் இரண்டும் விற்பனைக்குண்டு.

071 531 5500

## வேலை வாய்ப்பு

- முகாமையாளர்
- கணனி டிசைனிங், டைப்பிங் தமிழ், ஆங்கிலம்
- சுத்திகரிப்பாளர்
- புத்தகம் கட்டுநர் (அனுபவம் உடையோர்)
- போட்டோ பிரதியாக்கம்
- உதவியாளர்கள் (ஆர்வமுடையோர்)

சுயவிபரத்துடன் நேரில் வரவும்
காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை
திறமைக்கு ஏற்ப ஊதியம்

11 12 13 14 திகதி

யாழின் இன்றைய முன்னோடிப் பதிப்பகம்
கொழும்பு பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் வீதி, 077 1974875

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்-11.02.2017

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன்) காலை 8-10 காலை 10-12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய், வியாழன்) காலை 8-10 காலை 10-12

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**தங்கம்மா அப்பையா**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீளாத் துயருடன்
சிறி மதனா நகை மாளிகை
மதனா ஜுவல்லறி
உரிமையாளர்,
ஊழியர்கள்.

(J/7990)(10.17.19)

இயக்கச்சியில்...
உறுதியுடன்

காணி விற்பனைக்கு

# கற்பகவனம்

1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள் A9 இல் இருந்து 1km தூரத்தில்

5 லட்சம் செலுத்தி காணியினை சொந்தமாக்குங்கள்
மிகுதியை 5 வருட மாதாந்த தவணையில் செலுத்தலாம்

வங்கிக் கடன் வசதி

### 1 ஏக்கர் – 16 பரப்பு

- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜூ மரம்
- 10 - 15 மாமரம்
- 01 குழாய்க்கிணறு
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்



### 2 ஏக்கர் – 32 பரப்பு

- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜூ மரம்
- 20 - 30 மாமரம்
- 01 குழாய்க்கிணறு
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

- 15 அடி அகல பாதை
- **5 வருட பராமரிப்பு**
- 24 மணிநேர பாதுகாப்பு
- துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- மாதாந்த பராமரிப்பு அறிக்கை
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்

- பொது விடுதி
- உணவகம்
- உடற்பயிற்சிக்கூடம்
- நீச்சல் தடாகம்
- விளையாட்டுத்திடல்
- நடைபயிற்சிக்கான பாதை
- மீன்பிடி குளம்
- முந்திரிகை தோட்டம்
- மூலிகைத் தோட்டம்

மேலதிக பெறுமதிசேர் சேவைகள் (கட்டணங்களிற்கு உட்பட்டது)

- இயற்கை விவசாயம்
- மின்சார வசதி
- தண்ணீர்த்தாங்கி
- ஓய்வுக் கொட்டில்
- நீண்டகால நீர்விநியோக அமைப்பு
- மரக்கறித்தோட்டம்
- உள்ளக பூந்தோட்டம்
- பாதுகாப்பு கமரா (இணைய இணைப்புடன்)
- 5 வருடங்களிற்கு பின்னரான பராமரிப்பு



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.